# புதிய ஜனநாயகம்







# கோலம் மாறினாலும் கொள்கை மாறாது!

www.padippakam.com

## ★தேர்தல் புறக்கணிப்பு
## ★இறால் பண்ணை அழிப்பு

# தில்லைவிளாக மக்களின் போர்க்கோலம்

திருவாரூர் மாவட்டம் - திருத்துறைப்பூண்டி வட்டத்தைச் சேர்ந்த தில்லை விளாகம், இயற்கை எழில் கொஞ்சும் கடலோர கிராமம். இன்று இந்த கிராமம், போர்க்களம் போல மாறிநிற்கிறது.

கடந்த நாடாளுமன்றத் தேர்தலுக்கு நான்கு நாட்களுக்கு முன்னதாக இக்கிராம மக்கள் அனைவரும் ஓரணியாய் திரண்டு இந்த வட்டாரத்தையே நாசமாக்கிவரும் இறால் பண்ணைகளை அழிக்க வீரம்செறிந்த போராட்டத்தில் இறங்கினர். சாதி - மத பேதமின்றி தமது வாழ்வுரிமைக்காகத் திரண்ட இம்மக்கள், இத்தேர்தலைப் புறக்கணிப்பதாக பிரசுரம் வெளியிட்டு பகிரங்கமாக அறிவித்தனர். கம்பு, கத்தி, அரிவாள், தடிகளுடன் வெகுண்டெழுந்து சில இறால் பண்ணைகளைத் தாக்கி அழித்தனர். இப் பண்ணைகள் நடுவே இறால் குஞ்சுகளுக்கான தீனி, மருந்துப் பொருட்கள் வைக்கப்பட்டிருந்த கொட்டகைகளைப் பிய்த்தெறிந்தனர். தகவலறிந்து ஓடிவந்த போலீசார், போராடும் மக்களை நோக்கி துப்பாக்கியை நீட்டி அச்சுறுத்திய போதிலும், ''தைரியமிருந்தால்சுடு! எங்கள் உயிரே போனாலும் போராட்டத்திலிருந்து பின்வாங்க மாட்டோம்!'' என்று இளைஞர்கள் தமது நெஞ்சைத் திறந்துகாட்டி உறுதியாக நின்றனர். மக்களின் ஒன்றுபட்ட போராட்டத்தின் வீச்சைக் கண்டு பின்வாங்கிய போலீசார், பின்னர் பெரும்படையாக வந்து 72 பேரைக்கைதுசெய்துசிறையில் அடைத்துள்ளதோடு, மேலும் 55 பேர் மீது வழக்கு பதிவு செய்து இரவு பகலாக இக் கிராமத்தில் தேடுதல் வேட்டையை நடத்தி வருகின்றனர்.


தில்லை விளாகத்தில் 2000 மீனவக் குடும்பங்களும் 3000-க்கும் மேற்பட்ட விவசாயக் குடும்பங்களும் உள்ளன. பாரம்பரியமான விவசாயமும் மீன்பிடித் தொழிலையும்செய்து வந்தஇக்கிராமத்தில், கடந்த பத்தாண்டுகளில் இறால் பண்ணைகளும், இரசாயன உப்பு தயாரிக்கும் ஆலைகளும் நுழைந்தன. தனியார்மய - தாராளமயமாக்கலின் சாதனைகளாக இவை சித்தரிக்கப்பட்டன.

ஆனால் இப்பகுதியில், இராசயன உப்பளங்களாலும் இறால் பண்ணைகளாலும் நச்சுக்கழிவுகள் பாய்ந்து சுமார் 350 ஏக்கர் பரப்பளவுக்கு விளைநிலங்கள் உவராக மாறி கடந்த ஐந்தாண்டுகளாக தரிசாகக் கிடக்கின்றன. மேலும், நச்சு ரசாயன காற்று வீசுவதால், நூற்றுக்கணக்கான பனை மரங்கள் இடிவிழுந்த மரம் போல கருகி நிற்கின்றன. குழந்தைகள் முதல் பெரியவர்கள் வரை அனைவருக்கும் தோல் அரிப்பு முதலான நோய்கள் பெருகியுள்ளதோடு, குளம் - குட்டைகள் பாதிப்பும் குடிநீர் பாதிப்பும் அதிகரித்துள்ளது. மாவட்ட ஆட்சியரின் 15.3.03 தேதியிட்ட 29133/99 C.I. என்ற உத்தரவுப்படி, இரசாயன உப்பு ஆலை உற்பத்தியை நிறுத்தச் சொன்ன ஆணையும் செயல்படுத்தப்படாமல் கிடப்பில் போடப்பட்டுள்ளது. தேவர் சாதி செல்வாக்குடன் உலாவும் உள்ளூர் ரவுடி ராசேந்திரனின் ஆதரவோடு இரசாயன உப்புத் தொழில் தொடர்ந்து நடந்து வருகிறது. புதிய உப்பளங்களை அமைப்பதும்பெருகிவருகிறது.

இரசாயன உப்பளங்களுக்குப் போட்டியாக, கொடிய பாதிப்புகளை ஏற்படுத்தும் இறால் பண்ணைகளும் இப்பகுதியில் பெருகி வருகின்றன. முனங்காடு, தொண்டியக்காடு, செம்மங்காடு, பிச்சையன்காடு, ஆலங்காடு, காரத்திடல் முதலான பல கிராமங்களில் 2000க்கும் மேற்பட்ட மீனவர்கள் இன்று வாழ்விழந்து நிற்கின்றனர். இறால் பண்ணைகளின் கழிவுநீர் கடலில்கலக்கப்படுவதால், கடலில்மீன்கள் ஒதுங்குதில்லை. அலையாத்திக் காடுகளும் ஏராளமான சதுப்பு நிலங்களும் இறால் பண்ணை முதலாளிகளால் அழிக்கப்பட்டு வருவதால், நில அரிப்பும் வெள்ள அபாயமும் பெருகியுள்ளது. இறால் பண்ணைகளால் விவசாய நிலங்களின் வடிகால்கள் தடைபடுவதால் இலட்சக்கணக்கான ஏக்கர் விளைநிலங்கள் சற்று கனமான மழை பெய்தாலே வெள்ளத்தில் மூழ்கி பயிர்கள்நாசமாகும் அபாயத்தில் உள்ளது.

மேலும், இப்பகுதியில் ஏராளமாக உள்ள நாட்டுப் படகு, விசைப்படகுகளை கடலுக்குச் சென்று மீன் பிடிக்க விடாமல் தடுத்து, இறால் பண்ணை முதலாளிகள் ரவுடித்தனங்களில் ஈடுபட்டு வருகின்றனர். குறிப்பாக, இறால் பண்ணை கொட்டகைகளில் வெறிநாய்களை வளர்த்து கடலுக்கு வரும் மீனவர்களையும், மேய்ச்சலுக்கு வரும் ஆடு - மாடுகளையும் விவசாயிகளையும் கடிக்க ஏவி விடுகின்றனர். படகுகள் ''லகூனு''க்குச் செல்லும் பாதையை அடைத்து தகராறு செய்கின்றனர். எந்நேரமும் ராட்சத புல்டோசர்களை அங்குமிங்குமாக அலைய விட்டு அச்சுறுத்தி விரட்டுகின்றனர். ரவுடி ராசேந்திரன் மூலம், மீனவர்கள்சிலருக்கு கொலை மிரட்டல்களும் விடுத்துள்ளனர். பிச்சையன் காட்டில் மீனவர் குடிசைகளைப் பிய்த்தெறிய முயற்சித்தது, மீனவர்வீரையனின் வலையைப் பிடுங்கிக் கொண்டு அடித்து விரட்டியது, 2 நாட்டுப்படகு - விசைப்படகுகளைத் தீயிட்டுக் கொளுத்தியது என்று அட்டூழியங்களில் ஈடுபட்ட இக்கும்பல், அண்மையில் மீனவர் கணேசனின் TJS 1707 CV என்ற எண்ணுள்ள படகையும் தீயிட்டுக் கொளுத்தியுள்ளது. இந்த

**மக்களின் பேரெழுச்சி:**
**பிய்த்தெறியப்படும் இறால் பண்ணை கொட்டகைகள்.**




தொடர்ச்சி 27-ஆம் பக்கம்
படிப்பகம்

# புதிய ஜனநாயகம்

*மார்க்சிய — லெனினிய அரசியல் ஏடு*

**தொகுதி: 19**

**இதழ் 8**

**ஜூன் 2004**

**உள்நாடு:**
**தனி இதழ்: ரூ. 5.00**
**ஆண்டு சந்தா: ரூ. 60.00**

**வெளிநாடுகள்**
**(வான் அஞ்சலில்)**
**ஆண்டு சந்தா: US$ 10**

**படைப்புகள் அனுப்பவும் மற்றும் அனைத்துத் தொடர்புக்கும்**

**புதிய ஜனநாயகம்,**
**110, இரண்டாம் தளம்,**
**63, என்.எஸ்.கே. சாலை,**
**(அ.பெ.எண்: 2355)**
**கோடம்பாக்கம்,**
**சென்னை-600 024.**


# இந்திய இராணுவத்தின் கொலைக்கணக்கிலும் ஒரு புரட்டு!

எந்தவொரு நாட்டிலும், தேசபக்தியின் அடையாளமாகக் காட்டப்படுவது இராணுவம். அதன் நேர்மையும், கட்டுப்பாடும், ஒழுக்கமும் கேள்விக்கு இடமற்றது என்று குடிமக்களுக்குப் போதிக்கப்படுகிறது. ஆனால், இந்திய இராணுவம், போலீசு, அதிகாரவர்க்கம் ஆகியவற்றைக் கேள்விமுறையின்றி துதிபாடும் பார்ப்பன - பாசிச பயங்கரவாதிகளே நியாயப்படுத்த முடியாத குற்றங்களை இந்திய இராணுவமும் துணை இராணுவமும் செய்திருப்பதாகச் செய்திகள் வெளியாகி இருக்கின்றன.

சியாசின் என்பது இந்தியா - பாகிஸ்தான் எல்லையில் உள்ள மனித நடமாட்டமே இல்லாத புல்பூண்டு கூட முளைக்காத பனிப்பாறைப் பிரதேசம். அங்கே ஏறக்குறைய 20 ஆண்டுகளாக இரு நாடுகளுக்கிடையே தாழ்நிலைப் போர் நடந்து வருகிறது. இதற்காக இரு நாடுகளும் ஆண்டுக்குப் பல ஆயிரம் கோடி ரூபாய் செலவழிக்கின்றன. இந்த எல்லையைப் பாதுகாப்பதற்காகவும் தாழ்நிலைப் போரில் ஈடுபடுவதற்காகவும் சுழற்சிமுறையில் குறிப்பிட்ட காலத்திற்கு இராணுவத்தின் வெவ்வேறு பிரிவினர் அனுப்பப்படுகின்றனர். இந்தப் பணிக்காக இராணுவத்தினருக்குப் பல்வேறு சிறப்புச் சலுகைகள் வழங்கப்பட்டிருக்கின்றன. தாழ்நிலைப் போரில் உயிரிழக்கும், காயப்படும் இராணுவத்தினருக்கு வழக்கமான சன்மானங்களோடு தனிச் சிறப்பான சலுகைகளும் தரப்படுகின்றன. அது மட்டுமல்ல; எதிரிப் படையினரைக் கொல்வது, பதுங்கு குழிகளை அழிப்பது, ஆயுதங்களைக் கைப்பற்றுவது போன்றவற்றுக்காக சிறப்பு விருதுகளும், சன்மானங்களும் வழங்கப்படுகின்றன.

கடந்த 2003, ஜூலை - நவம்பர் மாதங்களில், சியாசின் பனிப்பாறைப் பிரதேச எல்லைப் பாதுகாப்புப் பொறுப்பேற்றிருந்தது. எண் 5 கூர்க்கா துப்பாக்கிப் படைப்பிரிவின் ஐந்தாவது அணிவரிசையினர். இதன் தலைமைப் பொறுப்பிலிருந்தவர் மேஜர் சுரீந்தர் சிங். இவர் தற்போது இந்திய இராணுவ விசாரணை நீதிமன்றத்தின் முன்பு ஒரு ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்திருக்கிறார். அதன்படி, சியாசின் தாழ்நிலைப் போரில் கொல்லப்பட்ட பாகிஸ்தானி இராணுவத்தினரின் எண்ணிக்கையைச் சுட்டிக் காட்டி விருதுகளும், சன்மானங்களும், பதவி உயர்வுகளையும் பெறுவதற்காக பொய்யான சமிக்ஞைகள் மற்றும் ஒளிப்பட (வீடியோ) ஆதாரங்களை உருவாக்கியதாக ஒப்புக் கொண்டிருக்கிறார். பாகிஸ்தானி இராணுவ உடுப்புகளைப் போட்டுக் கொண்டு சண்டையில் கொல்லப்பட்டவர்களைப்போலவும் பாகிஸ்தானிய பதுங்கு குழிகளை நோக்கி ஏவுகணைகளை சுட்டதாகவும் நடிக்கும்படியும் இந்திய இராணுவத்தினருக்கு இவரே உத்திரவிட்டிருக்கிறார். கடந்த ஆண்டு கொல்லப்பட்டதாகக் கூறிக் கொள்ளும் 52 பாகிஸ்தான் சிப்பாய்களில் சுமார் 16 பேர் இப்படி பொய்கணக்கில் வந்தவர்கள்.

ராக்கட் ஏவுகணை சுடும்போது, எதிர் சக்தியால் பறந்து வந்த ஒரு கல் தாக்கி மேஜர் சுரீந்தர் சிங் மீது பட்டு சிறுகாயம் ஏற்பட்டது. அதையே ஆதாரமாகக் காட்டி, பாகிஸ்தான் பதுங்கு குழியை ஏவுகணை வீசி அழித்ததாகக் கூற அவருக்கு பரமவீர சக்கர விருதுக்கு சிபாரிசு வழங்கியுள்ளார், மேலதிகாரி சுர்ணல் கே.டி. சிங். உண்மை தெரிய வந்து பிரிகேடியர் பேடி விசாரணை செய்தபோது கீழதிகாரிகளின் மீது பழிபோட்டுவிட்டு, சுரீந்தரை இடமாற்றம் செய்துவிடவும், முந்திய சாட்சிகளான இரண்டு சிப்பாய்களைப் பதவி நீக்கம் செய்யவும் முயன்றிருக்கிறார்கள். கர்னல் கே.டி. சிங் சட்ட விரோதமாக நான்கரை இலட்சம் ரூபாய் அளவு சிப்பாய்களிடம் வசூலித்திருக்கிறார் என்ற புதுக் குற்றச்சாட்டும் வெளிவந்திருக்கிறது மேஜர் சுரீந்தருக்கு இராணுவ இரகசியங்களை வழங்கி உதவியதாக மேஜர் மோதித் வர்மா மீதும் விசாரணை நடக்கிறது. சான்றாதாரங்களும் குற்றப் பத்திரிகை தயாரிக்கவும் பல மாதங்களாகும். தனக்கு அநீதி இழைக்கப்படுவதாக பஞ்சாப் உயர்நீதி மன்றத்தில் வழக்குப் போட்டுள்ளார் சுரீந்தர். அவரது முறையீட்டை ஏற்று வடக்கு பிராந்திய இராணுவத்துக்கு வெளியே, வெளிப்படையான விசாரணைக்கு உறுதி அளிக்கப்பட்டிருக்கிறது. இதற்கிடையே சந்தேகத்திற்குரிய இராணுவ நடவடிக்கைகளில் ஈடுபட்டு விருது பெற்றவர்கள் மேலும் பலர் இருக்கலாம் என்பதால், அதற்குரிய கோப்புகள் மறுபரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படுகின்றன.

அப்படிப் பார்க்கப்போனால், ஜம்மு - காசுமீரில் இராணுவமும் பல்வேறு மோசடிகளில் ஈடுபட்டிருக்கின்றன. இப்படிப்பட்ட "பொய்யான கொலை"களுக்கு அங்கே "தாளிப்பு" என்று பெயரிடப்பட்ட பலரும் அறிய நடப்பது வழக்கம்தான் என்று செய்திகள் கூறுகின்றன. அங்கே பயங்கரவாதிகளை எதிர்த்த போரில் இராணுவம் சாதனை புரிவதாகக் காட்டிக் கொள்வதாக பல நூறு பொய்யான மோதல் சாவுக் கணக்குக் காட்டப்படுகின்றன; இதையெல்லாம் சோதித்தறிய ஏற்பாடுகள் கிடையாது; மேலும் பயங்கரவாதிகளின் தாக்குதலுக்குப் பதிலடி தருவதாகவும், தீவிரவாதிகளைப் பிடித்து ஒழித்துக் கட்டிவிட்டதாகவும் கணக்கு காட்ட பல சாதாரண சிவிலியன் இளைஞர்களைப் பிடித்துக் கொல்கிறார்கள். சிவிலியன் மக்களைப் பிடித்துக் கொண்டு போய் மனிதக் கவசங்களாக முன்னிறுத்தி சண்டை போடுகிறார்கள். பழிவாங்கும் வெறியோடு கும்பல் பாலியல் வன்முறைகள்

நடத்துகின்றனர். குஜராத்தில் அகமதா பாத் அக்சர்தம் கோவில் படுகொலைக் குக் காரணமானவர்கள் என்று மாநிலப் போலீசார்சிலரைப் பிடித்துப் பொடாவில் அடைத்திருக்கும் அதேசமயம், அதே குற் றத்துக்குரியவர்கள் என்று வேறு சிலரை காசுமீரில் இராணுவம் கைது செய் துள்ளது. பாகிஸ்தானிய இராணுவ உடுப் புகளைப் போட்டுக் கொண்டு காசுமீர் கிராமங்களில் புகுந்து கண்மண் பாராமல் சிவிலியன்களை சுட்டுக் கொல்வதும் நடக்கிறது.

இராணுவம், துணை - இராணுவம் மட்டுமல்ல, இந்திய உளவுத்துறை கூட இப்படிப்பட்ட சீரழிவுகளுக்கு விதிவிலக் காக இல்லை. பஞ்சாபில் நடந்த ''நீல நட் சத்திர'' படுகொலை நடவடிக்கையின் போது விருது பெற்ற மேஜர் ரவீந்திர் சிங் என்பவர், பிறகு இந்திய உளவுப் படை ''ரா''வில் சேர்க்கப்பட்டார். இவர் இந் தியா, அமெரிக்கா ஆகியவற்றின் இரட்டை உளவாளியாக செயல்பட்டிருப் பது தெரிய வந்திருக்கிறது. இவர்சமீபத் தில் குடும்பத்தோடு அமெரிக்காவில் தஞ்சமடைந்து குடியேறிவிட்டார். இன் னொரு உளவுப்படையான ஐ.பி.யின் ஒரு உயர் அதிகாரி, அமெரிக்கத் தூதரக பெண் ஊழியரிடம் கள்ள உளவு வைத் துக் கொண்டு சோரம் போயிருக்கிறார். இவர்கள் இந்தியாவின் ரகசியங்களை அமெரிக்காவுக்குக் கடத்தியிருப்பது அம் பலமாகியிருக்கிறது.

இராணுவம், உளவுத்துறை போன்ற வற்றில் நடக்கும் முறைகேடுகள், சீரழிவு களைப் பற்றிப் பேசுவது தேச துரோகம் என்று முத்திரை குத்தி வாயடைக்கப்படு வது; இவற்றின் செயல்பாடுகளை ''தேசி யப் பாதுகாப்பு'' என்ற பெயரில் இரகசிய மாக வைப்பது; சிவிலியன் அமைப்புக ளின் மேற்பார்வையில் இருந்து விலக்கி வைப்பது ஆகியவை இவற்றின் சீரழி வுக்கு ஊக்கமளிப்பதாக உள்ளன. எந்தக் கட்சியின் ஆட்சியானாலும், அவற்றின் வசதிக்காக, தங்கு தடையற்ற லஞ்ச ஊழல் முறைகேடுகளுக்கு வசதியாகவே இந்த நிலை பாதுகாக்கப்படுகிறது. ஈராக் கில் அமெரிக்க இராணுவம் நடத்தும் ஆபாச வக்கிர வெறியாட்டங்கள் போன் றவை அரசின் முழு ஆதரவோடு நடப்ப தற்கும் இந்த நிலை வசதியாக இருக்கி றது. குருட்டுத்தனமான நாட்டுப்பற்று - தேசபக்தி என்பது எத்தகைய இழிநி லைக்கு இட்டுச் செல்கின்றது என்பதற்கு இவையெல்லாம் சான்றாக உள்ளன. தனி ஒரு சாதியாக மக்களிடமிருந்து விலக்கி வைக்கப்படும் இராணுவக் கட்டமைப்பு உள்ள நாடுகளில் எல்லாம் இதே நிலை தான். குடிமக்கள் மத்தியிலேயே வாழ்ந்து உள்நாட்டு உற்பத்தி, சேவையில் ஈடுப டும் மக்கள் படைகள் மட்டுமே நாட்டுக் கும் மக்களுக்கும் பொறுப்பானவையாக விளங்கமுடியும்.

●●●

# தேர்தல் முடிவுகள்:
# காங்கிரசு-போலி கம்யூனிஸ்டு சந்தர்ப்பவாத கூட்டணி

பதினான்காவது நாடாளுமன்ற மக்களவைக்கு நடந்து முடிந்த பொதுத் தேர்தல்களின் முடிவுகளுக்குப் பொருள் என்னவென்பதுதான் தற் போது நாடு முழுவதும் அரசியல் கட்சி கள், அரசியல் - பொருளாதார நிபுணர்க ளுக்கிடையே நடக்கும் காரசாரமான விவாதப்பொருளாக உள்ளது.

ஒட்டு மொத்தமாகத் தொகுத்துப் பார்க்கும்போது, யார் ஆளக்கூடாது, எப்படி ஆளக்கூடாது என்ற கருத்தை மட்டும் இத்தேர்தல்களின் முடிவுகள் ஓரளவு தெளிவாகக் காட்டுகின்றன. ஆனால், இதையே பகுத்து பார்க்கும் போது, வாக்காளரின் கருத்து முடிவுகள் முரண்பட்டும் பிளவுபட்டுமே இருப்ப தைக் காணமுடிகிறது.

ஒரு தொங்குநிலை நாடாளுமன்றம் அமைவதற்குத்தான் மக்கள் ஓட்டுப் போட்டிருக்கிறார்களே தவிர எந்த வொரு கூட்டணியோ, கட்சியோ நாட்டை ஆள்வதற்கு சாதகமாக மக்கள் ஓட்டுப் போடவில்லை. தற்போது ஆட்சி அமைத்துள்ள ஐக்கிய முற்போக் குக் கூட்டணி தேர்தலுக்குப் பிந்திய ஏற் பாடுதானே தவிர, இதன் உறுப்பினர்க ளுடன் காங்கிரசு தமிழகம், ஆந்திரா, மராட்டியம், பீகார் மற்றும் ஜார்க்கண்ட் முதலான இடங்களில் மாநில அளவி லான கூட்டுக்களை மட்டுமே வைத்துக் கொண்டிருந்தது.

நாட்டின் பெரிய தேசியக் கட்சிக ளென உரிமை கொண்டாடும் காங்கிரசு மற்றும் பா.ஜ.க. இரண்டுக்குமே மக்கள் ஆளும் உரிமை தரவில்லை. ஏறக்கு றைய நான்கில் ஒரு பங்கு இடங்களே கிடைத்திருக்கின்றன. பா.ஜ.க. ஆட்சி அதிகாரத்தை இழந்துவிட்டது, காங்கி ரசு அதைப் பெற்று விட்டது என்ப தாலேயே, சோனியா தலைமையிலான காங்கிரசு வெற்றி பெற்று விட்டது என்ப தாக அவர்கள் கொண்டாடுகிறார்கள். இரண்டுக்கும் ஐந்து எம்.பி.க்கள்தான் வித்தியாசம். பா.ஜ.க. மத்திய பிரதே சம், சட்டிஸ்கர், இராஜஸ்தானில் முழு அளவிலும், கர்நாடகா, மராத்தியம், குஜராத் மற்றும் பஞ்சாபில் பகுதி அளவிலும் வெற்றி பெற்றுள்ளது. காங்கி ரசோ, இவை மட்டுமின்றி கேரளம், ஒரிசா, மே.வங்கம், திரிபுராவில் முற் றாக நிராகரிக்கப்பட்டு விட்டது.

ஆக, நாடு முழுவதும் ஒரே சீரான முடிவு என்று கூறுவதற்கு இடமில்லை; கலவையான தீர்ப்புதான் வழங்கப்பட் டிருக்கிறது. கேரளா, மே.வங்கம் மற் றும் திரிபுராவில் தன்னைக் கடுமையாக எதிர்த்துப்படுதோல்வி அடையச்செய்த போலி இடதுசாரிக் கட்சிகளின் ஆதர வின்றி காங்கிரசு ஆட்சி அமைத்திருக்க வும் முடியாது; அதை தக்கவைத்துக் கொண்டிருக்கவும் முடியாது. தற்போது ஆட்சி அமைத்திருக்கும் ஐக்கிய முற் போக்குக் கூட்டணிக்கு ஐந்தில் இரண்டு பங்குதான் நாடாளுமன்றத்தின் மக்கள வையில் இடம் கிடைத்திருக்கிறது.

நாடு முழுவதுமான பொதுத் தேர் தல்களின் முடிவுகள் கலவையாக இருந் தபோதும், அதிலும் ஒரு ஒழுங்கு நிலவு வதைக் காணமுடிகிறது. வலுவான எதிர்த் தரப்பு இல்லாத மே.வங்கம், ஒரிசா, பீகார் மற்றும் சமீபத்தில் தேர்தல் களைச் சந்தித்து ஆட்சி மாற்றம் கண்ட சட்டிஸ்கர், மத்தியபிரதேசம் மற்றும் இராஜஸ்தான் தவிர பிறமாநிலங்களில் ஏற்கெனவே ஆட்சியில் உள்ள கட்சி களை மக்கள் நிராகரித்திருக்கிறார்கள். அதாவது தங்களது அன்றாட வாழ்க்கை யில் உடனடியாகவும், நேரடியாகவும் பாதகமான பாதிப்புகளை ஏற்படுத்தியி ருக்கும் மத்திய - மாநில ஆட்சியாளர் கள் மீது மக்கள் கடும் வெறுப்பில் இருக் கிறார்கள். இது இன்று, நேற்றல்ல; கடந்த பல தேர்தல்களில் மக்கள் பின்பற் றும் பொதுப் போக்காக இருக்கிறது.

இதையும் மீறி, இந்தத் தேர்தல் முடி வுகளுக்குத் தமது வசதிக்கும், விருப்பத் துக்கும், நிலைக்கும் பொருத்தமாக அர சியல் கட்சிகளும், கூட்டணிகளும், தனிப்பட்ட அரசியல், சமூக, பொருளா தார நிபுணர்களும் வெவ்வேறு வியாக் கியானங்கள் கூறுகின்றனர்.

பா.ஜ.க.வினரோ, ''இந்தியா ஒளிர் கிறது'', ''நல்லணர்வு கொள்க'' என்ற தமது முழக்கங்கள் எடுபடாமல் போய் விட்டது; இதை, ஏழ்மை, வேலையில்

லாத் திண்டாட்டம், ஏற்றத் தாழ்வான வளர்ச்சி, விவசாயிகளின் பிரச்சினைகளை எடுப்பாக்கிக்காட்டுவதற்கு அரசியல் எதிரிகள் பயன்படுத்திக் கொண்டார்கள். மற்றபடி, பா.ஜ.க. - ஆர்.எஸ்.எஸ்.-இன் இந்துத்துவா கொள்கைக்கு எதிராக மக்கள் ஓட்டுப்போடவில்லை'' என்கின்றனர். பா.ஜ.க. இந்துத்துவா கொள்கையை முன்னிறுத்தத் தவறியதுதான் தோல்விக்குக் காரணம் என்று, ஆர்.எஸ்.எஸ். பாசிச பரிவாரங்கள் வாதிடுகின்றனர்.

''பா.ஜ.க.வின் இந்துத்துவா பிளவுவாதம் - வகுப்புவாதம், குறிப்பாக அதை அதிதீவிரமாக குஜராத், உ.பி., ம.பி., ஒரிசா மற்றும் இராஜஸ்தானில் பின்பற்றியதற்கும், தேசிய ஜனநாயகக் கூட்டணி அரசின் பல்வேறு மக்கள் விரோதப் பொருளாதாரத் திட்டங்கள் - கொள்கைகளுக்கு எதிராகவும் மக்கள் அளித்துள்ள தீர்ப்பு மட்டுமல்ல. சோனியா காந்தி அன்னியர், அவரைப் பிரதமராக்கக் கூடாது என்பது உட்பட தனிப்பட்ட முறையில் அவருக்கு எதிராக நடத்தப்பட்ட தாக்குதல்கள் எதிர்வினையாற்றியுள்ளன'' என்கிறது, காங்கிரசு.



சோனியா வழிநடத்தும் முதலாளித்துவமற்ற பாதையில் போலி கம்யூனிஸ்டுகள்.

போலி கம்யூனிஸ்டுகள், போலி சோசலிஸ்டுகள் உட்பட இந்தியாவின் இடதுசாரி அறிவுஜீவிகளோ, இந்த 2004 பொதுத் தேர்தல் முடிவுகளை கிட்டத்தட்ட ஒரு அரசியல் புரட்சி என்கிற அளவுக்குக் கொண்டாடுகின்றனர். பா.ஜ.க. - ஆர்.எஸ்.எஸ். தலைமையிலான இந்துமதவெறி, வகுப்புவாத, பிளவுவாத பணக்கார - மேட்டுக்குடி ஆதரவு பாசிச சக்திகளின் இருண்ட காலம் ஒரு அமைதிப் புரட்சியின் மூலம் முடிவுக்கு வந்துவிட்டதாக பிரகடனப்படுத்துகின்றனர். கடந்த 20 ஆண்டுகளில், இடதுசாரிகளின் ஆதரவு பெற்று வி.பி.சிங் மற்றும் தேவகவுடா - குஜ்ரால் ஆட்சி புரிந்த குறுகிய இடைவெளிகள் தவிர இப்போது நாடு தீர்மானமாக இடது பக்கம் திரும்பியிருக்கிறது என்று நம்பச்சொல்கின்றனர்.

''நாட்டின் ஜனநாயகத்தைச் செழுமைப்படுத்தவும், ஒரு பன்முக, நவீன, வேறுபட்ட பண்பாடு கொண்ட, நியாயமான சமத்துவ சமுதாயத்தைக் கட்டியெழுப்புவதற்கு நல்ல வாய்ப்புக் கிட்டியிருக்கிறது. நகர்ப்புற, கிராமப்புற ஏழை-எளிய மக்களின் வாழ்க்கையை மேம்படுத்தவும், குறிப்பாக புறக்கணிக்கப்பட்ட விவசாயிகளை முன்னேற்றவும், ஏழ்மை - வறுமை - வேலையில்லாத் திண்டாட்டத்தை அகற்றவும் இந்த வாய்ப்பைப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். உலக வங்கி - ஐ.எம்.எஃப் வழிநடத்திய சீர்திருத்தவாதக் கொள்கைகள் தீர்மானமாக நிராகரிக்கப்பட்டிருக்கின்றன. குறிப்பாக ஆந்திரா, தமிழ்நாடு, கர்நாடகாவில் ஏழை மக்களுக்கு விரோதமான, பணக்கார - மேட்டுக்குடி ஆதரவு ஆட்சியாளர்கள் தோற்கடிக்கப்பட்டிருக்கின்றனர்'' என்று இந்தப்போலி இட்துகள் தொகுக்கின்றனர்.

''தேசிய ஜனநாயக முன்னணியும் அதற்குத் தலைமை தாங்கிய பா.ஜ.க.வும் சில செயல்தந்திரத் தவறுகள் மட்டுமே செய்து விட்டன; தவறான பிரச்சார - கூட்டணி உத்திகள் கடைப்பிடித்தன. ஆட்சியாளர்களுக்கு எதிரான வெறுப்பு, உள்ளூர் பிரச்சினைகளின் பேரில் வாக்காளர்களின் ஆதரவு அணி மாறிவிட்டது என்பது போன்ற விளக்கங்கள் 2004 தேர்தல் முடிவுகளையும் குறைத்து மதிப்பிடுவது; முக்கியத்துவத்தையும் குறைத்து மதிப்பிடுவது'' என்கின்றனர் இந்த அறிவுஜீவிகள்.

மக்களுடைய வாழ்க்கைப் பிரச்சினைகள் மீதும், மதச்சார்பின்மையின் மீதும் எங்கெல்லாம் காங்கிரசு தெளிவான, சமரசமற்ற, போர்க்குணமிக்க நிலையெடுத்ததோ, அங்கெல்லாம் வெற்றி பெற்றது; பிற்போக்கு வலதுசாரி நிலையெடுத்து, இடதுசாரிகளை எதிர்த்த மே.வங்கம், கேரளா, திரிபுராவில் படுதோல்வி கண்டது; இதைப் பயன்படுத்திக் கொண்டு இடதுசாரிகள் நேர்மறையாகச் செயல்பட்டு முற்போக்கான பாத்திரமாற்றி தமது சமூக - ஜனநாயக நோக்கங்களை நிறைவேற்றிக் கொள்ளவேண்டும். இடதுசாரிகளைச் சார்ந்துதான் இந்த அரசு நீடித்திருக்கமுடியும் என்பது, மொத்தத்தில் மகிழ்ச்சி அடையத்தக்க முடிவு'' என்று அறிவுறுத்தி அறிவுஜீவிகள் அகமகிழ்ந்து போகிறார்கள்.

இதற்குப் பொருத்தமாக, பிரதமர் பதவி ஏற்றதும் மன்மோகன் சிங் பேசியுள்ளார். ''ஒரு மதச்சார்பற்ற, நிலைத்த ஆட்சிக்கு மக்கள் வாக்களித்துள்ளனர். வறுமைக்கு எதிராகப் போராடுவதுதான் அரசாங்கத்தின் முதல் முக்கியத்துவம் பெறும். ஏழை எளிய மக்கள், கிராமப்புற விவசாயத்துறையின் மீது கவனத்தைக் குவிப்போம். குடிதண்ணீர், பள்ளிகள், சுகாதார வசதிகள், இளைஞர்களுக்கு வேலை, தொழிலும் வர்த்தகமும் பெருகுவதற்கு ஏற்ற சூழ்நிலையை உருவாக்குவது - இவைதாம் இந்த அரசாங்கத்தின் நோக்கமாக இருக்கும்'' என்றார்.

உடனடியாக உச்சி குளிர்ந்து போன இடதுசாரிக் கட்சிகள், காங்கிரசு ஆட்சிக்கு நிபந்தனையற்ற, முழு ஆதரவைத் தெரிவித்ததோடு, ''கம்யூனிஸ்டுகள் முட்டாள்கள் அல்ல, சீர்திருத்தத்துக்கும், அந்நிய நேரடி முதலீட்டிற்கும் நாங்கள் எதிரிகள் அல்ல. குறிப்பாக தகவல் தொழில்நுட்பம், தொலைத்தொடர்புத் துறையில் அன்னிய முதலீடுகளை வரவேற்போம். வரைமுறையற்ற தனியார்மயமாக்கலைத்தான் எதிர்க்கி

www.padippakam.com

றோம். தேசிய நலன்களுக்குத் தேவையான, நவீனத் தொழிற்துறையில் அன்னிய முதலீடுகளை வரவேற்கிறோம்'' என்று போலி கம்யூனிஸ்டுத் தலைவர்கள் அனைவரும் மாறிமாறி உறுதியளிக்கின்றனர்.

காங்கிரசுதலைமையிலான 14 கட்சி ஆளும் ஐக்கிய முற்போக்கு கூட்டணியில் பங்கேற்காவிட்டாலும், அதோடு சேர்ந்து குறைந்தபட்சப் பொதுத்திட்டம் வகுத்துநிறைவேற்றுவதில் இடதுசாரிக் கட்சிகள் முழு ஒத்துழைப்புக் கொடுத்துள்ளன. வேலை வாய்ப்புப் பெருக்கம், விவசாயம், கல்வி, சிறுபான்மையினரது நலன், பிராந்திய வளர்ச்சி, தொழிலாளர் நலன், பொதுத்துறைத் தொழில்களை பலப்படுத்துவது, பெண்களுக்கு இட ஒதுக்கீடு, பொடா நீக்கம் போன்ற ஐ.மு. கூட்டணி - இடதுசாரிகளிடையே உடன்பாட்டிற்குரியதுறைகள் கண்டறியப்பட்டுத் தீர்மானங்கள் வகுத்து ஏற்கப்பட்டுள்ளன.

''ஒரு மனித முகம் கொண்ட பொருளாதார சீர்திருத்தங்கள் பொதுவிநியோக முறையை உறுதிப்படுத்துவது, விவசாயத்துறைக்கான நிதி - கடன் - மானியங்களை அதிகரிப்பது, ஒரு குடும்பத்துக்கு ஒரு வேலை அல்லது ஆண்டுக்கு 100 நாள் வேலையை உத்திரவாதப்படுத்தும் சட்டம், மதக்கலவரங்களுக்குத் தண்டனையை உறுதி செய்யும் சட்டம், 1992 வழிபாட்டுச் சட்ட அமலாக்கம், லாபத்தில் நடத்தப்படும் பொதுத்துறைத் தொழிலகளைத் தனியாருக்கு விற்பதில்லை, காசுமீருக்கு பேச்சு வார்த்தை மூலம் தீர்வு, அயோத்திக்கு பேச்சுவார்த்தை அல்லது கோர்ட் தீர்ப்பு மூலம் தீர்வு, மூன்று அல்லது நான்கு மடங்கு அன்னிய நேரடி முதலீடு மற்றும் 7 முதல் 8 சதவீத வளர்ச்சி, தொழிலாளருக்கு போராட்ட உரிமைப் பாதுகாப்பு'' - இப்படி ஏராளமான வாக்குறுதிகள் இந்தக் குறைந்தபட்ச பொதுத்திட்டத்தில் உள்ளன.

எல்லாம் பொதுவான சொல் விளையாட்டு. இவற்றையே வேறுமாதிரி வியாக்கியானம் செய்து முந்தைய ஆட்சியாளர்களைப் போலவே மக்கள் விரோத, ஜனநாயக விரோத ஆட்சியும் கொள்கையும் நீடிக்கும் என்பதுதான் உண்மை. போலி கம்யூனிஸ்டுகள்தாம் காங்கிரசின் நிலைக்கு இறங்கிப்போய் சமரசம் செய்து கொண்டிருக்கிறார்களே தவிர, காங்கிரசு உட்பட 14 கட்சிக் கூட்டணி தமது ஆளும் வர்க்க ஆதரவு அரசியல் பொருளாதாரக் கொள்கைகளைக் கைவிடவில்லை.

இதை உறுதிப்படுத்தும் வகையில் புதிய நிதிமந்திரி நாளும் பேசி வருகிறார். ராஜீவ் - வி.பி.சிங் தொடங்கி, நரசிம்மராவ் - மன்மோகன் சிங் ஆட்சியில் அமலாக்கப்பட்ட சீர்திருத்தங்களைத் தான் பின்னர் வந்த ஆட்சியினர் கடைப்பிடித்து வந்தனர். பா.ஜ.க. அரசு செயல்படுத்திய இரண்டாம் தலைமுறை சீர்திருத்தங்களின் அடிப்படையிலேயே இந்த அரசின் பொருளாதாரக் கொள்கைகள் தொடரும் என்று சிதம்பரம் திரும்பத்திரும்ப இந்திய, ஏகாதிபத்திய ஆளும் வர்க்கங்களுக்கு உறுதி கூறுகிறார்.



குறைந்தபட்ச செயல் திட்டத்தை வெளியிடும் ஐக்கிய முன்னேற்றக் கூட்டணித் தலைவர்கள்.

சரியாகச் சொல்வதானால், ஐக்கியப்பட்டிருந்த போலி கம்யூனிஸ்டுகள் ஐம்பதுகளில் வகுத்துக் கொண்ட திட்டத்தை அமல்படுத்துவதற்கு இப்போது வாய்ப்புக்கிட்டியிருக்கிறது. நேரு - இந்திரா தலைமையிலான காங்கிரசு மூலமாகவே முதலாளித்துவமற்ற பாதையிலே போய் சோசலிசத்தை நிறுவுவது என்பதுதான் அவர்களது அந்தத் திட்டம். இது சாத்தியமா? இல்லையா? என்பதன் அடிப்படையிலேயே இரண்டு கட்சிகளாக அவர்கள் பிளவுபட்டார்கள். இப்போது மீண்டும் ஒன்றுபட்டு அந்தப் பாதையை மேற்கொண்டு இருக்கிறார்கள். சோனியா - மன்மோகன்சிங் தலைமையிலான காங்கிரசு மூலமாக முதலாளித்துவமற்ற பாதையில் செல்வதற்கென்று ஒரு குறைந்தபட்ச பொதுத்திட்டத்தை வகுத்துக்கொண்டிருக்கிறார்கள்.

ஆனால் காங்கிரசு, மேற்கு ஏகாதிபத்திய ஏகபோகங்களுக்கும் இந்தியத் தரகு அதிகாரவர்க்க முதலாளிகளுக்கும், நிலப்பிரபுக்களுக்கும் சேவை செய்வதற்கென்றே உருவாக்கப்பட்ட பார்ப்பன - பனியா ஆளும் வர்க்கக் கட்சி. பின்னர் ருசிய சமூக ஏகாதிபத்தியத்தையும் சேர்த்துக் கொண்டு சோசலிச முற்போக்கு நாடகமாடியது. சமூக ஏகாதிபத்தியத்தின் வீழ்ச்சியைத் தொடர்ந்து, ஏகாதிபத்திய உலகமயமாக்கம் - தாராளமயமாக்கம் - தனியார்மயமாக்கம் என்கிற புதிய பொருளாதாரக் கொள்கையைப் புகுத்தியக் கட்சி. இடையில் ஆட்சியதிகாரத்தை இழந்துவிட்டிருந்ததால் தன் நிறத்தை மாற்றிக் கொண்டு முற்போக்கான கட்சியாக மாறிவிட்டது என்று நம்புவதற்கு இடமே கிடையாது. இருந்தபோதும் பா.ஜ.க. - ஆர்.எஸ்.எஸ். மதவெறி பாசிச கும்பலைக் காட்டி வலதுசாரி எதிர்ப்பு என்கிற போர்வையில் மீண்டும் காங்கிரசுக்கு சேவகம் செய்வதற்குத் துடிக்கிறார்கள், போலி கம்யூனிஸ்டுகள்.

முதலாளித்துவ நாடாளுமன்ற ஜனநாயகத்தின் சிறப்புத் தன்மையே இதுதான். வெற்றுத் தாளில் கையெழுத்துப் போட்டுத் தருவதை போல, ஏற்கெனவே உள்ள ஆட்சியாளர்களுக்கு எதிராக ஓட்டுப் போட்டு விடுகிறார்கள். ஆனால், யார் யாரை வைத்து, என்னென்ன கொள்கை - திட்டங்கள் அடிப்படையில் ஆளவேண்டும் என்பதை தீர்மானிப்பதற்கு வாக்காளர்களுக்கு வாய்ப்பே கிடையாது. எனவே, நாட்டையும் மக்களையும் இந்த முதலாளித்துவ நாடாளுமன்ற ஜனநாயகம் மீண்டும் மீண்டும் பா.ஜ.க. அல்லது காங்கிரசு போன்ற கட்சிகளையே தேர்ந்தெடுக்கும் ஒரு நச்சுச் சுழற்சியில் தள்ளிவிடுவது தவிர்க்க முடியாது. இந்த சுழற்சியில் இப்போது போலி கம்யூனிஸ்டுகளும் போலி முற்போக்குகளும் வெற்றி பெற்றிருக்கிறார்கள். மக்களுக்கோ மீண்டும் தோல்விதான் மிஞ்சியிருக்கிறது.

● ஆர்.கே.


படிப்பகம்

www.padippakam.com

# சிவந்த கண்கள் கவனிக்கட்டும்

## இந்துத்துவா தீர்ப்பு

"வேத சோதிடம் என்பது போலி விஞ்ஞானம்; இதைக் கல்லூரிகளில் பாடமாகப் போதிப்பது சமூகத்தைப் பின்னோக்கித் தள்ளுவதாகும்" எனக் குறிப்பிட்டு, வேத ஜோதிடத்தைக் கல்லூரிகளில் போதிக்க பல்கலைக்கழக மானியக் குழு அளித்துள்ள அனுமதியை ரத்து செய்யக் கோரி உச்சநீதி மன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட மேல்முறையீட்டு மனுவை, நீதிபதிகள் தள்ளுபடி செய்துவிட்டனர். உச்சநீதி மன்ற நீதிபதிகள் தங்களின் தீர்ப்பில், "வேத ஜோதிடம் என்பத வான சாஸ்திரம் (Astronomy) என்ற விஞ்ஞானத்தையும் அடிப்படையாகக் கொண்டது" எனக் குறிப்பிட்டு, இப்பார்ப்பன பித்தலாட்டத்திற்கு வக்காலத்து வாங்கியுள்ளனர்.

## அரசு பயங்கரவாதத்தின் எதிர் விளைவுகள்

இந்திய இராணுவத்தின் பிடிக்குள் சிக்கிக் கொண்டு தவிக்கும் காசுமீர் பள்ளத்தாக்கில், கடந்த 14 ஆண்டுகளில் 20,000 காசுமீரிகள் தற்கொலை செய்து கொள்ள முயன்றுள்ளனர். இவர்களுள் 3,000 பேரின் உயிர் அநியாயமாகப் பறிபோய் விட்டது. இப்படி தற்கொலை செய்து கொண்டு இறந்து போனவர்களில் பெரும்பாலோர் 16-லிருந்து 25 வயதுக்கு உட்பட்ட இளைஞர்கள். தீவிரவாத வேட்டை என்ற பெயரில் நடைபெறும் அட்டூழியங்கள், மன அழுத்தத்தை உருவாக்கித் தற்கொலைக்குத் தூண்டிவிடுவதாக மனநல மருத்துவர்கள் குறிப்பிடுகின்றனர். ஆனால், ஆளுங் கும்பலோ, பழியை முசுலீம் தீவிரவாதத்தின் மீது மட்டும் சுமத்தித் தப்பித்துக் கொள்ளப் பார்க்கிறது.

## நீதிபதிகளின் யோக்கியதை

பஞ்சாபைச் சேர்ந்த முக்கிய புள்ளி ஒருவரின் சொத்து தகராறு வழக்கு அம்மாநில உயர்நீதி மன்றத்தில் நடந்து வருகிறது. அரசியல்வாதிகள், அதிகாரிகளுக்கு இலஞ்சம் கொடுத்து வளைப்பதில் கில்லாடியான இந்த முக்கிய புள்ளி, தான் நடத்திவரும் உல்லாச விடுதியில் பஞ்சாப் உயர்நீதி மன்றத்தைச் சேர்ந்த நீதிபதிகள் இலவசமாகத் தங்கிக் கொள்ளும் சலுகையை வீசி எறிந்தான். இந்த எலும்புத் துண்டை நீதிபதிகள் கவ்விக் கொள்ள, உயர்நீதி மன்ற தலைமை நீதிபதி தடையாக இருந்தார். இதனால், உயர்நீதி மன்றத்தைச் சேர்ந்த பெரும்பாலான நீதிபதிகள் ஒட்டு மொத்தமாக விடுப்பு எடுத்து, நீதி மன்றத்தை முடக்கி விட்டனர். நீதிபதிகளின் இந்த இலஞ்சப் பேராசை வெளியே தெரிந்து நாறியவுடன், உச்சநீதி மன்ற நீதிபதிகள் தலையிட்டுச் சமரசம் செய்து வைத்தனர்.

## நரசிம்மராவின் "அமெரிக்க இரகசியம்"

முன்னாள் இந்தியாவின் பிரதமர் நரசிம்ம ராவிடம் எடுக்கப்பட்ட பேட்டியொன்று சமீபத்தில், "என்.டி. டிவி." என்ற தனியார் தொலைக்காட்சியில் ஒளிபரப்பப்பட்டது. இப்பேட்டியில் ஒரு கேள்விக்குப் பதில் அளித்த ராவ், "அணுகுண்டு பரிசோதனைகளை நிறுத்தக் கோரி, அமெரிக்கா என்னென்ன நிர்பந்தங்களைக் கொடுத்தது என்று எனக்குத்தான் தெரியும். ஆனாலும், இதை நான் வெளியே சொல்ல மாட்டேன். ஏனென்றால், எனக்கு இது புனிதமான இரகசியம்" எனக் கூறியிருக்கிறார். இப்படிப்பட்ட இரகசியங்கள் வெளியே தெரிந்து இந்தியாவின் 'சுதந்திரம்' அம்பலமாகி விடக் கூடாது என்பதற்குத்தான், பிரதமராகப் பதவியேற்கும் பொழுது, இரகசியக் காப்பு உறுதிமொழி எடுக்கிறார்கள் போலும்.

## அமெரிக்கா: நாஜிக்களின் பாதுகாவலன்

பாசிச சர்வாதிகாரி இட்லரது நாஜிப் படையின் போர் குற்றங்களை ஆய்வு செய்து வரும் வரலாற்று அறிஞர்கள் குழுவொன்று சமீபத்தில் "அமெரிக்காவின் உளவுப் பிரிவும் நாஜிக்களும்" எனும் தலைப்பில் ஆய்வு நூலை வெளியிட்டு இருக்கிறது. அமெரிக்க ஏகாதிபத்தியத்திற்கும் நாஜிக்களுக்கும் இடையே இருந்து வந்த இரகசியமான கள்ள உறவை ஆய்வு செய்யும் இந்நூல், இட்லரின் தளபதிகளுள் ஒருவனான அடால்ஃப் ஐக்மனும், அவனது ஐந்து உதவியாளர்களும் அமெரிக்காவின் சி.ஐ.ஏ. விற்கு வேலை பார்த்து வந்ததையும்; போர்க் குற்றவாளிகளாக அறிவிக்கப்பட்டிருந்த 23 நாஜி அதிகாரிகளை சி.ஐ.ஏ. தனது சம்பளப் பட்டியலில் வைத்திருந்ததையும் ஆதாரங்களோடு அம்பலப்படுத்தியிருக்கிறது.




அரசு பயங்கரவாத அட்டூழியங்களை எதிர்த்து மனித உரிமை அமைப்பினர், காசுமீர் தலைநகர் சிறீநகரில் நடத்திய ஆர்ப்பாட்டம்.

## நவீன நாஜி மருத்துவர்கள்

ஐரோப்பா கண்டத்திலுள்ள பல்கேரிய நாட்டைச் சேர்ந்த மருத்துவர்கள் சிலர், "எய்ட்ஸ்" நோய்க்கான மருந்தைக் கண்டுபிடிக்கும் ஆராய்ச்சிக்கு லிபியா நாட்டுக் குழந்தைகளைப் பரிசோதனைச்சாலை எலிகளாகப் பயன்படுத்தியுள்ளனர். அந்நாட்டைச் சேர்ந்த 400 குழந்தைகளுக்கு "எய்ட்ஸ்" நோயை உருவாக்கும் "ஹெச்.ஐ.வி." கிருமியை உடலினுள் செலுத்தி பல்வேறு மருந்துகளைக் கொடுத்து இவர்கள் ஆராய்ச்சி நடத்தி வந்தனர். இதில் 23 குழந்தைகள் நோய் முற்றிப் போய் பரிதாபகரமாக இறந்து போனார்கள். இந்தச் சட்டவிரோத, முறைகேடான ஆராய்ச்சியை விசாரித்த அந்நாட்டு நீதிமன்றம் ஆறு பல்கேரிய மருத்துவர்களைச் சுட்டுக் கொல்லும்படி தீர்ப்பளித்திருக்கிறது. ●


படிப்பகம்

www.padippakam.com

## காளப்பட்டி:

# தேர்தல் புறக்கணிப்புக்கு சர்வகட்சி சாதிவெறியர்களின் தாக்குதல்

கோவை - பீளமேட்டுக்கு அடுத்துள்ளது காளப்பட்டி கிராமம். கடந்த ஏப்ரல் மாதம் 16-ந்தேதி இரவு இக்கிராமத்தில் அருந்ததியர் வாழும் புதுக் காலனி மற்றும் சாஸ்திரி வீதிகளில் கவுண்டர் மேல்சாதிவெறி கும்பல் புகுந்து அப்பகுதியையே சுற்றி வளைத்துத் தாக்கியது.

இத்தாக்குதலில் 150-க்கும் மேற்பட்ட தாழ்த்தப்பட்டவர்களின் வீடுகள் தரைமட்டமாயின. பெட்ரோல் நிரப்பிய பாட்டில்களை வீசியெறிந்து குடிசைகள் கொளுத்தப்பட்டன. தப்பியோடிய 'தலித்' பெண்கள், சிறுவர்கள், முதியவர்கள் மீது மிளகாய்ப் பொடியைத் தூவி, அவர்களைச் சரமாரியாக மேல்சாதி வெறிக் கும்பல் தாக்கியது. தலித் இளைஞர்களை தனித்தனியாக மறித்து கத்தி, வெட்டரிவாள், உருட்டுக் கட்டைகளால் தாக்கி முடமாக்கினர். ஆடு, மாடுகளைக் கூட விடவில்லை; ஆடு - மாடுகளின் கழுத்தை அறுத்துக் கொன்றது கவுண்டர் சாதிவெறி கும்பல்.

தலித் மக்களின் உடமைகள், தொலைக்காட்சிப் பெட்டிகளைத் தீக்கிரையாக்கி, நகைகளையும், பணத்தையும் மேல்சாதி வெறியர்கள் கொள்ளையடித்தனர். தீயில் வெந்த ஆடு, கோழிகளையும் சுருட்டிக் கொண்ட இக்கும்பல், சுயேட்சை தலித் ஊராட்சி மன்ற உறுப்பினர் ராசு வீட்டையும் தேடிக் கொளுத்தியது.

''கலவர பூமியாகமாறியது காளப்பட்டி'' என்று தினசரி பத்திரிக்கைகளே செய்திகள் வெளியிட்டன. தினமலர், இந்தியன் எக்ஸ்பிரஸ் போன்ற பார்ப்பன ஏடுகள், ''கொளுத்தப்பட்ட வீடுகள்'' ''ஆக்ரோஷத்துக்கு பலியான ஆடுகள்!'' என்று வெந்துபோன ஆடுகளையும், சாம்பல் மேடான வீடுகளையும் வெட்டப்பட்ட தலித் மக்களையும் படங்களோடு வெளியிட்டு, ''கோஷ்டி மோதல்'' என்று போலீசு பாணியில் புளுகின. மேல்சாதி வெறியர்களின் இந்த மிருகவெறிக்குக் காரணம் இது தான்:

- ஊருக்கு வரும் பேருந்துகளில் உட்கார்ந்துவரும் தாழ்த்தப்பட்டவர்கள், கவுண்டர் சாதியினரைக் கண்டவுடன் எழுந்து இடம் தராமல் இருப்பது.
- ஊர் திடலில், கவுண்டர் சாதி இளைஞர்களுக்குச் சமமாக தலித் இளைஞர்கள் கிரிக்கெட் முதலிய விளையாட்டுகளில் ஈடுபடுவது. அவர்களைப் போலவே பொது இடங்களில் சமமாக அரட்டை அடிப்பது.
- அம்பேத்கர் பிறந்த தினம் மற்றும் தலித் அமைப்புகளின் தலைவர்களுக்கு தலித் இளைஞர்கள் ஊர் பொது இடங்களில் சுவரொட்டிகள் ஒட்டுவது; விழா எடுப்பது.
- மாரியம்மன் சாமி ஊர்வலம் தங்கள் பகுதிக்கும் வரவேண்டும் என்று தலித் மக்கள் கோருவது.
- ஆதிக்க சாதியினரின் அட்டூழியங்களுக்கு எதிராக தலித்துகள், வன்கொடுமைகள் சட்டத்தின் கீழ் புகார் கொடுத்து தொடர்ந்து வழக்குகளை நடத்துவது; அவற்றை வாபஸ் வாங்க மறுப்பது.
- அனைத்திற்கும் மேலாக, நடந்து முடிந்த நாடாளுமன்றத் தேர்தலை அப்பகுதி தாழ்த்தப்பட்ட மக்கள் புறக்கணித்தது; குடிநீர், மின்சாரம் போன்ற அடிப்படை வசதியைக் கோரி, பி.ஜே.பி.யின் மாநிலத் தலைவரும் வேட்பாளருமான சி.பி. ராதாகிருஷ்ணன் மற்றும் சி.பி.ஐ. கட்சி வேட்பாளர் சுப்பராயன் இருவரையும் தங்கள் பகுதிக்குள் நுழைய விடாமல் தடுத்தனர். இதில் கண் சிவந்த காவி கும்பல், ''தேர்தல் முடியட்டும்டா'' என்று சவால் விட்டது. தேர்தலில் மண்ணைக் கவ்வியவுடன், பார்ப்பன பயங்கரவாதிகள் தலித் மக்களின் குடிசைகளையும் மண்மேடாக்கினர்.

இச்சாதிவெறி பயங்கரத்தை முன்நின்று நடத்திய கவுண்டர் சாதி வெறியர்கள் உள்பட 33 நபர்கள் மீது, அவர்களின் முகவரியுடன் தலித்துக்கள் புகார் கொடுத்த பிறகும் அக்கிரிமினல்களை விசாரணை என்ற பெயரில் குசலம் விசாரிக்கிறது, போலீசு.

உடமைகளை இழந்து உயி

உண்மை நிலையை அறிவதற்காக காளப்பட்டிக்குச் செல்ல முயன்ற பல்வேறு அமைப்புகளைச் சேர்ந்த செயல்வீரர்களை, கோவை அவிநாசி சாலையிலேயே தடுத்துவிட்ட போலீசை எதிர்த்து நடந்த திடீர் ஆர்ப்பாட்டம்.





படிப்பகம்

www.padippakam.com

ருக்குப் போராடிய தலித் மக்கள் அதிகார வர்க்கத்தாலும் அரசு எந்திரத்தாலும் மீண்டும் மீண்டும் அவமானப்படுத்தப்பட்டனர். தலித் அமைப்புகள் போராடிய பிறகுதான், வெட்டப்பட்ட தலித்துகளை, அரசு மருத்துவ மனை, உள்நோயாளிகளாக ஏற்றுச் சிகிச்சையளித்தது.

தற்போது, அமைதியை நிலை நாட்டுவது என்ற பெயரில் தலித் மக்கள் வாழும் காளப்பட்டி பகுதி, திறந்தவெளிச் சிறைச் சாலையாக மாற்றப்பட்டுள்ளது. காவல் கண்காணிப்பு என்ற பெயரில் காளப்பட்டியின் எல்லைப் பகுதிகள் மற்றும் அவ்வூருக்குச் செல்லும் அனைத்து வழிகளும் எதிரி எல்லையைப் போல் 'சீல்' வைக்கப்பட்டுள்ளன. காளப்பட்டியில் வசித்த 500 தலித்துகளில் இப்போது 200 பேர் மட்டுமே ஊரில் தங்கியிருக்கின்றனர். வெளியாட்கள் அவர்களை நெருங்கி விடாமல், அவர்களைச் சுற்றி 300 பேர் கொண்ட போலீசு படைக் குவிக்கப்பட்டுள்ளது. கோவையின் இன்னொரு கோட்டைமேடு பகுதியாக போலீசு கும்பலால் இப்பகுதி மாற்றப்படுகிறது. உண்மையறியச் சென்ற வழக்கறிஞர்கள் குழுவையும் போலீசு கும்பல் அனுமதிக்கவில்லை.





**கவுண்டர் சாதி வெறியர்களால் கொடூரமாகத் தாக்கப்பட்ட எழுபது வயதான முதியவர் முத்தான் (மேல்படம்) மற்றும் ஆதித் தமிழர் விடுதலை முன்னணியின் காளப்பட்டி கிளைச் செயலாளர் ரமேசு.**

இதற்கெதிராக, மக்கள் கலை இலக்கியக் கழகத்தின் கோவை மாவட்ட அமைப்பு, முன்முயற்சியோடு பிற தலித் அமைப்புகளுடன் கூட்டு நடவடிக்கை குழு அமைத்தது. "தமிழக அரசே! சாதி வெறிக்குத் துணை போகாதே! பாதிக்கப்பட்ட மக்களின் வீடுகளைக் கட்டிக் கொடு, இழந்த உடைமைகளுக்கு நட்டாடு வழங்கு, ஆதிக்க சாதிவெறியர்களை வன்கொடுமை சட்டத்தின்கீழ் கைது செய்!, உழைக்கும் மக்களே! சாதி தீண்டாமையை கட்டிகாக்கும் பார்ப்பனியத் திற்கு பாடை கட்டுவோம்!" என்று மக்கள் மத்தியில் இக்கூட்டுக்குழு பிரச்சாரத்தை எடுத்துச்சென்றது.

இத்தலித் வேட்டையை பின்னால் இருந்து இயக்கிய பி.ஜே.பி. மாநிலத் தலைவர் சி.பி.ராதாகிருஷ்ணன், கொங்கு வேளாளர் மாநிலத் தலைவர் ராஜமாணிக்கம், காளப்பட்டி பொன்னுச்சாமி, பையக் கவுண்டர் ஆகியோரை உடனடியாகக் கைது செய்ய இக்குழு கோரியிருக்கிறது. இவர்கள், கொங்கு வேளாளர் சாதி சங்கத்தின் கீழ் நூற்றுக்கும் மேற்பட்ட இளைஞர்களைத்திரட்டி தலித்துகள் மீது ஏவிவிட்டனர் என்று பகிரங்கமாகக் குற்றம் சாட்டியிருக்கிறது. கோவை மாவட்ட ஆட்சியர் முருகானந்தம், டி.எஸ்.பி. தினகரன் இருவரும் குற்றவாளிகளுக்கு பாதுகாப்பாக இருப்பதை இக்குழு தோலுரித்துக் காட்டியது.

உண்மை அறியவும், பாதிக்கப்பட்ட தலித் மக்களுக்கு ஆறுதல் தெரிவிக்கவும் தடையை மீறி சென்ற இந்தக் குழுவைச் சேர்ந்த 200-க்கும் மேற்பட்ட ஆதரவாளர்களை போலீசு கைது செய்தது. கைதுக்கு அஞ்சாத கூட்டு நடவடிக்கைக் குழுவினர் போராட்டத்தை முன்னெடுக்க பல்வேறு நடவடிக்கைகளில் இறங்கியுள்ளனர்.

தலித் மக்கள் மற்றும் ஜனநாயக சக்திகளின் தொடர்ச்சியான போராட்டத்தால் அரசு பல்வேறு கண்துடைப்பு நடவடிக்கைகளில் இறங்கியுள்ளது. மறுபுறம், தலித்துகள் மீதான இந்து மேல்சாதி கும்பலின் வெறியாட்டம் தொடர் நடவடிக்கைகளாக திட்டமிட்ட வகையில் நடத்தப்படுகிறது. குறிப்பாக, கோவை, மேற்கு மாவட்டங்களில் அருந்ததியர்கள் என்று ஒதுக்கப்பட்ட தலித் மக்களை விலங்குகளை விடக் கேவலமாக நடத்துகிறது, இந்து மேல்சாதி கும்பல். பொது இடங்களில் தலித் மக்கள் இருவர் பேசிக் கொண்டிருந்தாலே, "என்னடா இங்க பேசிகிட்டு... சக்கிலியன்களுக்கு சூத்து கொழுப்பு ஏறிப் போச்சுடா" என்று நரகலை கக்குகின்றனர், மேல்சாதி வெறியர்கள்.

இந்து ஒற்றுமை பேசும் இராம. கோபால அய்யர், சங்கராச்சாரியார் உட்பட எவரும் இச்சாதி வெறித் தாக்குதலுக்குப் பின்னரும் வாய் திறக்கவில்லை. போலி கம்யூனிஸ்டு கட்சிகள் உட்பட ஓட்டுக் கட்சிகளோ, குற்றவாளிகளான ஆதிக்கச் சாதியினரின் பெயரைக் குறிப்பிட்டு கூட கண்டனம் தெரிவிக்கவில்லை. பொதுவாக, மனிதநேயம் பேசி அறிக்கை விட்டு மக்களை ஏமாற்றுகின்றனர்.

அன்று கோவையில் முசுலீம்களுக்கு எதிராக கொலைவெறியாட்டம் போட்டபோது செல்வபுரம் பகுதியைச் சேர்ந்த உதிரிப் பாட்டாளிகளான தாழ்த்தப்பட்ட மக்களை முசுலீம் அல்லாத அனைவரும் ஒரே சமுதாயத்தினர் என்று கூறி ஏவிவிட்டது. இன்று தங்கள் சுயமரியாதையை சுய உரிமையை நிலைநாட்ட முயற்சிக்கும் காளப்பட்டி தாழ்த்தப்பட்ட மக்கள் மீது ஆதிக்கச் சாதியினர் பாய்ந்து குதறுகின்றனர். இதுதான் இந்துவெறியின் உண்மை முகம் என்பதை தலித் மக்கள் மறந்து விடக்கூடாது.

—பு.ஜ. செய்தியாளர்கள், கோவை.



படிப்பகம்

www.padippakam.com

# தேர்தல் புறக்கணிப்பு அரசியல் இயக்கம்:
# புரட்சிப் பாதையில் பீடுநடை

நடந்து முடிந்த நாடாளுமன்ற போலி ஜனநாயகத் தேர்தல் நாடகத்தை அம்பலப்படுத்தியும் புரட்சிகர அரசியலை முன்வைத்தும் தமிழகமெங்கும் மக்கள் கலை இலக்கியக் கழகம், விவசாயிகள் விடுதலை முன்னணி, புரட்சிகர மாணவர் - இளைஞர் முன்னணி, புதிய ஜனநாயகத் தொழிலாளர் முன்னணி ஆகிய புரட்சிகர அமைப்புகள் தாங்கள் செயல்படும் பகுதிகளில் விரிவாகவும் வீச்சாகவும் போர்க்குணத்தோடும் தேர்தல் புறக்கணிப்பு அரசியல் பிரச்சாரத்தை மேற்கொண்டன. துண்டுப் பிரசுரம், தட்டிகள், சுவரொட்டிகள், சுவரெழுத்து, கதவொட்டிகள், வீடு வீடாகப் பிரச்சாரம், தெருமுனைப் பிரச்சாரம், சைக்கிள் ஊர்வலப் பிரச்சாரம், பேரணி - பொதுக் கூட்டம் - கலை நிகழ்ச்சிகள் என சாத்தியமான அனைத்து வடிவங்களிலும் இப்பிரச்சார இயக்கத்தை புரட்சிகர அமைப்புகளுக்கே உரித்தான வீரியத்தோடு அவை முன்னெடுத்துச் சென்றன.

ஒருசில கிராமங்களும் சில உள்ளூர் அமைப்புகளும் தமது நீண்டகால கோரிக்கைகள் நிறைவேற்றப்படாததைக் கண்டித்து தேர்தலைப் புறக்கணித்தன. சில முற்போக்கு - ஜனநாயக இயக்கங்கள்கூட யாருக்கும் வாக்களிப்பதில்லை என தேர்தலைப் புறக்கணிப்பதாக அறிவித்தன. இருப்பினும் இவ்வமைப்புகள் எவையும் மாற்று அரசியலை முன்வைத்து அதை விரிவாக மக்களிடம் பிரச்சாரம் செய்யவில்லை. ஆனால் புரட்சிகர அமைப்புகள் மட்டுமே "போலி ஜனநாயகத் தேர்தலைப் புறக்கணிப்போம்! புதிய ஜனநாயகப் புரட்சிக்கு அணிதிரள்வோம்! மக்கள் சர்வாதிகார மன்றங்களைக் கட்டியமைப்போம்! நாடு மீண்டும் காலனியாவதையும் இந்துவெறி பாசிச அபாயத்தையும் முறியடிப்போம்!" என்ற புரட்சிகர அரசியல் முழக்கத்தை முன்வைத்து தேர்தல் புறக்கணிப்பு அரசியல் பிரச்சாரத்தையும் மே நாள் பேரணி - பொதுக்கூட்டம் - கலை நிகழ்ச்சிகளையும் நடத்தின. ஓட்டுப் பொறுக்கி குண்டர்களின் அச்சுறுத்தல்கள், போலீசின் அடக்குமுறைகள் - கைதுகள் அனைத்தையும் எதிர்கொண்டு உழைக்கும் மக்களின் உற்சாகமான ஆதரவோடு இப்பிரச்சார இயக்கம் தமிழகமெங்கும் புரட்சிப் புயலாக வீசியது. கோடி கோடியாய் வாரியிறைத்து ஓட்டுக் கட்சிகள் நடத்திய ஆரவாரப் பிரச்சாரத்துடன் ஒப்பிடும்போது, இது மிகக் குறைவானதுதான் என்றாலும் இது மக்களிடம் ஏற்படுத்திய தாக்கமோ மிக உயர்வானது.

உசிலம்பட்டி வட்டம் முண்டு வேலம்பட்டியில், வி.வி.மு. சார்பில் பார்ப்பன பண்பாட்டு எதிர்ப்பின் அடையாளமாக, ஏப்ரல் 22-ஆம் நாளன்று தோழர் லெனின் பிறந்த நாள் விழாவும் தேர்தல் புறக்கணிப்புப் பொதுக்கூட்டமும் மாட்டுக்கறி உணவுடன் நடந்தது. விவசாயிகள் திரளாக வந்து இக்கூட்டத்தில் பங்கேற்றதோடு, இப்போலி ஜனநாயகத் தேர்தலைப் புறக்கணிப்பதோடு, இன்னும் நாலு பேருக்கு இதை எடுத்துச் சொல்வோம் என்று உறுதியளித்தனர்.

மே நாளன்று உசிலை மற்றும் கம்பம் வட்டார வி.வி.மு.வினர் இணைந்து உசிலம்பட்டியில், செங்கொடிகள் விண்ணில் உயர எழுச்சிமிகு முழக்கங்களுடன் ஊர்வலமும் அதைத் தொடர்ந்து பொதுக் கூட்டமும் நடத்தினர். நாடு மீண்டும் காலனியாக்கப்படுவதை எதிர்த்தும் பார்ப்பன பாசிச பயங்கரவாதத்தை எதிர்த்தும் தேர்தலைப் புறக்கணித்து மக்கள் சர்வாதிகார மன்றங்களைக் கட்டியமைக்க வேண்டிய அவசியத்தை விளக்கியும் தோழர்கள் சிறப்புரையாற்றினர். இறுதியில், உசிலை வட்ட வி.வி.மு. நடத்திய "இரட்டை நாக்கு" எனும் நாடகம் சிறப்பானதொரு வரவேற்பைப் பெற்றது.

மே 5-ஆம் நாளன்று திருமங்கலத்தில் வி.வி.மு. சார்பில் கார்ல் மார்க்ஸ் பிறந்த நாள் விழா, தேர்தல் புறக்கணிப்பு பிரச்சார பொதுக்கூட்டமாக நடந்தது. போலி ஜனநாயகத்தின் யோக்கியதையைச் சந்திக்கு இழுத்து அம்பலப்படுத்திய இப்பொதுக்கூட்டமும் இறுதியில் நடத்தப்பட்ட, ஓட்டுக் கட்சிகளைத் திரைகிழிக்கும் "இரட்டை நாக்கு" நாடகமும் மக்களிடம் தேர்தல் புறக்கணிப்பு அரசியலை விதைத்து நம்பிக்கையூட்டின.

சாத்தூரில், வி.வி.மு., பு.மா.இ.மு. ஆகிய அமைப்புகளின் சார்பில் போலி ஜனநாயகத் தேர்தலை அம்பலப்படுத்தி நகரின் முக்கிய வீதிகளில் 5.5.04 அன்று தட்டிகள் கட்டப்பட்டன. இதைக் கண்டு பீதியடைந்த ஓட்டுக் கட்சிகள் போலீசிடம் புகார் செய்ய, வட்டாட்சியர் முன்னிலையில் அவற்றை போலீசார் கழற்றி எடுத்துச் சென்று முடக்கினர். பின்னர் 8.5.04 அன்று, சாத்தூர் அருகேயுள்ள மேட்டமலையில், தேர்தல் புறக்கணிப்பு துண்டுப் பிரசுரங்களை தோழர்கள் வீடு வீடாக விநியோகித்து பிரச்சாரம் செய்தனர். உழைக்கும் மக்களோ பேருற்சாகத்துடன் வரவேற்று, நாங்கள் என்ன நினைத்தோமோ, அதை நீங்கள் சரியாகச் சொல்கிறீர்கள் என்று ஆதரித்தனர். இதைக் கண்டு பீதியடைந்த அ.தி.மு.க.வினர் போலீசில் புகார் செய்ய, சாத்தூர் போலீசார் ஆபாசமாகப் பேசியதாக ஐந்து தோழர்கள் மீது பொய் வழக்கு சோடித்து சிறையிலடைத்தனர்.

பெரம்பலூர் மாவட்டம் பாடலூரில் 28.4.04 அன்று தேர்தல் புறக்கணிப்புப் பொதுக்கூட்டத்தை வி.வி.மு. நடத்தியது. குடிக்கக் கூட தண்ணீர் இல்லாமல் இப்பகுதிவாழ் மக்கள் தத்தளிக்கும் போது, ஓட்டுப் போட்டால் பிரச்சினை தீருமா என்று கேள்வி எழுப்பி நடந்த இப்பொதுக்கூட்டமும் அதைத் தொடர்ந்து ம.க.இ.க. நடத்திய "பாசிசப் பேயோட்டல்" கலை நிகழ்ச்சியும் விவசாயிகளிடம் பெருத்த வரவேற்பைப் பெற்றது.

திருநெல்வேலியில் மே நாள் பேரணி - பொதுக் கூட்டம் நடத்த பு.மா.இ.மு. ஏற்பாடு செய்தது. பேரணி நடத்த அனுமதி மறுத்த போலீசார். "ஓட்டுப் போடாதே" என்று பிரச்சாரம் செய்தால் வழக்கு பதிவு செய்வோம் என்ற மிரட்டலுடன் கடைசி நேரத்தில் பொதுக்கூட்டம் நடத்த அனுமதித்தது. மே நாள் பேரணிக்

கோத்தகிரியில் போலீசு தடையை மீறி புரட்சிகர அமைப்புகள் நடத்திய மே நாள் பேரணி.






படிப்பகம்

www.padippakam.com

குக் கூட அனுமதி மறுத்து, இப்படித்தான் பொதுக்கூட்டம் நடத்த வேண்டும் என்று கட்டளையிடுவதன் மூலம் நாட்டை உண்மையில் ஆள்வது அதிகார வர்க்கமும் போலீசும்தான் என்பதை நிரூபித்த நெல்லை போலீசுக்கு 'நன்றி' தெரிவித்து, பொதுக்கூட்டத்தில் உரையாற்றிய தோழர்கள் இப்போலி ஜனநாயக ஆட்சிமுறையை வீழ்த்தி புதிய ஜனநாயக அரசமைக்க அறைகூவல் விடுத்தனர். அதைத் தொடர்ந்து, இந்துவெறி பாசிச பயங்கரவாத ஆர்.எஸ்.எஸ். கும்பவின் சதிகளை அம்பலப்படுத்தி ம.க.இ.க. மையக் கலைக்குழு நடத்திய புரட்சிகர கலைநிகழ்ச்சி தேர்தல் புறக்கணிப்பு பிரச்சாரத்துக்கு மேலும் வலுவூட்டியது. பின்னர், மே 7-ஆம் நாளன்று போலி ஜனநாயகத் தேர்தலைப் புறக்கணிக்கக் கோரி சுவரொட்டி ஒட்டிய 'குற்றத்'துக்காக பு.மா.இ.மு. தோழர்கள் இருவர் மீது போலீசார் பொய்வழக்கு சோடித்து சிறையிலடைத்தனர்.



திருச்சியில் நடந்த மே நாள் பொதுக்கூட்டத்தில் சிறப்புரையாற்றும் ம.க.இ.க. மாநிலப் பொருளாளர் தோழர் சீனிவாசன்.

நாகை மாவட்டம் திருமருகல் ஒன்றியத்தில் பு.மா.இ.மு.வினர் ஏப்ரல் 23-ஆம் தேதியன்று காலை 10 மணி முதல் இரவு 10 மணி வரை சன்னா நல்லூர் ரயிலடியில் தொடங்கி திட்டச் சேரி முடிய 14 கிராமங்களில் சைக்கிள்களில் பேரணியாகச் சென்று தேர்தல் புறக்கணிப்புப் பிரச்சாரத்தை நடத்தினர். சைக்கிள்களில் செங்கொடிகள் - முழக்க அட்டைகளுடன் "போலி ஜனநாயகத் தேர்தலைப் புறக்கணிப்போம்! மக்கள் சர்வாதிகார மன்றங்களைக் கட்டியமைப்போம்!" என்று ஒலிபெருக்கியில் முழங்கியபடி சென்ற இந்தப் பிரச்சாரப் பேரணியும் கிராமங்களில் நடந்த தெருமுனைக் கூட்டங்களும் விவசாயிகளிடம் உற்சாகமான வரவேற்பைப் பெற்றது. பின்னர் மே 7-ஆம் நாளன்று, இதேபோன்று திருவாரூர் - அம்மையப்பனிலிருந்து திருத்துறைப்பூண்டி வரை 45 கி.மீ தூரத்துக்கு சைக்கிள் பேரணியும் தேர்தல் புறக்கணிப்பு பிரச்சாரமும், தெருமுனைக் கூட்டங்களும் பாடல்களும் மக்களிடம் புரட்சிகர அரசியலை விதைத்தது.

சிவகங்கை மாவட்டம் திருப்புவனத்தில் தேர்தல் புறக்கணிப்பு பிரச்சாரத்தை மேற்கொண்ட பு.மா.இ.மு. தோழர்கள். அதன் தொடர்ச்சியாக மே 5-ஆம் நாளன்று தேர்தல் புறக்கணிப்புப் பொதுக்கூட்டத்தை நடத்தினர். இப்பகுதியில் இயங்கும் ஓட்டுக் கட்சிகள் அனைத்தும் அன்று தங்கள் பிரச்சாரத்தை நிறுத்திக் கொண்டு பு.மா.இ.மு. கூட்டத்தை ஆவலுடன் எதிர்பார்த்து அணிதிரண்டன. பெருமளவில் அரசு ஊழியர்களும் உழைக்கும் மக்களும் திரண்டு வந்த இப்பொதுக்கூட்டமும் ம.க.இ.க.வின் "பாசிசப் பேயோட்டல்" கலை நிகழ்ச்சியும் நக்சல்பாரி அரசியலையும் ஓட்டுக் கட்சிகளைப் புறக்கணித்துப் புரட்சிகர அமைப்புகளில் உழைக்கும் மக்கள் அணிதிரள வேண்டிய அவசியத்தையும் உணர்த்தியது.

சேலத்தில் பு.மா.இ.மு.வினர் தேர்தலைப் புறக்கணித்து புரட்சிப் பாதையில் அணிதிரள வேண்டிய அவசியத்தை விளக்கி துண்டுப் பிரசுரம் வெளியிட்டு நெசவாளர்களும் உழைக்கும் மக்களும் நிறைந்த பகுதிகளில் வீடு வீடாகப் பிரச்சாரம் செய்தனர். ஏப்ரல் 27-ஆம் தேதியன்று அஸ்தம்பட்டியில் இவ்வாறு பிரச்சாரம் செய்து கொண்டிருந்த மூன்று தோழர்களைப் போலீசார் கைது செய்து பொய் வழக்கு சோடித்து நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தினர். ஆனால் வழக்கை சோடித்ததில் உள்ள ஓட்டைகள் காரணமாக, வழக்கு மன்றம் முறையாக வழக்கைப் பதிவு செய்து ஆஜர்படுத்துமாறு போலீசை திருப்பியனுப்பியது. இவ்வாறு மூன்று முறை போலீசு திருப்பியனுப்பப்பட்ட கூத்து நடந்தது. கைதான தோழர்களும் விடாமல் மூன்று முறையும் போலீசு வாகனத்திலிருந்தபடியே, தேர்தல் புறக்கணிப்பு முழக்கங்களை உணர்வோடும் உற்சாகத்தோடும் எழுப்பி மக்களை ஈர்த்தனர்.

கோவையில் போலீசாரின் கெடுபிடிகளுக்கு மத்தியில், கோவை மாநகரிலும் போத்தனூர், வெள்ளலூர் பகுதிகளிலும் ம.க.இ.க., பு.மா.இ.மு., பு.ஜ.தொ.மு. ஆகிய அமைப்புகள் தேர்தல் புறக்கணிப்பு சுவரொட்டி பிரச்சார இயக்கத்தை மேற்கொண்டன. நீலகிரி மாவட்டம் கோத்தகிரியில் 45-க்கும் மேற்பட்ட கிராமங்களில் பு.மா.இ.மு. வீடுவீடாக துண்டு பிரசுரம் விநியோகம் செய்து பிரச்சாரம் செய்தது. கோவை - நீலகிரி மாவட்ட புரட்சிகர அமைப்புகள், கோத்தகிரியில் மே நாள் ஊர்வலம் - பொதுக்கூட்டம் நடத்த போலீசாரிடம் அனுமதி கோரியிருந்த போதிலும், சட்டம் - ஒழுங்கைக் காரணம் காட்டி போலீசு அனுமதி மறுத்தது. ஆனாலும் தடையை மீறி 300-க்கும் மேற்பட்டோர் திரண்டு, திட்டமிட்டபடி நகரின் முக்கிய வீதிகளின் வழியே எழுச்சிமிகு ஊர்வலத்தை நடத்தினர். பேருந்து நிலையம் அருகே ஊர்வலத்தை வழிமறித்த போலீசார், அனைவரையும் கைது செய்யப் போவதாக எச்சரித்தனர். அதற்கும் தயாராகவே உள்ளோம் என்று தோழர்கள் உறுதியாக நிற்கவே, போலீசு பின்வாங்கிக் கொண்டது. ஊர்வல முடிவில் போலீசின் அடாவடித்தனத்தையும் தேர்தல் புறக்கணிப்பு அரசியலை விளக்கியும் தோழர்கள் உரையாற்றினர். இதுபோல தடையை மீறிய ஊர்வலம் என்பது கோத்தகிரியின் வரலாற்றிலேயே முதன்முறை என்று பாராட்டிய உழைக்கும்

"ஓட்டுப் போடாதே! புரட்சி செய்!" - ஜீப் மற்றும் இரு சக்கர வாகனங்களில் திருவெண்ணெய் நல்லூர் வட்டார வி.வி.மு.வினர் நடத்திய தேர்தல் புறக்கணிப்புப் பிரச்சாரம்.




படிப்பகம்

www.padippakam.com

மக்கள், இந்த அரசியல் பிரச்சார இயக்கத்துக்குப் பெரிதும் ஆதரவளித்தனர். கோவை மாநகரில் குரும்பர் வீதி - இடையர் வீதி சந்திப்பில் மே 9-ஆம் நாளன்று தேர்தலைப் புறக்கணிக்கக் கோரி துண்டுப் பிரசுரம் விநியோகித்து பிரச்சாரம் செய்த 4 தோழர்கள் போலீசாரால் கைது செய்யப்பட்டு, தேர்தல் முடிந்த பின்னர் பிணையில் விடுவிக்கப்பட்டனர்.



திருவாரூர் அம்மையப்பனிலிருந்து திருத்துறைப்பூண்டி வரை பு.மா.இ.மு. தோழர்கள் நடத்திய தேர்தல் புறக்கணிப்பு சைக்கிள் பிரச்சார ஊர்வலம்.

திருவெண்ணெய் நல்லூர் வட்ட வி.வி.மு; விழுப்புரம் நகர பு.மா.இ.மு; மற்றும் நெய்வேலி பு.ஜ.தொ.மு. ஆகியன இணைந்து விழுப்புரத்தில் மே நாள் பேரணி - பொதுக் கூட்டத்தை தேர்தல் புறக்கணிப்பு அரசியல் பிரச்சாரமாக நடத்தின. அதைத் தொடர்ந்து மே 7-8 தேதிகளில் ஜீப் மற்றும் இருசக்கர வாகனங்களில் ஊர்வலமாகச் சென்று திருவெண்ணெய் நல்லூர் வட்டார வி.வி.மு. தோழர்கள் 50-க்கும் மேற்பட்ட கிராமங்களில் தேர்தல் புறக்கணிப்பு பிரச்சாரக் கூட்டங்களை நடத்தினர். கிராமங்களில் வீதிவீதியாக பிரச்சார வாகனங்கள் ஊர்ந்து செல்ல, ஒலிபெருக்கிகளின் முழக்கமிட்டுக் கொண்டே ''துடப்பக் கட்டைக்கு பட்டுக் குஞ்சம் கட்டும் திருவிழா'' என்ற தலைப்பிலான துண்டுப் பிரசுரத்தை விநியோகித்த தோழர்கள், இறுதியில் ஒவ்வொரு கிராமத்திலும் தெருமுனைக்கூட்டங்களை நடத்தினர்.

திருச்சியில், ம.க.இ.க., பு.மா.இ.மு., வி.வி.மு. ஆகிய அமைப்புகளோடு அனைத்து தரைக்கடை வியாபாரிகள் பாதுகாப்புச் சங்கம், ஆட்டோ ஓட்டுநர் பாதுகாப்புச் சங்கம் ஆகியன இணைந்து தேர்தல் புறக்கணிப்பு இயக்கத்தை திருச்சியிலும் சுற்றுப்புற கிராமங்களிலும் வீச்சாக கொண்டு சென்றன. அதன் தொடர்ச்சியாக மே நாளன்று பொதுக்கூட்டம் - கலை நிகழ்ச்சிகளை நடத்தின. மே 9-ஆம் நாளன்று தேர்தல் புறக்கணிப்பு முழக்க அட்டைகளுடன் திருச்சி காந்திபுரம், மூவேந்தர் நகர், செட்டித் தெரு முதலான பகுதிகளில் 18 தோழர்கள் முழக்கமிட்டபடியே வீடுவீடாக துண்டுப் பிரசுரம் விநியோகித்து பிரச்சாரம் செய்தனர். மே 8-ஆம் தேதியுடன் தேர்தல் பிரச்சாரம் முடிவடைந்து விட்டதாக கூறி அனைவரையும் போலீசார் கைது செய்தனர். பின்னர் 6 பேர் மீது மட்டும் பொய் வழக்குப் போட்டு சிறையிலடைத்தனர்.

திருச்சி மாவட்டம் இலால்குடி வட்டம் இராமநாதபுரம் கிராமத்திலுள்ள கோத்தாரி சர்க்கரை ஆலையின் எரிசாராய உற்பத்திக் கழிவுகளால் இப்பகுதி சுற்றுச்சூழலும் குடிநீரும் நஞ்சாகி விட்டதை எதிர்த்து இக்கிராம மக்கள் தேர்தலைப் புறக்கணிப்பதாக பிரசுரம் வெளியிட்டு பகிரங்கமாக அறிவித்தனர். இதைத்தொடர்ந்து இலால்குடி வட்டார வி.வி.மு., இக்கிராமத்தில் தெருமுனைக் கூட்டங்களை நடத்தி தேர்தல் புறக்கணிப்பு அரசியல் பிரச்சாரத்தை மேற்கொண்டது. இதனால் உணர்வு பெற்ற இக்கிராம மக்கள் தேர்தலில் யாருக்கும் ஓட்டுப் போடாமல் முற்றாகப் புறக்கணித்தனர். வெறிச்சோடிக் கிடக்கும் ஓட்டுச்சாவடிகளைப் படம் பிடித்து பத்திரிகைகள் பரபரப்பு செய்தி வெளியிட்டு அங்கலாய்த்தன.

ஓசூரில் தொழிலாளர் தினமாகிய மே தினத்தன்று எல்லா ஓட்டுக்கட்சிகளும் அதை ஓட்டு வேட்டைக்கான விடுமுறை நாளாகக் கொண்டாடிய வேளையில், ''தொழிலாளர்களை நவீனக் கொத்தடிமைகளாக்காதே! ஓட்டுப் போடாதே! புரட்சி செய்!'' எனும் முழக்கங்களின் அடிப்படையில் பு.ஜ.தொ.மு. மே நாளன்று தொழிலாளர்கள் நிறைந்த ராம் நகரில் பொதுக்கூட்டத்தை நடத்தியது. இப்பொதுக்கூட்டத்தை தருமபுரி பு.மா.இ.மு.வும் பென்னாகரம் வட்ட வி.வி.மு.வும், இணைந்து நடத்தின. தேர்தல் புறக்கணிப்பு

தொடர்ச்சி 26-ஆம் பக்கம்

## பார்ப்பனக் கைக்கூலி ''தடா'' பெரியசாமிக்கு செருப்பு - விளக்குமாறு தோரணம் கட்டி வரவேற்பு!

**சி**தம்பரம் நாடாளுமன்றத் தொகுதியில் பா.ஜ.க. வேட்பாளராக நிறுத்தப்பட்ட ''தடா'' பெரியசாமி, தீவிர இடதுசாரியாக வேடமிட்டுச் சிறிது காலம் திரிந்துவிட்டு, பின்னர் விடுதலைச் சிறுத்தைகள் அமைப்பில் செயல்பட்டு, அங்கே நடந்த பதவிச் சண்டையால் வெளியேறி, தலித் இன விடுதலைக் கழகம் என்ற அமைப்பைத் தொடங்கியவர். இந்த பெயர்ப் பலகை அமைப்பை காஞ்சி சங்கர மடத்தின் காலடியில் வைத்து எலும்புத் துண்டுகளைப் பெற்று, பார்ப்பன ஜெயாவின் மதமாற்றத் தடைச் சட்டத்தை ஆதரித்துக் கூட்டம் நடத்தி விசுவாசமாக வாலாட்டியவர். தன்னை நம்பகமான - விசுவாசமான பார்ப்பனக் கைக்கூலி என்று நிரூபித்துக் காட்டியதற்குப் பரிசாக, பா.ஜ.க. வேட்பாளராக நிறுத்தப்பட்டவர்.

தலித் இனத்துரோகியும் பார்ப்பன - பாசிஸ்டுகளின் கைக்கூலியுமான இந்தக் கழிசடையை அம்பலப்படுத்தித் தனிமைப்படுத்த வேண்டியது தாழ்த்தப்பட்ட மக்களின், பார்ப்பன எதிர்ப்பாளர்களின் மிக அவசியமான கடமையாகும். இதனடிப்படையில் விருத்தாசலம் வட்ட வி.வி.மு. 17.4.04 அன்று ஆலிச்சிகுடிக்கு ஓட்டுப் பொறுக்க வரவிருந்த ''தடா'' பெரியசாமிக்கு, உரிய மரியாதையுடன் வரவேற்பு அளித்தது. அன்று அதிகாலையிலேயே ஆலிச்சிக்குடி கிராமத்தில் கிழிந்த செருப்பு, விளக்குமாறு தோரணம் கட்டி இப்பார்ப்பனக் கைக்கூலிக்கு வரவேற்பளித்த வி.வி.மு.வினர், தடா பெரியசாமியை அம்பலப்படுத்தி தட்டிகளையும் கட்டி வைத்தனர். இப்புதுமையான வரவேற்பைக் கண்டு உவகையும் உற்சாகமும் அடைந்த கிராம மக்கள், வி.வி.மு.வின் செயல்பாட்டை பெரிதும் ஆதரித்தனர்.

இத்தகவலையறிந்து பீதியுடன் ஓடிவந்த போலீசார், தோரணங்களை அறுத்து தட்டிகளைக் கிழித்தெறிந்ததோடு, வட்டார வி.வி.மு. அமைப்பாளர் தோழர் ஜெயகாந்த் சிங்கைக் கைது செய்தனர். சங்கர மடத்தின் உத்தரவின்படி, போலீசாரை அரிவாளால் வெட்டிக் கொல்ல முயன்றதாகவும், பணி செய்ய விடாமல் தடுத்ததாகவும் தோழர் மீது பொய் வழக்குகளைச் சோடித்து சிறையிலடைத்துள்ளனர். கருத்துரிமையை நசுக்கி அடக்குமுறையை ஏவுவதன் மூலம் பார்ப்பன எதிர்ப்பையும் சுயமரியாதையையும் நசுக்கி விடலாம் என்று பார்ப்பனக் கும்பலும் போலீசும் கனவு காண்பது ஒருநாளும் நனவாகாது! ●



படிப்பகம்

www.padippakam.com

# பங்குச் சந்தை சூதாடிகளின் பகிரங்க மிரட்டல்

நாடாளுமன்றத் தேர்தல் முடிவுகள்வெளிவந்த மறுவாரத்தில், இந்தியப் பங்குச் சந்தை வீழ்ச்சியடைந்தது. இந்த வீழ்ச்சியின் மதிப்பை 1,33,000 கோடி ரூபாய் எனக் கணக்குப் போட்டுச் சொன்னபொருளாதார நிபுணர்கள், பங்குச்சந்தை வீழ்ச்சியடைந்த தினத்தை, ''கருப்பு திங்கட்கிழமை'' என வருணித்தார்கள். முதலாளித்துவப் பத்திரிகைகளும், தாராளமயத்தின் ஆதரவாளர்களும் இந்தியாவே திவாலாகிப் போனதைப்போல ஒப்பாரிவைத்தார்கள்.

''இடதுசாரிகள் ஆதரவோடு காங்கிரசு ஆட்சி அமைக்கப் போகிறது. கம்யூனிஸ்டுகள் பொதுத்துறைகளைத் தனியார்மயமாக்கக்கூடாது என நிபந்தனை விதிக்கிறார்கள். அதனால்தான் பங்குச் சந்தையில் முதலீடு செய்ய வெளிநாட்டு நிறுவனங்கள் தயங்குகின்றன. அதனால்தான் பங்குச் சந்தை வீழ்ந்தது. இது இந்தியாவின் எதிர்காலத்துக்கு நல்லதல்ல'' எனக் கண்டனங்களும், விமர்சனங்களும் எழுந்தன. இறுதியாக, சோனியாவால் பிரதமராகத் தேர்வு செய்யப்பட்ட மன்மோகன் சிங் தொலைக்காட்சியில் தோன்றி, ''யாமிருக்க பயமேன்?'' என அருள்வாக்கு சொல்லி, இந்த ஒப்பாரி நாடகத்தை முடித்துவைத்தார்.

பங்குச் சந்தையின் ஏற்ற, இறக்கத்திற்கும் பாமர இந்தியக் குடிமகனுக்கும் என்ன தொடர்பு இருக்கிறது? பங்குச் சந்தை ஒளிர்ந்தபொழுதுதான், நாடெங்கிலும் ஆயிரக்கணக்கான விவசாயிகள் கடன் தொல்லையில் மாட்டிக் கொண்டு தற்கொலைசெய்து கொண்டார்கள். பங்குச் சந்தையின் புள்ளி உயர்ந்த பொழுதெல்லாம், நெல்லுக்கும், கரும்புக்கும், கோதுமைக்குமான விலை உயரவில்லை; இவற்றுக்கு நியாயமான விலை கேட்டு அவர்கள் போராட வேண்டியிருந்தது. ஆயிரக்கணக்கான சிறு தொழில்கள் மூடப்பட்டன. பல இலட்சக்கணக்கான தொழிலாளர்களின் வேலை பறிபோனது.

உண்மை நிலவரம் இப்படி இருக்கையில், பங்குச் சந்தை நன்றாக இருந்தபொழுது இந்தியாவெங்கும் பாலாறும், தேனாறும் ஓடியது போலவும்; பங்குச்சந்தை வீழ்ச்சியைச்சந்தித்த மறுநிமிடமே ஒவ்வொரு இந்தியக் குடிமகனும் நொடித்துப் போய்விட்டது போலவும் பத்திரிக்கைகள் எழுதுவதை வடிகட்டிய அயோக்கியத்தனம் என்றுதான் சொல்ல வேண்டும். சொல்லப் போனால், பங்குச் சந்தையில் வியாபாரம் சூடாக நடப்பதும்; திடீரென அதல பாதாளத்தில் சரிவதும் சூதாட்டம் போலத்தான் நடந்து வருகிறது.

தேர்தலில் தோற்றுப் போய்விட்ட தேசிய ஜனநாயகக் கூட்டணி அரசு, தனது ஆட்சியில், இந்தியப் பங்குச் சந்தையில் நுழைந்துள்ள அந்நிய முதலீட்டு நிறுவனங்களுக்குப் பல வரிச்சலுகைகளை வாரியிறைத்தது. தேர்தல் நெருங்கிய சமயத்தில், எண்ணெய் நிறுவனங்களின் பங்குகளையும் தனியாருக்கு விற்க அனுமதியளித்தது. இதற்குக் கைமாறாக, கடந்த நான்கே மாதங்களில், அந்நிய முதலீட்டு நிறுவனங்கள் 18,000 கோடி ரூபாயைப் பங்குச் சந்தையில் கொட்டி, அதை ஊதிப் பெருக்க வைத்தன. இதைக் காட்டிதான் பா.ஜ.க. கூட்டணி ''இந்தியா ஒளிர்கிறது'' என்ற பம்மாத்தில் இறங்கியது.

பங்குச் சந்தை வீழ்ச்சியையடுத்து, மும்பய் பங்குச் சந்தை முன் திடீர் ஆர்ப்பாட்டம் நடத்தும் தரகர்கள்.



இன்னொருபுறம், பங்கு வர்த்தக நிறுவனங்கள் பா.ஜ.க. கூட்டணியின் வெற்றிக்காக 150 கோடி ரூபாயை விளம்பரச் செலவுக்காகவும், கருத்து கணிப்புகளுக்காகவும் அள்ளி இறைத்தன. ஆனால், இந்தச் சூதாடிகளின் கணிப்புக்கு மாறாக தேர்தல் முடிவுகள் அமைந்தவுடன், அந்நிய முதலீட்டு நிறுவனங்கள் தங்கள் கைகளில் இருந்த பங்குகளைக் கொத்து கொத்தாக விற்கத் தொடங்கின. அதாவது, அவர்கள் ஊதிப் பெருக்கிய நீர்க்குமிழியை அவர்களே உடைத்தார்கள்.

அந்தக் ''கருப்பு திங்கள்கிழமை'' அன்று நடந்தது வர்த்தகமே அல்ல; அது ஒரு மிரட்டல். மாமூல் கொடுக்காவிட்டால் தொழில் செய்ய முடியாது என ரவுடிகள் வியாபாரிகளை மிரட்டுவது போல, அந்நிய நிறுவன முதலீட்டாளர்கள் இந்திய அரசை மிரட்டினார்கள்.

இந்திய அரசிடம் உள்ள 10,300 கோடி அமெரிக்க டாலர் அந்நியச்செலாவணி கையிருப்பில், ஏறத்தாழ 3,130 கோடி டாலர் அந்நிய முதலீட்டு நிறுவனங்களுக்குச் சொந்தமானது. ''நாங்கள் பங்குகளை விற்றுவிட்டு, இந்தியாவில் இருந்து வெளியேறினால், உங்களின் அந்நியச் செலாவணி கையிருப்பு கரைந்து போகும். அதனால் எங்களுக்குச் சாதகமாக நடந்து கொள்ளுங்கள்'' என அந்நிறுவனங்கள் விடுத்த எச்சரிக்கைதான் இந்தப் பங்குச் சந்தை வீழ்ச்சி.

தொழிலாளர்கள் தங்களின் உரிமைகளுக்காக வேலை நிறுத்தம் செய்தால், அரசை மிரட்டுகிறார்கள்; பொருளாதாரத்தைச் சீர்குலைக்கிறார்கள் என பழிபோட்டு அவர்களைக் கைது செய்கிறது, இந்த 'மக்கள்' அரசாங்கம். ஆனால், 1.33 இலட்சம் கோடி ரூபாய் நட்டம் ஏற்படுத்தி, ''கருப்பு திங்கட்கிழமை

தொடர்ச்சி 15-ஆம் பக்கம்

www.padippakam.com

## தேர்தல் முடிவுகளும் ஜெயாவின் சலுகை அறிவிப்புகளும்

# ஜனரஞ்சக கொள்கையா? நயவஞ்சக சதியா?

**நா**டாளுமன்றத் தேர்தல் தோல்வியால் ஜெயலலிதா, 'பூஜ்ஜிய ஸ்ரீ' ஆனார். செய்த பாவங்களுக்கு உடனடிப் பரிகாரம் தேடி யாகம், வேள்வி, வழிபாடுகளை நடத்துவதோடு தமிழக மக்கள் மீது சலுகைகளையும் வீசுகிறார்.

எச்.ரேஷன் கார்டு முறை ரத்து, அரிசி கூப்பன் ரத்து, விவசாயிகளுக்கு இலவசமின்சாரம், சத்துணவில் திரும்பவும் முட்டை, பள்ளி மாணவர்களுக்கு மீண்டும் இலவச பஸ் பாஸ், அரசு ஊழியர்கள் மீதான தண்டனைகள் ரத்து, கருணாநிதி உள்ளிட்ட எதிர்க்கட்சித் தலைவர்கள் மீதான 'டெஸ்மா' வழக்குகள் வாபஸ், பத்திரிக்கைகள் - தொலைக்காட்சிகள் மீதான அவதூறு வழக்குகள் வாபஸ், இந்து-முரசொலி பத்திரிக்கைகள் மீதான தண்டனைகள் ரத்து, கட்டாய மதமாற்றத் தடைச் சட்டம் ரத்து என்று ஒரேநாளில் பல பாவங்களைக் கழுவிக்கொண்டார்.

'கஜானா காலி' என்று பல்லவி பாடி மேற்படி ''சலுகை''கள் அனைத்தையும் மக்களிடமிருந்து பறித்த ஜெயலலிதா, தற்போது ஒரே இரவில் கஜானாவை எப்படி நிரப்பினார் என்ற இரகசியத்தை சொல்லவில்லை.

தொடர்ந்து ''அம்மா''வின் கரிசனப் பார்வை தங்கள் மீதும் படவேண்டும் என்று அம்மாவின் கருணை உள்ளத்தை வாழ்த்தி பல பக்க விளம்பரங்கள் தினசரிகளில் தினமும் பளிச்சிடுகின்றன. ''அம்மா எங்களுக்கும் கருணை காட்டுங்கள்'' என்று நீண்ட வரிசையில் தட்டேந்தி நிற்கிறார்கள், லாட்டரி சீட்டு சூதாடிகள் முதல் சினிமா கழிசடைகள் வரை.

ஆனால், உழைக்கும் மக்களோ, ஜெயலலிதாவின் இந்த அதிரடி அறிவிப்பைக் கண்டு பெரிதாக அலட்டிக் கொள்ளவில்லை. ''ஜனங்க ஒட்டு மொத்தமா தேர்தல்ல இந்தம்மாவுக்கு பேதி மருந்து கொடுத்துட்டாங்க; அது பன்ற வேலைதான் இது'' என்று நக்கலடிக்கின்றனர். அ.தி.மு.க. தொண்டர்களும் சலிப்பாக, ''இதைத் தேர்தலுக்கு முன்பே செய்திருந்தால் ஒன்றிரண்டு சீட்டாவது கிடைத்திருக்கும்'' என்கின்றனர். தி.மு.க. தலைவர் கருணாநிதி ''எங்களுக்கு கிடைத்த 41-ஆவது வெற்றி இது'' என்று களிப்படைகிறார்.

ஆக, பாசிச ஜெயலலிதாவின் திடீர் சலுகைகள் அனைத்தும் சொம்பை வைத்து விட்டு குடத்தைத் தூக்கிச் செல்லும் திருட்டுத்தனம் என்பதில் எள்ளளவும் யாருக்கும் சந்தேகம் இல்லை.

ஜெயலலிதா மதமாற்ற தடைச்

இலவச மதிய உணவிற்காகக் காத்துக் கிடக்கும் தஞ்சை விவசாயிகள் (மேலே); இராணிமேரிக் கல்லூரியை இடிக்கக் கூடாது என ஆர்ப்பாட்டம் நடத்திய அக்கல்லூரி மாணவிகள். ஜெயா ஆட்சியின் அவலங்களையும், அட்டூழியங்களையும் மறக்க முடியுமா?








படிப்பகம்

www.padippakam.com

சட்டத்தை வாபஸ் பெற்றதைக் கண்டு பார்ப்பனபயங்கரவாதிகள் ''வேதனையால் துடிதுடித்துப் போனதாக'' நடிக்கிறார்கள். கபட சந்நியாசி, பார்ப்பன பயங்கரவாதி இராம. கோபாலன், ஜெயலலிதாவின் முடிவைக் கண்டு, ''தூக்கம் வராமல் தவிப்பதாக'' புரள்கிறார். ''பெரியவாள் முகத்தில் கரியைப் பூசிவிட்டார்முதல்வர்'' என்றுபுலம்புகிறார். மக்கள் உரிமைகள் பறிக்கப்பட்ட போது வாய் திறக்காத இக்கும்பல், இப்போது அனைத்தையும் திறந்து போட்டு குதிக்கிறது.

'தனது தோல்விக்கு காரணங்களைத் தேடி மீண்டும் வீணாகக் குழம்புகிறார்' என்று கூறி ஜெயலலிதாவின் தோல்வியை ஆராய்ந்த பார்ப்பனப் பத்திரிக்கைகள், 'விகிதாசார கணக்குப்படி பார்த்தால் ஜெயலலிதாவுக்கு கோடி பேர் வாக்களித்திருக்கிறார்கள். அ.தி.மு.க. வின் ஓட்டு வங்கியில் எந்த ஓட்டையும் விழவில்லை'' என்கின்றன.

பார்ப்பனப் பத்திரிக்கைகளின் ஆய்வுப்படியும், உண்மை நிலவரப்படியும், தேர்தல் கணக்குகளை கூட்டி, கழித்து, வகுத்து, பெருக்கிப் பார்த்தால் மிஞ்சுவது இதுதான்.

வாக்காளர்கள் வாக்கு சீட்டை துப்பாக்கி தோட்டாவாகவோ, ஜனநாயக ஈட்டியாகவோ எல்லாம் பயன்படுத்தவில்லை. அதிகம் போனால், வாக்கு சீட்டை, வாழைப்பழத் தோல் போல் கண்ட இடத்தில் கடாசி விடுகிறார்கள். இதில், கூட்டணி அமைத்து கை கோர்த்து செல்பவர்கள் தப்பிப்பதும், தனித்து செல்பவர்கள் தலைகுப்புற விழுவதும்தான்நடக்கிறது.

ஆக, ஜனநாயகத்தை காப்பாற்ற வேண்டும், மத நல்லிணக்கம் தழைக்க வேண்டும் என்பதற்காகதி.மு.க., - காங்கிரசு கூட்டணிக்கு மக்கள் வாக்களிக்கவில்லை. அப்படியெல்லாம், இக்கட்சிகள்செய்யும் என்று மக்கள் பெரிதாக நம்பவுமில்லை. அப்படியென்றால், இதே காங்கிரசுக் கட்சி ஆட்சியை கேரளத்திலும், கர்நாடகத்திலும் மக்கள் ஏன் தோற்கடிக்க வேண்டும்? அதேபோல், ஜனநாயக விரோத, மதவெறி கட்சிகளுக்கு மக்கள் பாடம் புகட்டியதால், அ.தி.மு.க., பி.ஜே.பி. கூட்டணி மண்ணை கவ்வவில்லை. இதே, பி.ஜே.பி.யைத்தான் இராசஸ்தானிலும் மத்திய பிரதேசத்திலும் பெருவாரியாக மக்கள் தேர்ந்தெடுத்திருக்கிறார்கள்.

தங்களின் அன்றாட பிரச்சினைகளுக்கு பதில் சொல்ல வக்கற்ற ஆளும் கட்சிகள் மீது வழக்கமாக மக்களுக்கு ஏற்படும் வெறுப்புதான் இது. காய்ந்த பூமி மழையில் இளகுவது போல, வெறுப்படைந்த மக்களுக்கு அவ்வப்போது, சலுகைகளை வீசினால் போதும், ஆட்சி உத்திரவாதம் என்பதுதான் எல்லா ஓட்டுப் பொறுக்கிகளும் பின்பற்றும் தந்திரம்! இதை தெளிவாக உணர்ந்த பார்ப்பன பாசிஸ்டு ஜெயலலிதா, காலம் கடந்தாலும் பரவாயில்லை என்று பறித்த உரிமைகளை சலுகைகளாக வாரி இறைக்கிறார். மறுபுறம், அ.தி.மு.க குண்டர்களும் தமிழகத்தைச் சூறையாடுவதற்கு வழிவகை செய்கிறார். லாட்டரி, சாராயம், மணல் குவாரி, அரசுத்துறை கான்ட்ராக்ட்டுகளைத்திறந்து விடக்காய்களைநகர்த்துகிறார்.

எதிரணியினர், நாடாளுமன்றத் தேர்தலில் வெற்றி பெறும்வரை தங்கள் கட்சி அலுவலக அறையிலிருந்து வெளியில் வராதவர்கள்; இப்போது ஜனநாயகத்தைப் பற்றி வாய்கிழியப் பேசுகிறார்கள். ஜெயலலிதா அறிவித்திருக்கும் சலுகைகள் ''ஜனநாயக இயக்கங்களுக்கும் எதிர்க்கட்சிகள் நடத்திய பல்வேறு போராட்டங்களுக்கும் கிடைத்த வெற்றி'' என்று கூசாமல் புளுகுகிறார்கள்.

காவிரி நீருக்காக போராடிய விவசாயிகளின் மண்டையை போலீசு பிளந்த போது, அரிசி விலை உயர்வுக்கு எதிராக பேராடிய மக்களை போலீசு சுற்றி வளைத்துத் தாக்கியபோது, பட்டினியால் மக்கள் இறந்தபோது இந்த எதிர்க் கட்சியினர் என்ன செய்தனர்?

நாசூக்கான வார்த்தைகளால் கண்டன அறிக்கைகளை பத்திரிகைகளுக்கு அனுப்பிவிட்டு, வீட்டில் பேரன் பேத்திகளோடு விளையாடினார்கள். அதிகம் போனால் கஞ்சித் தொட்டிகளைத் திறந்து மக்களைக் கையேந்த வைத்து விளம்பரம் தேடிக் கொண்டார்கள். மக்கள் பிரச்சினைகளை சட்டசபையில் கூட பேச முடியவில்லையென்று புலம்பினார்கள். மக்களுக்கு அல்ல, தனக்கு பாதுகாப்பு இல்லையென்று கருணாநிதி சட்டசபைக்குக்கூட போகவில்லை.

ஆக, விசயம் ஜனநாயகம் அல்ல, அதிகாரம்! எதிரணியினருக்கு அதிகாரம் கைமாறி விட்டது என்றவுடன் மக்களுக்கு ஜனநாயகம் கிடைத்து விட்டதாகப் பசப்புகிறார்கள்.

ஓட்டுப்பொறுக்கிக் கழிசடைகளில் யார் ஆட்சிக்கு வந்தாலும் ஏகாதிபத்திய தளையிலிருந்து நாட்டை மீட்கப்போவதில்லை. 'உலக வங்கி சொல்வதைத் தான் செய்கிறேன்' என்று ஜெயலலிதா, பாசிஸ்ட்டுக்கே உரிய அகங்காரத்தோடு சொல்வதை, எதிரணியினர் அலங்காரத்தோடு சொல்வார்கள்.

புதிய பிரதமர் மன்மோகன்சிங் உதிர்த்த முதல் வாக்கியமே, 'மனித நேயத்துடன் கூடிய பொருளாதார சீர்திருத்தம்'. அது வேறொன்றும் இல்லை! மனித முகத்துடன் கூடிய தாராளமயம்! இதுதான் அமெரிக்க பாணி ஜனநாயகம். கற்பழித்துவிட்டு பிரியாணி பொட்டலம் வாங்கி தரும் போலீசு மனிதநேயம் இது! இதைத்தான் இப்போது ஜெயலலிதா செய்கிறார். 'வீசும்போது கவ்விக் கொள்! கேட்டால் உதைப்பேன்!' என்கிறார். நாய் மாதிரி வாழ்வதா? மனிதர்களாகப் போராடுவதா? என்று இனி மக்கள்தான் முடிவு செய்ய வேண்டும்.

● பச்சையப்பன்

---

13-ஆம் பக்கத் தொடர்ச்சி

யன்று'' இந்தியப் பங்குச் சந்தைகளை இழுத்து மூட வைத்த அந்நிய முதலீட்டு நிறுவனங்களின் மீது அரசாங்கத்தின் சுண்டு விரல் கூடப் படவில்லை. பதவி விலகிப் போனதேசிய ஜனநாயகக் கூட்டணி அரசு, தனக்குத் தெரிந்திருந்ததும், இந்த அந்நியச் சீர்குலைவுவாதிகளின் பெயரைக் கூடச் சொல்ல மறுத்துவிட்டது.

சோனியா, மன்மோகன் சிங்கைப் பிரதமர் ஆக்கியதன் மூலம் பா.ஜ.க.வின் வாயை மட்டும் அடைக்கவில்லை. தனது அரசைச் சந்தேகக் கண்ணோடு பார்த்த அந்நிய முதலீட்டு நிறுவனங்களையும் தாஜா செய்து விட்டார்.

இந்த அரசுக்கு முட்டுக் கொடுக்கும் சி.பி.ஐ., ''அந்நிய நிதி நிறுவன முதலீட்டாளர்களுக்கு நாங்கள் எதிரானவர்கள் அல்ல'' எனக் கூறி குப்புற விழுந்தது. இடதுகளோ, ''சிறு முதலீட்டாளர்களைப் பாதுகாக்கும்படி பங்குச் சந்தையில் சீர்திருத்தம் செய்ய வேண்டும்'' எனக்கூறி, அந்நிய நிதிநிறுவனங்களின் மோசடிக்கு முலாம் பூசினார்கள்.

போலி கம்யூனிஸ்டுகளின் தயவில் நாட்டை ஆளும் ஐக்கிய முன்னேற்ற கூட்டணி அரசு, ''மனித முகத்துடன் கூடிய தாராளமய''த்தை நடைமுறைப் படுத்தப் போவதாக மக்களிடம் வாக்குறுதி கொடுத்திருக்கிறது. அந்த மனித முகத்துக்குச் சொந்தக்காரர்கள் இந்தப் பங்குச் சந்தைச் சூதாடிகள்தான் என்பதை இந்த வீழ்ச்சி அம்பலப்படுத்தி விட்டது.

● சுப்பு

www.padippakam.com

# பொடா சட்டம் ரத்து: பாசிச காங்கிரசின் உண்மை முகம்

இந்து மதவெறி கூட்டணி ஆட்சி ''பொடா'' சட்டத்தைக் கொண்டு வந்த பொழுது, ''இச்சட்டத்தைத் தவறாகப் பயன்படுத்த முடியாது; அப்படியே தவறாகப் பயன்படுத்தினாலும், அதிகாரிகளைத் தண்டிக்க இச்சட்டத்திலேயே வழியுள்ளது'' என இச்சட்டத்திற்கு ஒளிவட்டம் போட்டது. ஆனால், தமிழகத்தில் மட்டுமல்ல, நாடெங்கிலும் இச்சட்டம் ''தவறாக''ப்பயன்படுத்தப்பட்டிருப்பது சட்டபூர்வமாகவே நிரூபிக்கப்பட்டு வருகிறது.

மும்பய் நகரில் இயங்கிவரும் ''பொடா'' சிறப்பு நீதிமன்றம், மும்பயில் நடந்த காட்கோபர் குண்டு வெடிப்பு வழக்கில் கைது செய்யப்பட்ட 14 முசுலீம்களில் 9 பேரை, குண்டு வெடிப்புக்கு தொடர்பே இல்லாதவர்கள் எனத் தீர்ப்பளித்து சமீபத்தில் விடுதலை செய்துவிட்டது. சம்பந்தமே இல்லாதவர்களைக் குண்டு வெடிப்பு வழக்கில் சேர்த்து, ''பொடா''வில் உள்ளேதள்ளிய ''தவறுக்காக'' எந்த அதிகாரியும் தண்டிக்கப்படவில்லை.

போலீசு நினைத்தால் யாரை வேண்டுமானாலும் (அவர்கள் முசுலீம்களாக இருந்துவிட்டால், போலீசின் வேலை இன்னும் எளிதாகிவிடும்) தீவிரவாதி என முத்திரை குத்தி ''பொடா''வின் கீழ் உள்ளே தள்ளிவிடலாம் என்பதற்கு இந்த காட்கோபர் குண்டு வெடிப்பு வழக்குஇன்னுமொரு உதாரணம்!

கடந்த 2002 - ஆம் ஆண்டு டிசம்பரில், மும்பய் நகரிலுள்ள காட்கோபர் தொடர்வண்டி நிலையத்திற்கு அருகே, நகரப் பேருந்து ஒன்றில் வைக்கப்பட்டிருந்த குண்டு வெடித்ததில், இரண்டு பயணிகள் இறந்து போனார்கள்; 49 பேர் காயமடைந்தனர்.

இக்குண்டு வெடிப்பையடுத்து மும்பய் மாநகர போலீசு பல முசுலீம்களைக்கைது செய்தது. அவர்களுள், மகாராஷ்டிரா மாநிலத்தில் உள்ள அவுரங்காபாத் நகரைச் சேர்ந்த 27 வயதான குவாஜா யுனுஸ் என்ற முசுலீம் இளைஞரும் ஒருவர். யுனுஸோடு ஜவஹர்லால் நேரு பொறியியல் கல்லூரியில் ஒன்றாகப்படித்த ஜாஹீர் ஷேக், ஷேக் முஸ்ஸமில், முகம்மது அல்டாப் ஆகியோரும் கைது செய்யப்பட்டனர். இந்த முசுலீம் இளைஞர்களோடு, அதே நகரைச் சேர்ந்த மருத்துவர் அப்துல் மதீன் என்பவரும் காட்கோபர் குண்டு வெடிப்பு வழக்கில் கைது செய்யப்பட்டார்.

துபாயில் உள்ள பன்னாட்டு நிறுவனத்தில் பொறியாளராக வேலை பார்த்து வந்த யுனுஸ், தனது திருமணத்திற்காக டிசம்பர் மாதம் தான் ஊருக்குத் திரும்பியிருந்தார். எனினும், புலனாய்வு விசாரணையில், யுனுஸும் அவரது நண்பர்களும் குண்டு வைத்ததற்கான ஆதாரத்தைக் கண்டுபிடித்ததாகக் கூறி, யுனுஸையும் அவரது நண்பர்களையும் டிசம்பர் 23, 2002 அன்று யுனுஸின் வீட்டில் வைத்தே கைது செய்தது, மும்பய் போலீசு.

புலனாய்வின் மூலம் போலீசு கண்டுபிடித்த ஆதாரம் என்ன தெரியுமா? காட்கோபர் குண்டு வெடிப்புக்கு இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு - 2000 ஆம் ஆண்டில் - அவுரங்காபாத்தில் இருந்து 200 கி.மீ. தொலைவில் உள்ள ஜலகான் என்ற ஊரில் சில ஜெலட்டின் குச்சிகள் ஒருகிணற்றில் இருந்து எடுக்கப்பட்டன. அப்பொழுதே ''இக்குண்டுவெடிப்பு'' தொடர்பாக, ஜலகான் பகுதியில் உள்ள இஸ்லாமிய மாணவர் இயக்கத்தைச் சேர்ந்த பலரை விசாரணை செய்தது, போலீசு.

காட்கோபர் குண்டு வெடிப்பிலும் ஜெலட்டின் குச்சிகள்தான் பயன்படுத்தப்பட்டதால், போலீசு தனது ''புலன் அறிவை''க் கொண்டு மொட்டைத் தலைக்கும், முழங்காலுக்கும் முடிச்சு போட்டது. இஸ்லாமிய மாணவர் இயக்கத்தைச் சேர்ந்தவர் என போலீசார் சந்தேகப்பட்ட மருத்துவர் அப்துல் மதீனும், மதீனுக்கு அறிமுகமானவர் என்பதால் குவாஜா யுனுஸும், யுனுஸின் நண்பர்களும் சங்கிலி தொடர் போலக் கைது செய்யப்பட்டனர்.

இந்த அவுரங்காபாத் நண்பர்களை லஷ்கர் - இ - தொய்பா என்ற காசுமீர் 'தீவிரவாத' அமைப்புடன் தொடர்புடையவர்கள் என்றும் குற்றஞ்சுமத்திய போலீசு, அவர்களிடமிருந்து உண்மையை வரவழைக்க ஒவ்வொருவரையும் மிருகத்தனமாகத் தாக்கியது. இந்தத் தாக்குதலின் காரணமாக குவாஜா யுனுஸ் இரத்த இரத்தமாக வாந்தியெடுத்துக் கொட்டடியிலேயே இறந்து போனார்.

''போலீசார் பூட்ஸ் கால்களால் யுனுஸின் நெஞ்சில் தொடர்ந்து பலமுறை எட்டி உதைத்தனர். இதனால் அவரது இதயம் பழுதடைந்து, அதன் காரணமாக அவர் இரத்த வாந்தி எடுத்து இறந்து போனார்'' என்கிறார் யுனுஸோடு கைது செய்யப்பட்ட மருத்துவர் அப்துல் மதீன்.

போலீசார் வழக்கம் போலவே, தமது கிரிமினல் மூளையைப் பயன்படுத்தி, இந்தக் கொட்டடிக் கொலையை மூடி மறைத்தனர். யுனுஸை அடித்துக் கொலை செய்த துணை ஆய்வாளர் சச்சின் வாஸே, ''யுனுஸை விசாரணைக்காக மும்பயில் இருந்து அவுரங்காபாத்துக்கு அழைத்துச் சென்ற பொழுது போலீசு ஜீப் விபத்தில் சிக்கிக்கொண்டதாகவும்; அந்த சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொண்டு யுனுஸ் கைவிலங்கோடு தப்பிச் சென்றுவிட்டதாகவும்'' மோசடி அறிக்கையொன்றை தயாரித்து, யுனுஸைத் தேடப்படும் குற்றவாளியாக அறிவித்தார்.

போலீசின் இந்தக் கதையை நம்ப மறுத்த யுனுஸின் தந்தை, 'காணாமல்

ஒன்றரை ஆண்டுகளாகச் சட்ட விரோதமாக ''பொடா''வின் கீழ் சிறையில் அடைக்கப்பட்டு, பின்னர் விடுவிக்கப்பட்ட ஜாஹீர் ஷேக்.





படிப்பகம்

www.padippakam.com

போன' யுனுஸ் பற்றி சி.பி.ஐ. விசாரிக்க வேண்டும் என பொடா சிறப்பு நீதிமன்றத்தில் சனவரி 2003 இல் மனு கொடுத்தார். இம்மனு மீது நடைபெற்ற விசாரணையின்போது, தடய அறிவியல் மருத்துவரான (ஒரு மனிதன் எப்படி மரணமடைந்தான் என்பதை அறிவியல் பூர்வமாக நிரூபிக்கும் துறைதான் தடய அறிவியியல் மருத்துவம்) அப்துல் மதீன், போலீசார் தாக்கியதால்தான் யுனுஸ் இறந்து போனார் என வாக்கு மூலம் கொடுத்தார். போலீசு துணை கமிசனர் அம்பாதாஸ் போடோ, முதுநிலை ஆய்வாளர் அருண் போருடே உள்ளிட்ட பல போலீசு அதிகாரிகள் யுனுஸ் தப்பி ஓடிவிட்டதாக நீதிமன்றத்தில் அடித்துப் பேசினார்கள். போலீசாரின் வாக்குமூலங்களை நம்ப மறுத்த சிறப்பு நீதிமன்ற நீதிபதி, யுனுஸ் உயிரோடு இருக்கிறாரா, இல்லையா என்பது பற்றி மகாராஷ்டிரா மாநிலப் புலனாய்வு பிரிவு போலீசார் விசாரிக்க கடந்த ஆண்டு பிப்ரவரியில் உத்தரவிட்டார்.

புலனாய்வுப் பிரிவு போலீசார் இந்தக் கொட்டடிக் கொலை விசாரணையை ஆமை வேகத்தில் நகர்த்திச் சென்றனர். விசாரணை தொடங்கி ஒரு வருடம் கழித்துதான் யுனுஸைக் கொன்ற முக்கிய குற்றவாளியான துணை ஆய்வாளர் சச்சின் வாஸே கைது செய்யப்பட்டார். எனினும், அவர் மீது முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்படவில்லை. குற்றம் சாட்டப்பட்டுள்ள மருத்துவர் மதீனின் வாக்குமூலத்தை இந்த வழக்கின் அடிப்படையாக எடுத்துக் கொள்ள முடியாது என வாதாடி, சச்சின் வாஸேயைக் காப்பாற்ற முயன்றனர், புலனாய்வு போலீசார்.

இதன்பின் இந்த வழக்கைக் கையில் எடுத்த மும்பய் உயர்நீதி மன்றம், ''புலனாய்வுப் போலீசார் யாரைக் காப்பாற்ற முயலுகிறார்கள்?'' எனக் கேள்வி எழுப்பியது. மேலும், ''மருத்துவர் மதீனின் வாக்குமூலத்தை அடிப்படையாகக் கொண்டு, முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யுமாறும்; துணை ஆய்வாளர் வாஸேயோடு கொலைக்கு உடந்தையாக இருந்த போலீசாரையும்; பொடா நீதிமன்றத்தில் வாஸேக்கு ஆதரவாக பொய்ச்சாட்சியமளித்த போலீசு அதிகாரிகளையும் வழக்கில் சேர்க்குமாறும்'' உத்தரவிட்டது.

காட்கோபர் குண்டு வெடிப்பு வழக்கு பற்றி விசாரணை நடத்தி வரும் ''பொடா'' மறு ஆய்வு கமிட்டி, ''இந்த வழக்கில் மருத்துவர் மதீனையும்; ஷேக் முஸ்ஸமில்லையும் குற்றவாளிகளாகச் சேர்த்ததற்கு போலீசார் எந்த விதமான



கொட்டடியில் படுகொலை செய்யப்பட்ட குவாஜா யுனுஸ் (இடது) யுனுஸைப் படுகொலை செய்துவிட்டு, பிணையில் சுதந்திரமாகத் திரியும் அரசு பயங்கரவாதி சச்சின் வாஸே.

நம்பத்தகுந்த விளக்கங்களையும் தரவில்லை'' எனக் குறிப்பிட்டுள்ளது.

குற்றத்தை நிரூபிப்பதற்கு முன்பாகவே குவாஜா யுனுஸுக்கு போலீசார் மரண தண்டனை வழங்கிவிட்டனர். யுனுஸோடு சேர்த்துக் கைது செய்யப்பட்ட ஜாகீர் ஷேக்கை ஒன்றரை ஆண்டுகளாகச் சிறையில் அடைத்து, சித்திரவதை செய்துவிட்டு, ''பிழைத்துப்போ'' என வெளியே அனுப்பி இருக்கிறார்கள்.

காட்கோபர் குண்டு வழக்கில் கைது செய்யப்பட்ட ஒன்பது முசுலீம்களை நீதிமன்றம் விடுதலை செய்தாலும், போலீசார் அவர்களை வேறு வழக்குகளில் மாட்டிவிட்டு விடுதலை செய்ய மறுக்கிறார்கள். மருத்துவர் மதீனுக்கும், ஷேக் முஸ்ஸமில்லுக்கும் எதிராக ஒரு ஆதாரத்தையும் காட்ட முடியாத போலீசு, அவர்கள் மீதான வழக்கைத் திரும்பப்பெற மறுக்கிறது. அதேசமயம், யுனுஸைக் கொலை செய்த துணை ஆய்வாளர் சச்சின் வாஸே, சிறையில் அடைக்கப்பட்ட இரண்டே மாதத்தில் தற்காலிகப் பிணையை வாங்கிக் கொண்டு வெளியே வந்துவிட்டார். இது என்ன வகையான நீதி?

இத்துணைக்கும் மகாராஷ்டிரா மாநிலம் இந்து மதவெறிக் கும்பலின் ஆட்சியின் கீழ் இல்லை. பொடா சட்டத்தைத் திரும்பப் பெறப் போவதாக அறிவித்திருக்கும் ஐக்கிய முற்போக்கு கூட்டணியில் உள்ள காங்கிரசும் தேசியவாத காங்கிரசும்தான் மகாராஷ்டிராவில் கூட்டணி ஆட்சி நடத்துகின்றன. ஒருபுறம் பொடாவை அப்பாவிகள் மீது ஏவிவிட்டுக் கொண்டே, இன்னொருபுறம் அதற்கு எதிராக முதலைக் கண்ணீர் வடிக்கிறது காங்கிரசு. இந்த இரட்டை நாக்குப் பேர்வழிகளுக்கு போலி கம்யூனிஸ்டுகள் முட்டுக் கொடுத்து, முற்போக்கு முலாம் பூசுகிறார்கள்.

வாக்களித்தபடி அமைச்சகத் துறைகளை ஒதுக்கவில்லை எனப் பத்திரத்தைத் தூக்கிக் காட்டிய தி.மு.க. தலைவர் கருணாநிதி, ''பொடா''வை நீக்குவதற்கும் அப்படி பத்திரம் எழுதி வாங்கியிருப்பாரா என்பதை உறுதியாகச் சொல்ல முடியாது. ஓட்டுக் கேட்கும்பொழுது மக்களுக்குக் கொடுக்கும் வாக்குறுதிகளை, ஆட்சியைப் பிடித்தபின் ஓட்டுக் கட்சிகள் செய்யாவிட்டால், ஆளுங் கட்சிகளைத் தட்டிக் கேட்கும் உரிமை மக்களுக்குஇருக்கிறதா என்ன?

நரசிம்ம ராவ் தலைமையில் நடந்த காங்கிரசு ஆட்சி மக்களின் எதிர்ப்புக்குப் பணிந்து, ''தடா சட்டத்தை ரத்து செய்த பொழுது, அச்சட்டத்தின் கீழ் தொடுக்கப்பட்ட வழக்குகளை ரத்து செய்ய மறுத்துவிட்டது. அதைப் போன்ற பித்தலாட்டத்தில் இந்த ஐக்கிய முற்போக்கு கூட்டணியும் ஈடுபடக் கூடும்.

எனவே, ''பொடா சட்டத்தை மட்டுமின்றி, அச்சட்டத்தின் கீழ் பதிவு செய்த வழக்குகளையும்; காலாவதியாகிப் போன ''தடா''வின் கீழ் நடைபெற்று வரும் வழக்குகளையும் திரும்பப் பெற வேண்டும்; இப்பாசிச சட்டங்களின் கீழ் சிறையில் அடைக்கப்பட்டுள்ள/அல்லது தண்டிக்கப்பட்டுள்ள அனைவரையும் விடுதலை செய்ய வேண்டும். இச்சட்டத்தால் நிர்மூலமாக்கப்பட்ட குடும்பங்களுக்கு உரிய நட்டஈடு வழங்க வேண்டும். இப்பாசிச சட்டத்தைத் தங்களின் மனம் போனபடி ஏவிவிட்ட அதிகாரிகளுக்கு உரிய தண்டனை தரப்பட வேண்டும்; எதிர்காலத்தில் இது போன்ற பாசிச சட்டங்களை ஆளுங்கும்பல் மீண்டும் உருவாக்கி நடைமுறைப்படுத்துவதைத் தடுக்கும்படியான ஜனநாயக உரிமைகள் இந்திய குடிமக்களுக்குத் தரப்பட வேண்டும்'' என்ற கோரிக்கைகளை முன்வைத்து ஜனநாயக இயக்கங்களும், உழைக்கும் மக்களும் போராட முன்வர வேண்டிய தருணமிது!

● அழகு

**வாக்களித்தபடி அமைச்சகத் துறைகளை ஒதுக்கவில்லை எனப் பத்திரத்தைத் தூக்கிக் காட்டிய தி.மு.க. தலைவர் கருணாநிதி, ''பொடா''வை நீக்குவதற்கும் வழக்குகளை ரத்து செய்யவும் பத்திரம் எழுதி வாங்கினாரா?**

www.padippakam.com

# அபு–கிரைப் சிறைச்சாலை சித்திரவதைகள்:

# காராகிருகத்திலிருந்து கசியும் உண்மைகள்

**"சதாம் உசேன் எங்களை ஒடுக்கியிருக்கலாம்; ஆனாலும், அவர் அமெரிக்கர்களைவிட எவ்வளவோ மேலானவர். இவர்களோ குப்பைக்கூளங்கள்"**

— ஈராக்கிலுள்ள அபு - கிரைப் சிறைச்சாலையில் அடைக்கப்பட்டுச் சித்திரவதை செய்யப்பட்ட ஹசன் என்ற தனது மகனைப் பார்ப்பதற்காக, அச்சிறைச்சாலை வாயிலில் காத்துக் கிடந்த அப்பாஸ் என்ற ஈராக்கிய தாய் வெஞ்சினத்தோடு சொன்ன வார்த்தைகள் இவை.

அமெரிக்கா வானத்தில் இருந்து ஈராக் மீது வீசிய 'ஜனநாயக' குண்டுகளை வரவேற்ற அமெரிக்கக் கைக்கூலிகளால் கூட, ஈராக்கின் அபு - கிரைப் சிறைச்சாலையில் அமெரிக்க இராணுவம் நடத்திய சித்திரவதைகளை, வக்கிரமான மனித உரிமை மீறல்களை நியாயப்படுத்த முடியவில்லை.

அமெரிக்க ஏகாதிபத்தியத்தால் ஈராக் மீது திணிக்கப்பட்டுள்ள ஆட்சி மன்றக் குழுவைச் சேர்ந்த மனித உரிமைகள் அமைச்சர், ஈராக்கிய 'கைதி'கள் மீது அமெரிக்க நடத்திய சித்திரவதைகள் அம்பலமான பிறகு, தானாகவே பதவியைவிட்டு விலகி ஓடிவிட்டார். வெளியுறவுத் துறை அமைச்சர், "அமெரிக்காவைச் சாராத ஒரு சுதந்திரமான நிறுவனம்தான் இந்தச் சித்திரவதைகளை விசாரிக்க வேண்டும்" எனக் கோருகிறார்.

அமெரிக்காவின் தயவில் பதவியைப் பிடித்துள்ள இந்தக் கைக்கூலிகளின் ஒப்பாரி கிடக்கட்டும். அமெரிக்காவின் இராணுவ அமைச்சர் டொனால்டு ரம்ஸ்ஃபெல்டு இந்தச் சித்திரவதைகளை, "வக்கிரமானது; குரூரமானது; மனிதத்தன்மையற்றது" எனக் கண்டித்து பத்திரிகைகளுக்கு பேட்டியளிக்கிறார். அமெரிக்க நாடாளுமன்ற கமிட்டி, இராணுவ அமைச்சரையும், இராணுவத் தளபதியையும் விசாரிக்கிறது. அதிபர் புஷ், அரேபியாவின் தொலைக்காட்சிகளில் தோன்றி மன்னிப்புக் கேட்கிறார். கடப்பாரையை விழுங்கியவன், அது செரிக்க சுக்கு கசாயத்தைக் குடிப்பது போலாகிவிட்டது அமெரிக்காவின் நிலைமை.

- ஈராக்கிய கைதிகளைப் பல நாட்களுக்கு நிர்வாணமாக இருட்டுக் கொட்டடியில் தனிமையாக அடைத்து வைத்து விசாரிப்பது;
- நிர்வாணமாக்கப்பட்ட கைதிகளை ஒருவர் மேல் ஒருவர் பிரமிடு கோபுரம் போல படுக்க வைத்து, அந்தக் கோலத்தை ரசிப்பது:
- நிர்வாணமாக்கப்பட்ட கைதிகளை, பெண் அதிகாரிகளின் முன் சுய இன்பத்தில் ஈடுபடுமாறு கட்டாயப்படுத்துவது;
- பெண் சிப்பாய்களின் அழுக்கடைந்து போன உள்ளாடைகளை, ஆண் கைதிகளின் முகத்தில் முகமூடி போல மாட்டிவிட்டு ரசிப்பது;
- நிர்வாணமாக்கப்பட்ட ஆண் கைதிகளின் கழுத்தில் கயிற்றைக் கட்டி நாயைப் போல இழுத்துச் செல்வது;
- நிர்வாணமாக்கப்பட்ட கைதிகளின் மீது நாய்களை ஏவிவிடுவது
- நிர்வாணமாக்கப்பட்ட கைதிகளை மின்சார வயர்களைக் கொண்டு தாக்குவது;
- இந்த வக்கிரம் பிடித்து சித்திரவதைகளின் உச்சமாக லிண்டி இங்கிலாண்ட் என்ற பெண் சிப்பாய், ஆண் கைதிகளை வரிசையாக நிற்க வைத்து, அவர்களது அந்தரங்க உறுப்புகள் பற்றி வக்கிரமாக கிண்டல் செய்து மகிழ்ந்திருக்கிறார்; அவர்களைப் பலர் முன்னிலையில் ஓரினச் சேர்கையில் ஈடுபட வைத்திருக்கிறார்.
- இந்த வக்கிரம் பிடித்த சித்திரவதைகளைப் புகைப்படம் எடுத்து, அதை அந்தக் கைதிகளிடமே காட்டி, அவர்களை அவமானப்படுத்தி மகிழ்ந்திருக்கிறது, அமெரிக்க இராணுவ கும்பல்.
- ஈராக் கைதிகளின் முகங்களில் சிறுநீரைப் பெய்து அவமானப்படுத்தியிருக்கிறார்கள், பிரிட்டிஷ் இராணுவ

**ஈராக்கிய கைதிகளை நிர்வாணமாக்கி, ஒருவர் மேல் ஒருவர் பிரமிடு போல படுக்க வைக்கும் வக்கிர சித்திரவதை.**






படிப்பகம்

www.padippakam.com

வீரர்கள். பஸ்ரா நகரில் ஒருசிறுமிஉட்படஎட்டு பேரை நாயைச் சுடுவது போல நடுத்தெருவில் சுட்டுக் கொன்றிருக்கிறது, பிரிட்டிஷ் இராணுவம்.

இங்கே விவரிக்கப்பட்டிருப்பதைவிடக் கேவலமாகவும், வக்கிரமாகவும் சித்திரவதைகள்நடந்துள்ளன. அமெரிக்க இராணுவத் தலைமையகம் பெண்டகன் கைவசமுள்ள சித்திரவதை புகைப்படங்கள் அனைத்தையும் வெளியிட்டால் கொந்தளிப்பே உருவாகும் என்கிறார், அமெரிக்காவின் இராணுவ அமைச்சர் ரம்ஸ்பெல்டு.



கைகள் பின்னால் கட்டப்பட்டு, பெண்ணின் உள்ளாடையை முகமூடி போல முகத்தில் மாட்டிவிடப்பட்ட நிலையில் சித்திரவதையை அனுபவிக்கும் ஈராக்கிய கைதி.

''அமெரிக்க சிப்பாய்களில் சிலர், ஈராக் ஆண் கைதிகளோடு கட்டாய ஓரினச் சேர்க்கைவைத்துக்கொண்டார்கள்; அபு - கிரைப் சிறைச்சாலையில் அடைக்கப்பட்ட பெண் கைதிகள், பாலியல் பலாத்காரப்படுத்தப்பட்டுள்ளனர். இந்த விரசமான சித்திரவதைகளை அமெரிக்க இராணுவ வீரர்கள் புகைப்படமாகவும், வீடியோ படமாகவும் எடுத்து ரசித்திருக்கிறார்கள்'' என அபு - கிரைப் சிறைச்சாலையில் இருந்து விடுவிக்கப்பட்ட கைதிகள், சர்வதேசப் பத்திரிகையாளர்களின் முன் தெரிவித்துள்ளனர்.

கடந்த மூன்று மாதங்களாக அபு - கிரைப் சிறைச்சாலையில் அடைக்கப்பட்டிருந்த 22 வயதான ஹசன் பாக்தாந் நகரின் புறநகர் பகுதியில் உள்ள அமெரிக்க இராணுவத் தளத்தையொட்டி நடந்து சென்றதற்காக, அமெரிக்க இராணுவத்தால் கைது செய்யப்பட்டார்..

அபு - கிரைப் சிறைச்சாலையில், தொடர்ந்து 18 நாட்கள் தனிக் கொட்டடியில் நிர்வாணமாக அடைக்கப்பட்டு சித்திரவதை செய்யப்பட்ட சதாம் சலாஹ் அல் - ராவி, ஒருவேலை விசயமாக பாக்தாத் நகருக்கு வந்த பொழுது சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டார்.

அபு - கிரைப் சிறைச்சாலையில் இருந்து தற்பொழுது விடுதலை செய்யப்படும் கைதிகளுள் பெரும்பாலோர், ஹசனைப் போன்ற, சதாமைப் போன்ற அப்பாவிகள்தான் என்ற உண்மையும் அம்பலமாகியுள்ளது.

●●●

''ஈராக்கில் தவறுகள் நடந்திருக்கலாம். ஆனால், ஜனநாயகத்தின் கீழ்தான் தவறு செய்தவர்களைத் தண்டிக்க முடியும். இதுதான் எங்களுக்கும், சதாமுக்கும் உள்ள வேறுபாடு'' எனப் பீற்றிக் கொள்கிறார் ஜார்ஜ் புஷ்.

இரண்டாம் உலகப் போர் முடிந்த பின்பு ஐ.நா.வால் உருவாக்கப்பட்ட ஜெனிவா ஒப்பந்தப்படி, அபு - கிரைப் சிறைச்சாலையில் நடந்த சித்திரவதைகள் அனைத்தும் போர் குற்றங்களாகும். அமெரிக்க ஜனநாயகம் இந்தப் போர் குற்றங்களுக்குக் கொடுத்துள்ள தண்டனை என்ன தெரியுமா?

''அபு - கிரைப்சிறைச்சாலையில் பணியில் இருந்த காவலர்களில், ஆறு பேரின் மீது மட்டும்தான் குற்றஞ் சுமத்தப்பட்டுள்ளது; இந்த ஆறு பேரில் ஒருவரை மட்டும் இராணுவ நீதிமன்றம் விசாரிக்கும். ஏழு உயர் அதிகாரிகள் குறித்து விசாரணை நடைபெறும்'' - இவ்வளவுதான்.

''இப்படி அவமானப்படுவதற்குப் பதில், நான் இறந்து போய் இருக்கலாம்'' என்கிறார் அபு - கிரைப் சிறைச்சாலையில் இருந்து விடுவிக்கப்பட்டுள்ள சதாம் சலாஹ். தனது மானம் போய் விட்டதாகக் கருதும் அவர் நிச்சயிக்கப்பட்டிருந்த தனது திருமணத்தையும் ரத்து செய்துவிட்டார்.


நாய்போல இழுத்துச்செல்லப்படும் குரூரம்.



அபு - கிரைப் சிறைச்சாலையின் கீழ்த்தரமான சித்திரவதைகளை அனுபவித்த ஈராக்கியர்கள் சதாமைப் போல நடைப்பிணமாகி விட்டார்கள். ஆனால், இந்தப் போர் குற்றங்களில் ஈடுபட்ட குற்றவாளிகளோ, ''நாங்கள் கேளிக்கைகாக இந்த மாதிரி ஈடுபட்டதாக'' எவ்வித குற்ற உணர்ச்சியும் இன்றி அமெரிக்க பத்திரிகைகளுக்கு பேட்டி கொடுக்கிறார்கள்.


படிப்பகம்

அமெரிக்க இராணுவத் தலைமை, இக்குற்றவாளிகளைக் கண்டிக்கிறது; எச்சரிக்கை கலந்த அறிவுரைகளை அள்ளிவிட்டுத் தண்டிக்கிறது' அமெரிக்க இராணுவ அமைச்சர் டோனால்ட் ரம்ஸ்பெல்டைப் பதவியில்இருந்துதுரத்தக் கோரி உலகெங்கிலும் கண்டனங்கள் எழுகின்றன. ஆனால், அதிபர் புஷ்ஷோ, ''ரம்ஸ்பெல்டுக்கு அமெரிக்க நாடே கடமைப்பட்டிருப்பதாக''ப் புகழ்ந்து தள்ளுகிறார். இது தான்அமெரிக்கஜனநாயகத்தின்நியாய உணர்ச்சி!



ஈராக்கிய கைதி மீது சிறுநீர் கழிக்கும் பிரிட்டிஷ் இராணுவ சிப்பாய்.

●●●

''அபு - கிரைப் சிறைச்சாலையில் நடந்த சித்திரவதைகளுக்கு அமெரிக்க இராணுவம் பொறுப்பல்ல. அச்சிறைச் சாலையில் பணியாற்றிய தனியார் பாதுகாப்பு படை வீரர்கள்தான், கைதிகளை விசாரிப்பது என்ற பெயரில்சித்திரவதை செய்துள்ளனர். மேலும், அபு - கிரைப் சிறைச்சாலையில் நடந்த சம்பவம் விதிவிலக்கானது; இதனை நமது அமைப்பில் உள்ள குறைபாடாகப் பார்க்கக் கூடாது'' என அமெரிக்க அரசு பூசி மெழுகி வருகிறது. ஆனால், ஜார்ஜ் புஷ்ஷின் இந்தப் பித்தலாட்ட வாதங்கள் அமெரிக்காவிற்குள்கூடப் போணியாக வில்லை.

அபு - கிரைப் சிறைச்சாலையில் மேற்பார்வை அதிகாரியாகப் பணியாற்றியவர் பிரிகேடியர் - ஜெனரல் ஜானிஸ் கார்பின்ஸ்கி. இந்தச் சித்தரவதைகளுக்காக அமெரிக்க இராணுவத் தலைமையால் ''எச்சரிக்கப்பட்டுள்ள'' இவர், ''அமெரிக்க இராணுவத் தலைமை, இந்த சித்திரவதைகளுக்கான பொறுப்பை ஈராக்கிலுள்ள இராணுவ உளவுப் பிரிவு மீது சுமத்தாமல், எங்களைப் போன்ற துணை இராணுவ வீரர்களைப்பலிகடா ஆக்குவதாக''க் குற்றம் சுமத்தியிருக்கிறார்.

இந்தச் சித்திரவதைகளுக்காக விசாரிக்கப்பட்டு வரும் சாப்ரினா ஹார்மன், ''இராணுவப் போலீசாரான எங்களது வேலையே, கைதிகளைத் தூங்கவிடாமல் செய்து, நரக வேதனையை அவர்களுக்குக் கொடுப்பதன் மூலம், அவர்களை வாயைத் திறந்து பேச வைப்பது தான். இந்த விசாரணைப் பணியை அமெரிக்க இராணுவ உளவுத்துறை தான், எங்களுக்குக் கொடுத்தது'' என்கிறார்.

ஈராக்கில் பணியாற்றிவிட்டு இங்கிலாந்துக்குத் திரும்பியுள்ள சிறப்புப் பாதுகாப்புப் படை அதிகாரி, ''அபு - கிரைப் சிறைச்சாலையில் கைதிகளைப் பாலியல் ரீதியாகத் துன்புறுத்திய விசாரணை முறைகள் தனியார் பாதுகாப்புப் படை வீரர்கள் கண்டுபிடித்தது அல்ல. அமெரிக்காவிலும், இங்கிலாந்திலும் உள்ளசிறப்புப் பாதுகாப்புப் படை வீரர்களுக்குச் சொல்லிக் கொடுக்கப்படும் விசாரணை முறைகள் இவை. இந்த முறைகளை அவர்கள் இப்பொழுது ஈராக்கில் தனியார் கூலிப்படைகளுக்குச்சொல்லிக் கொடுத்திருக்கிறார்கள்'' எனத் தனது பெயரைக் குறிப்பிடாமல் பேட்டியளித்திருக்கிறார்.

நிர்வாணமாக்கப்பட்ட கைதி மீது நாய்களை ஏவிவிட்டு ரசிக்கும் குரூரம்.



அமெரிக்க இராணுவத்தின் முன்னாள் விசாரணை அதிகாரியானடோரின் நெல்சன், ''ஈராக்கில் இறக்கிவிடப்பட்டுள்ள தனியார் பாதுகாப்பு நிறுவனங்கள், அமெரிக்க இராணுவ உளவுப் பிரிவுநிர்ணயிக்கும் இலக்கை எட்டிப் பிடிக்க வேண்டும்; இல்லையென்றால், அந்நிறுவனங்கள் தண்டிக்கப்படும். இதனால், ஈராக்கில் இப்பொழுது கார் டிரைவர்கள், சமையல்காரர்கள் கூடத் தனியார் நிறுவனத்தில் சேர்ந்து விசாரணை அதிகாரிகளாகி விடுகிறார்கள். இதற்கு அமெரிக்க உளவுத்துறைதான் பொறுப்பேற்க வேண்டும்'' என்கிறார்.

அபு - கிரைப் சிறைச்சாலையில் கடந்த ஒரு வருடமாக நடந்துவரும் சித்திரவதைகள் குறித்துசர்வதேச செஞ்சிலுவைச் சங்கங்கள்வெளியிட்டுள்ள அறிக்கையில், ''விசாரணை அதிகாரிகள், அபு - கிரைப் சிறைச்சாலையில் உள்ள கைதிகளை உடல் ரீதியாகவும், மனரீதியாகவும் துன்புறுத்தி விசாரணை நடத்துவது, இராணுவ உளவுப்பிரிவு நடத்தும்வழக்கமான விசாரணை போன்றதுதான் என அமெரிக்க இராணுவ உளவுப் பிரிவு அதிகாரிகளே தெரிவித்ததாக''க் குறிப்பிட்டுள்ளது.

''ஈராக் மக்களிடையே பரவி வரும் அமெரிக்க எதிர்ப்பு பற்றி உளவறிவதற்காக, ஈராக்கிய கைதிகளை உடல்ரீதியாக, மனரீதியாக, பாலியல் ரீதியாகத் துன்புறுத்தி விசாரணை நடத்துவதற்கு அமெரிக்கஇராணுவ அமைச்சர்ரம்ஸ்ஃபெல்டே உத்தரவிட்டிருப்பதாக'' அமெரிக்க நாளிதழ்கள் புலனாய்வுக் கட்டுரைகளை வெளியிட்டுள்ளன.

இவை எல்லாவற்றுக்கும் மேலாக, கியூபாவை ஒட்டியுள்ள குவாந்தநாமோ தீவில் அடைக்கப்பட்டுள்ள ''தீவிரவாதிகளை'' நிர்வாணமாக்கி விசாரிப்பதற்கும், உடல்ரீதியாக, மனரீதியாகத் துன்புறுத்தி விசாரிப்பதற்கும் கடந்த ஆண்டு ஏப்ரல் மாதம் அமெரிக்க அரசு அனுமதித்துள்ளது. இந்த வழி

www.padippakam.com

முறைகள் தான் ஈராக்கிலுள்ள அமெரிக்க சிறைகளிலும் பயன்படுத்தப்படுவதாக அமெரிக்க பாதுகாப்புத் துறை வட்டாரங்கள் கூறுகின்றன.

இம்முறைகளில் விசாரிப்பதற்கு விசாரணை அதிகாரிகள், அமெரிக்க இராணுவத்தலைமையகமான 'பெண்டகன்' அதிகாரிகளின் அனுமதியைப் பெற வேண்டும்; சில சமயங்களில் பாதுகாப்பு அமைச்சரின் அனுமதியையும் பெற வேண்டும். இவ்வளவு கடினமான விசாரணை அவசியம் என விசாரணை அதிகாரிகள் நிரூபிக்க வேண்டும் எனக் கூறப்படுகிறது.

எனவே, அமெரிக்க அரசுக்கும், இராணுவத்துக்கும் தெரியாமலேயே அபு - கிரைப் சிறைச்சாலையில் சித்திர வதைகள் நடந்திருப்பதாக ஜார்ஜ் புஷ் புலம்புவது, முழு பூசணிக்காயைச் சோற்றில் மறைக்கும் பித்தலாட்டம் தான்.

●●●

முதலாளித்துவ பத்திரிகைகள் அனைத்தும் அபு - கிரைப் சிறைச்சாலையில் நடந்துள்ள சித்திரவதைகளை, ''அமெரிக்க ஆட்சியிலுமா இப்படி?'' என்ற அதிர்ச்சியோடு வெளியிட்டு வருகின்றன. அமெரிக்க ஆதிக்கத்தின் கீழ் உள்ள ஈராக்கில் இப்படிப்பட்ட சித்திர வதைகள் நடக்கவில்லை என்றால்தான் நாம் அதிர்ச்சியடைய வேண்டி இருந்திருக்கும்.

பாசிச ஒடுக்குமுறை இல்லாத ஜெயா ஆட்சியை எப்படி கற்பனை செய்து பார்க்க முடியாதோ, அதைப் போன்றுதான் அகிம்சாமூர்த்தியாக அமெரிக்காவின் மேலாதிக்கத்தையும் கற்பனை செய்து பார்க்க முடியாது. ஆனால், ஜார்ஜ் புஷ்ஷோ, ''அபு - கிரைப்சிறைச்சாலையில் நடந்திருப்பது வேறு; நான் அறிந்த அமெரிக்கா வேறு; அந்தப் படத்தைப் பார்ப்பவர்கள், அமெரிக்காவின் இதயத்தையும், இயல்பையும் அறிய மாட்டார்கள்'' என அமெரிக்காவைப் பற்றி ''ரீல்'' விடுகிறார்.

ஜனநாயகத்தின் மனித உரிமைகளின் காவலனாக வேடம் போட்டுக் கொண்டு திரியும், அமெரிக்காவின் யோக்கியதை உலக மக்களுக்குத் தெரியாதா?

ஈராக் மீது அமெரிக்கா விதித்த பொருளாதாரத் தடை, பத்தே ஆண்டுகளில் ஐந்து இலட்சத்துக்கும் அதிகமான குழந்தைகளின் உயிரைக் குடித்தது. இது பற்றி பி.பி.சி. நிருபர்கள் கேட்டதற்கு, கிளிண்டனின் ஆட்சியில் அரசுச்செயலராக இருந்த மெடலைன் ஆல்பிரைட், ''அது கொடுக்கத்தக்க விலைதான்'' எனத் திமிராகப் பதில் அளித்தார். இது தானே அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் இதயம்!



அமெரிக்க டாங்குகள் மீது கல்லைக் கொண்டு தாக்கும் ஈராக்கிய சிறுவர்கள்: இந்த வீரம் தோற்றுப் போகுமோ?

பொருளாதாரத் தடை காரணமாக ஈராக்கில் எத்தனை நாளில் காலரா பரவும்; எத்தனை நாளில் டைபாய்டு பரவும்; எத்தனை ஆயிரம் பேர் சாகக் கூடும் எனத் துல்லியமாக் கணக்குப் போட்டு அந்நாட்டின்மீது படையெடுத்தவர்கள் தானே அமெரிக்க ஜனநாயகக் கோமான்கள்!

''நிகராகுவாவில் அமெரிக்க அரசால் இயக்கப்பட்ட காண்ட்ரா கொலைப்படையாகட்டும்; கவுதமாலா, எல்சால்வடாரில் செயல்பட்ட நமது பினாமி பயங்கரவாதிகளாகட்டும் அவர்கள் சாதாரண முறையில் கொலை செய்வதில்லை. குழந்தைகளைப் பாறையில் மோதிக் கொல்வது; பெண்களின் மார்புகளை அறுத்துத் தலைகீழாகத் தொங்கவிட்டு ரத்தம் வெளியேறிச் சாகச் செய்வது; தலையைச் சீவிவிட்டு முண்டத்தை மட்டும் கழுமரத்தில் செருகி வைப்பது என அனைத்துமே கொடூரமான வக்கிரமான முறைகள் தான்'' என சி.ஐ.ஏ. உத்தியைப் பற்றிக் குறிப்பிடுகிறார் அமெரிக்க அறிஞர் நோம் சோம்ஸ்கி.

இப்படிப்பட்ட பயங்கரவாத நடவடிக்கைகளைப் பயிற்றுவிப்பதற்கென்றே, ''ஸ்கூல் ஆப் அமெரிக்கன்ஸ்'' என்ற பயிற்சிப் பள்ளியை வர்ஜினியா மாநிலத்தில் நடத்தி வருகிறது, அமெரிக்க அரசு. இத்தகைய காட்டுமிராண்டித்தனங்களின் ஒட்டு மொத்த உருவம் தானே அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் இயல்பு!

''நாம்தான் சி.ஐ.ஏ.வை உருவாக்கினோம்; கோடிக்கணக்கில் நிதி ஒதுக்கினோம்; நம்முடைய பெயரில் இந்தக் கொலை பாதகங்களைச் செய்ய நாம் தான் அனுமதித்திருக்கிறோம். எல்லாம் அம்பலமான பிறகும் நமக்கு எதுவுமே தெரியாதது போல நடிக்கிறோம். தெரிந்தாலும் நாம் கண்டு கொள்ள மாட்டோம். ஏனென்றால், கம்யூனிச அபாயத்தில் இருந்து உலகைக் காப்பாற்றுவதற்காக அல்லவா நாம் கொலை செய்கிறோம்'' என 13 ஆண்டுகள் சி.ஐ.ஏ அதிகாரியாகப் பணிபுரிந்த ஜான் ஸ்டாக்வெல் அமெரிக்காவின் உண்மை முகத்தைப் புட்டு வைக்கிறார். இதுதானே அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் ஜனநாயகம்.!

ஜார்ஜ் புஷ் கூறுவது போல அபு - கிரைப் சிறைச்சாலையில் நடந்துள்ள சித்திரவதைகள் விதிவிலக்கானவையல்ல; தென்அமெரிக்க நாடுகளிலும், வியட்நாமிலும், கொரியாவிலும் எழுந்த அமெரிக்க எதிர்ப்பை ஒடுக்க, என்னென்ன சித்திரவதைகளை அமெரிக்கா பயன்படுத்தியதோ, அதைத்தான் ஈராக்கிலும் பயன்படுத்துகிறது. எனவே, ஜார்ஜ் புஷ் எத்தனை முறை மன்னிப்புக் கேட்டாலும், ஈராக்கிய மக்களை ஏமாற்றி விட முடியாது. அவர்கள் ஃபலுஜா நகரில் இருந்து அமெரிக்க இராணுவத்தையும், அதன் கூலிப்படைகளையும் துரத்தியடித்திருப்பதைப் போல, ஈராக்கில் இருந்தும் துரத்தியடித்து, இந்த தேசிய அவமானங்களைத் துடைத்தெறிவார்கள்!

● செல்வம்


படிப்பகம்

www.padippakam.com

# பிழைப்புவாதமே தலித்தியமாக... ஒட்டுண்ணிகளே தலைவர்களாக...

'சேரி'க்கு இழிவைத் தேடித் தரும் 'தலித்' தலைவர்கள் என்ற தலைப்பில் கடந்த மார்ச் 2004 'புதிய ஜனநாயகம்' இதழில் ஒரு சிறப்புக் கட்டுரை இடம் பெற்றிருந்தது. இது உரிய காலத்தில் வெளியான அவசியமான பணி என்று வரவேற்றும் பாராட்டியும் நேரிலும், கடிதம் மூலமும், தொலைபேசியிலும் தமிழ்நாட்டின் பல இடங்களிலும் இருந்து தாழ்த்தப்பட்ட சமூக நண்பர்கள் கருத்துத் தெரிவித்திருந்தனர். இவர்களெல்லாம், ''தலித்'' என்ற பெயரில் பிழைப்புவாதச் செயல்களில் ஈடுபடும் அமைப்புகள் - தலைவர்கள் மீது வெறுப்பு கொண்டவர்கள். உண்மையில் தாழ்த்தப்பட்ட மக்களின் விடுதலையில் அக்கறை கொண்டவர்கள் என்று அவர்களின் எழுத்தும் பேச்சும் தெரிவித்தன.

இதற்கு நேரெதிராக தாழ்த்தப்பட்ட மக்களின் பெயரால் பிழைப்புவாத, துரோகத்தனமான அமைப்புகளை நடத்தி வருபவர்களும் அவர்களை அண்டிப் பிழைப்பவர்களும் 'புதிய ஜனநாயகம்' ஏட்டின் மீது ஆத்திரங் கொண்டு அவதூறு மற்றும் வசவுகளை வாரி இறைத்திருக்கின்றனர். தொல். திருமாவளவனை ஆசிரியராகவும் - வெளியிடுபவராகவும் கொண்டு வெளிவரும் ''தாய்மண்'' ஏடும், சமூகநீதித் திங்களிதழ் என்று சொல்லிக் கொள்ளும் ''தலித் முரசும்'', ''பு.ஜ.'' கட்டுரைக்கு பதில் எழுதுவதாக எண்ணிக் கொண்டு தங்கள் அறியாமையை வெளிச்சம் போட்டுக் காட்டியுள்ளன. தமிழ்நாடு பறையர் பேரவை என்ற குழு ஒரு துண்டுப் பிரசுரம் போட்டு, ''பு.ஜ.'' ஏட்டை ஏசியுள்ளது.

''தலித் அறிவுஜீவி'' என்று அவாள்களால் போற்றப்படும் கழிசடைப் பண்பாட்டு பிழைப்புவாதி ரவிக்குமார், ''ம.க.இ.க. வினருக்கெல்லாம் பதில் சொல்லிக் கொண்டிருக்க வேண்டியதில்லை. கண்ட இடத்தில் தாக்குவது - அடித்து விரட்டுவதுதான் சரியாக இருக்கும்'' என்று மேடைகளில் பேசி வருவதாக அறிகிறோம். பு.ஜ. மற்றும் ம.க.இ.க. மீது இந்த ரவிக்குமார் ஏன் இவ்வளவு ஆத்திரப்படுகிறார் என்பதைத் தனியே பார்ப்போம்.

''தாகம்'' (ஏப்ரல் - 2004) பத்திரிக்கைக்கு அளித்த பேட்டியில் திருமாவளவன் பின்வருமாறு கூறியுள்ளார்:

*தமிழ்நாட்டில் தாழ்த்தப்பட்ட வர்களுக்கு எத்தனையோ வன்கொடுமைகள் நடந்து கொண்டிருக்கின்றன. அதைப் பற்றிச் சிந்தித்து அக்கறைப்படாதவர்கள், இவர்கள் ஏதோ உயிரைக் கொடுத்து போராடியது போலவும், நாங்கள் அதை விமர்சித்தது போலவும், அவன் - இவன் என்றெல்லாம் எழுதியிருக்கிறார்கள். இவர்களை எந்த ஜனநாயக சக்தியும் அரவணைத்துச் செல்ல முடியாது. அவ்வளவு வக்கிர புத்தியுள்ளவர்களாக இருக்கிறார்கள்.''*

திருமாவளவன் கூறியதைப் போன்று அவன், இவன் என்றோ, ''தலித்'' தலைவர்களைப் பற்றி அவதூறாகவோ பு.ஜ. எதுவுமே எழுதவில்லை என்பதுதான் உண்மை.

''வாழைப்பழம் வயிற்றுக்குள் போய் வெளியே வரும் போது மலமாகத்தான் இருக்கும். அதைப் போல நானே இருந்தாலும் இந்தத் தேர்தல் பாதைக்குள் போனால் அயோக்கியனாகத்தான் வெளியே வரவேண்டும்'' என்று முன்பு திருமாவளவன் கூறிய அரசியல் கருத்தை அவருக்கே பொருத்தித் தான் பு.ஜ. எழுதியிருந்தது.

பு.ஜ.வின் இந்த வாதத்திற்குப் பதில் கூறத் துப்பில்லாதவர்கள், அப்படியே வானத்துக்கும் பூமிக்கும் குதிக்கிறார்கள். அப்படிக் குதிக்கும்போது, தமது சந்தர்ப்பவாதம் என்னும் அரசியல் ஆடை அவிழ்ந்து நிர்வாணமாவதைக் கூட காணமுடியாமல், ஆத்திரம் கண்களை மறைப்பதையும் அறியாமல் இருக்கிறார்கள். ''மெத்தனம், காழ்ப்புணர்ச்சி, வெறுப்புணர்ச்சி, வக்கிரப் புத்தியாளர்கள், வக்கில்லாதவர்கள்'' என்றெல்லாம் உளறிக் கொட்டியிருக்கிறார்கள்.

*''சட்டமன்ற உறுப்பினர் பதவியிலிருந்த விலகியதைப் பாராட்டவில்லை; கலைஞர் செய்த மிகப் பெரிய ஒரவஞ்சனையைக் கண்டிக்கவில்லை''* என்று திருமாவளவன் ஆதங்கப்படுகிறார்.

தி.மு.க. சின்னத்தில் போட்டியிட்டு திருமாவளவன் அந்தக் கட்சியின் சட்டமன்ற உறுப்பினரானார். தி.மு.க. கூட்டணியில் இருந்து இவர் நீக்கப்பட்ட பிறகு, சட்டப்படி அவர் எம்.எல்.ஏ.வாக நீடிக்க முடியாது. தி.மு.க.வின் நடவடிக்கைகளுடன் ஒத்துப் போக மறுப்பாரானால் பதவி இழக்க வேண்டி நேரும் என்றநிலையில் தான் அவர் பதவி விலகல் செய்திருக்கிறார். இதில் பாராட்ட ஒன்றுமில்லை.

யார் காலிலாவது விழுந்து எதையாவது பெறுவதற்காக இவர் யாசிப்பார்; இதுவே ஒரு இழிசெயல் என்கிறபோது, அவர்கள் எட்டி உதைப்பதை நாங்கள் ஏன் கண்டிக்க வேண்டும்?

மேலும், திருமாவளவன் பின்வருமாறு பு.ஜ. மீது பாய்கிறார்: *''வெறுப்புணர்ச்சி, காழ்ப்புணர்ச்சி, எதிர்மறையான சிந்தனையுடையவர்களாகவே உள்ளனர். எதையும், யாரையும் இவர்கள் நேர்மையாக எழுதிப் பாராட்டி அல்லது ஊக்கப்படுத்தி ஒரு வரி கூட, ஒரு வார்த்தை கூட எழுதியது கிடையாது. சான்றுகளும் கிடையாது. சி.பி.எம்., சி.பி.ஐ., தி.மு.க., அ.தி.மு.க., காங்கிரசு, ம.தி.மு.க., கம்யூனிஸ்ட், பொது மக்கள், பாட்டாளிகள் என்று அனைத்துத் தரப்பினரையுமே எதிர்மறையாக விமர்சித்துத் தாக்குவதே இவர்களின் யுக்தியாக இருக்கின்றது. இது அவர்களின் வக்கிர உணர்வுகளை அம்பலப்படுத்துகின்ற சான்றுகளாகத்தான் உணர்த்துகின்றன. அவர்கள் மீதிருந்த மதிப்பு பாழாகி விட்டது.''*

இவையெல்லாம் உண்மையல்ல என்பதை, குறிப்பாக திருமாவளவன் போன்றவர்களிடம் பு.ஜ. எத்தகைய அணுகுமுறையைக் கொண்டிருந்தது என்பதைப் பழைய பு.ஜ. இதழ்களைப் புரட்டினாலே அறிய முடியும்.

1993 மே நாளன்று ம.க.இ.க. நடத்


படிப்பகம்

www.padippakam.com

தி்ய திருவரங்கம் கருவறை நுழைவுப் போராட்டத்துக்கு மக்களை அணி திரட்டி, தடையுத்தரவை மீறி பேரணி யாய்த் திரண்ட மக்கள் பலரும் கைது செய்யப்பட்டனர். அந்தப் போராட்டத் தில் கலந்து கொள்ள விரும்பிய இம்மா னுவேல் பேரவை மற்றும் விடுதலைச் சிறுத்தைகள் ஆகிய குழுக்கள் இறுதி நேரத்தில் பின்வாங்கிக் கொண்டன. நக் சல்பாரிப் புரட்சியாளர்களோடு சேர்ந்து செயல்பட்டால் தாம் ஒடுக்கப்படு வோம் என்று வெளிப்படையாகவே அப்போது அச்சம் தெரிவித்தனர். அதன் பிறகு சில இடங்களில் கோவில் மற்றும் கருவறைப் போராட்டங்கள் நடத்திய தோடு, 1993 மே 24 அன்று திருவரங் கம் கருவறைக்குள் அம்பேத்கர் படத்து டன் புகுந்த ம.க.இ.க.வினர் 31 பேர் தாக்கப் பட்டுக்கைதுசெய் யப்பட்டனர்.

அதன் பிறகு ''டி.பி.ஐ. (தலித் சிறுத்தைகள்இயக் கம்) திருமாவள வன் போன்ற தோழர்களைப் பற்றிய தங்கள் மதிப்பீடு, கருத்து என்ன? இப்படி யான அமைப்பு களை நாம் ஏற்றுக் கொள்ள முடி யுமா?'' என்று பு.ஜ.விடம் கேள்வி எழுப்பப் பட்டது. அதற்குப் பின்வருமாறு பு.ஜ. பதில் எழுதி யது:

ஏற்கெனவே தாழ்த்தப்பட்டவர்க ளின் பெயரால் நூற்றுக்கணக்கான அமைப்புகள் உள்ளன. அவை பிழைப் புவாத, ஆளும் வர்க்க (மேல் சமூக)க் கைக்கூலிகளால்தலைமைத்தாங்கப்படு கின்றன. இந்த அமைப்புகளின் செயல் பாடுகளை சுட்டிக் காட்டி, ''ஆகவே, தாழ்த்தப்பட்டவர் விடுதலைக்கான போராட்டங்களில் அவற்றை நம்பிக் கூட்டுச் சேர முடியாது என்று கருதுகி றோம். ஆனால் மேற்கண்ட அமைப்புக ளின் போக்குகள் - நடைமுறைகளுக்கு மாறாக தாழ்த்தப்பட்ட மக்களைத் திரட்டி, களத்தில் இறங்கி அரசியல், சமூக ஒடுக்குமுறைக்கு எதிராகப் போராட உறுதி பூண்டு தலித் சிறுத்தை கள் இயக்கம், இம்மானுவேல் பேரவை போன்ற சில புதிய அமைப்புகள் தோன் றியுள்ளன. இத்தகைய நடைமுறையில் உறுதியோடிருக்கும் பட்சத்தில் இப் புதிய அமைப்புகளை ஜனநாயக சக்தி களாகக் கருதி நேர்மறையில் அணுகி போராட்டங்களில் ஐக்கியப்படுவது தான் சரியானது என்று கருதுகிறோம்'' என்று எழுதினோம். (பு.ஜ. 1993 ஜூலை 1-15 இதழ் பக்.25).

ஆக, திருமாவளவன் சித்தரிப்ப தைப் போன்று கண்ணை மூடிக் கொண்டு யாரையும் எதிர்ப்பது, மற்றவர் களைக் குறைசொல்லியே தன்னை வளர்த்துக்கொள்ளுவது என்பது பு.ஜ.வி னரிடம் எப்போதும் கிடையாது என்பது தான் உண்மை.

இன்னுமொரு சான்றாகப் பாருங் கள். அதே ஆண்டு செப்டம்பரில் பு.ஜ.விடம் ஒரு கேள்வி. ''டி.பி.ஐ. திருமாவளவன், ஒட்டு மொத்தமாக அம்பேத்கர் மக்கள் இயக்கத்தினை வழி நடத்தும் தலைவர்களை சோரம் போகிற வர்களெனச் சாடும்போது - நீங்களும் உங்கள் பங்கிற்கு தலித் இயக்கங்கள், அமைப்புகளின் 'குறியீட்டுத் தலை வன்'களை, வார்த்தை அம்புகளால் துளைத்தெடுப்பது ஏனோ?''

இந்தக் கேள்விக்கு பு.ஜ.வின் பதில் இதுதான், ''திருமாவளவன் சாடுவதும், நாங்கள் வார்த்தை அம்புகளால் துளைத் தெடுப்பதும் உண்மையா, இல்லையா என்று பாருங்கள்! 'ஐயோ தலைவர்க ளைப் பற்றி இப்படிக் குறைகூறுகிறார் களே' என்று உணர்ச்சிவசப்படாதீர்கள். அவர்களில் பலர் காரியவாத, பிழைப்பு வாதிகளாக அரசு அதிகாரத் திண்ணை யில் காத்துக் கிடக்கிறார்கள்; ஓட்டுக் கட் சிகளுக்கு வால் பிடிக்கிறார்கள் என்பது மட்டுமல்ல, சர்வதேச கிரிமினல் கும்ப லின் பிரதிநிதியான சுப்பிரமணிய சுவாமி, ஆர்.எஸ்.எஸ். - இந்து முன் னணி ஆகிய பார்ப்பனக் கும்பலுடனும் கூடக்கைகோர்த்துக் கொண்டு தாழ்த்தப் பட்ட மக்களுக்குத் துரோகமிழைக்கின் றனர் என்பது உண்மை இல்லையா? அதோடு தாழ்த்தப்பட்ட மக்களுக்கு விழிப்புணர்வூட்டி அன்றாடம் இவர்க ளுக்கு இழைக்கப்படும் கொடுமைக ளுக்கு எதிராகக் களத்தில் நின்று போரா டுபவை புரட்சிகர அமைப்புகள் தாம் என்பதும் உண்மை இல்லையா?'' (பு.ஜ. 1993, 1-15 செப். பக். 17)

இன்று திருமாவளவனை விமர்சித்த தற்காக புதிய ஜன நாயகம் அமைப் பின் மீது பாயும் அவரது ஆதர வாளர்களும், ஏன் அவருமே அன்று என்ன செய்தார் கள் என்பதற்கு இதற்கு மேல் என்ன ஆதாரம் வேண்டும்? அன்று ''தலித்'' தலைவர்கள் என்று உரிமை பாராட்டியவர் களை அவர் சாட வில்லையா? அன்று திருமா வளவன் சாடுவ தற்குரிய என்ன வேலையை அந் தத் ''தலித்'' தலை வர்கள் செய்தார் களோ அதேவேலையைத்தான் இன்று திருமாவளவன் செய்கிறார்! அதனால், இவரையும் இவரது பாணியிலேயே மற் றவர்கள் (பு.ஜ. வினர்) சாடத்தான் செய் வார்கள்.



பதவி கொடுத்தால் கருணாநிதியுடன் குழையும் திருமாவளவன், இல்லை என்றதும் எகிறுகிறார். இதுதான் தலித் விடுதலையா?

அன்று திருமாவளவன் செய்த காரி யத்தைத்தான் அன்றும் இன்றும் பு.ஜ. செய்கிறது. அன்று பு.ஜ. செய்த காரியம் அவருக்கு இனித்தது, குற்றமாகப்பட வில்லை. ஆனால், அதே காரியத்தை இன்று, அதுவும் இவருக்குப் பொருத்தி எழுதினால் மட்டும் கசக்கிறதா? அன்று திருமாவளவனின் நிலையை ஆதரித்த தும், இன்று எதிர்ப்பதும் பு.ஜ.வின் குற்ற மல்ல; தன் நிலையை மாற்றிக் கொண் டது திருமாவளவன்தான்! பு.ஜ. அல்ல. ஆகவே, திருமாவளவனை மட்டுமல்ல, வேறு யாரையும் பு.ஜ. கண்ணை மூடிக் கொண்டு எப்போதும் எதிர்ப்பது


படிப்பகம்

மில்லை; ஆதரிப்பதுமில்லை.

தாழ்த்தப்பட்ட மக்களின் பெயரால் ஏற்கெனவே இருந்த ''தலித்'' அமைப்புகளுக்கு மாறாக, தாழ்த்தப்பட்ட மக்களைத் திரட்டி, களத்தில் இறங்கி அரசியல், சமூக ஒடுக்குமுறைகளுக்கு எதிராகப் போராடும் உறுதியைக் காட்டிய வரை விடுதலைச் சிறுத்தைகள் போன்ற அமைப்புகளை ஜனநாயக சக்திகளாகக் கருதி, நேர்மறையில் அணுகி, போராட்டங்களில் ஐக்கியப்படுவது என்பதுதான் பு.ஜ. அமைப்பின் நிலைப்பாடாக இருந்தது.

ஆனால், திருமாவளவன் போன்றவர்கள் இரண்டு வேலைகளைச் செய்து வந்தார்கள். ஏகாதிபத்தியத் தன்னார்வக் குழுக்களால் வழிநடத்தப்படும் பின் நவீனத்துவம் போன்ற கழிசடைப் பண்பாடு மற்றும் அரசியல் சக்திகளுடன் இணைந்து, தமது தலித் அரசியல் - சித்தாந்தம், திட்டம் மற்றும் கொள்கை வகுப்பில் ஈடுபட்டனர். அடுத்து, தாழ்த்தப்பட்ட மக்களின் ஏக போகப் பிரதிநிதிகளாகத் தங்களைப் பிரகடனப்படுத்திக் கொண்டனர். (அதிலும் வெவ்வேறு உள்சாதிப் பிரிவுகளுக்கு வெவ்வேறு அமைப்புகள் தாமே பிரதிநிதிகள் என்று ஏற்படுத்திக் கொண்டனர்.) இருந்தபோதும் மார்க்சிய - லெனினிய புரட்சிகர அமைப்புகள்தாம் தாழ்த்தப்பட்ட மக்களின் விடுதலைக்குப் போர்க்குணத்துடனும் சமரசமின்றியும் போராடுபவை என்று அனுபவ ரீதியாகக் கண்டு கொண்டு தாழ்த்தப்பட்ட இளைஞர்கள் பெரும் எண்ணிக்கையில் இணைந்தனர். இந்த உண்மையை செரித்துக் கொள்ள மறுத்த திருமாவளவன் போன்றவர்கள், இந்தப் போக்கைத் தடுக்கும் கேடான எண்ணத்துக்கு ஆட்பட்டு, மார்க்சிய - லெனினியப் புரட்சி அமைப்புகளுக்கு எதிராக அவதூறுகளைப் பரப்பி, அந்நியப்பட்டுப் போயினர்.

இவ்விரு தவறான அணுகுமுறைகளின் தொடர்ச்சியாக, நாடாளுமன்ற - சட்டமன்றத் தேர்தல் புறக்கணிப்பு என்ற நிலையிலிருந்து மாறி, ஓட்டுக்கட்சி அரசியலில் குதித்து, திருமாவளவனும் கிருஷ்ணசாமியும் போட்டி போட்டுக் கொண்டு சந்தர்ப்பவாத சாக்கடையில் மூழ்கித் திளைத்தனர். ஓட்டுக் கட்சி அரசியலில் கபிஸ்தலம் பண்ணையார் மூப்பனார் முதல் காங்கிரசின் சோனியா வரை தமது வழிகாட்டும் அணித் தலைமையாக ஏற்றனர்.

கொடியங்குளம் கொடுமைகளில் இருந்து தென் மாவட்டங்களில் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு எதிரான சாதி வன்முறை வெறியாட்டங்களில் முக்குலத்து ஆதிக்க சாதியினருக்கு நேரடி முழு ஆதரவு கொடுத்தது, ஜெயலலிதா - சசிகலா கும்பல். நெல்லை தாமிரபரணி கொலை வெறியாட்டத்துக்கு காரண கர்த்தாவாகவும், மேலவளவு படுகொலைகளுக்குப் பார்வையாளராகவும் இருந்தது, கருணாநிதியின் அரசு. ஆனால், இவ்விருவருடனும் மாறிமாறி தேர்தல் கூட்டுகளை அமைத்து, மேற்கண்ட குற்றவாளிகளுடன் கூடிக் குலாவி துரோகமிழைத்தனர் திருமாவளவனும் கிருஷ்ணசாமியும். இவர்களின் இப்படிப்பட்ட நடத்தைகள்தாம் அவர்களுக்கு எதிரான புதிய ஜனநாயகம் அமைப்பின் கடுமையான விமர்சனங்களுக்குக் காரணமாக அமைந்தனவே தவிர, வேறெதுவும் இல்லை என்பது அரசியல் வரலாறு அறிந்தவர்களுக்குத் தெரியும்.

இந்த உண்மையை மூடி மறைத்துவிட்டு திருமாவளவன், கிருஷ்ணசாமி முதலானவர்களுடன் சேர்ந்து கொண்டுள்ள சில ஓட்டுண்ணிகள் பு.ஜ. மீது பாய்கிறார்கள்.

தலித்துகள் மீதான ஊஞ்சனை, மேலவளவு, புளியங்குடி என்று பல இடங்களில் தொடரும் படுகொலைகள்; தாமிரபரணி, விழுப்புரம், பரமக்குடி, செங்கல்பட்டு என்று பல இடங்களில் தொடரும் துப்பாக்கிச் சூடுகள் - போலீசு படுகொலைகள்; திண்ணியம், கவுண்டன்பட்டி, ஊரப்பனூர் என்று பல இடங்களில் இழிவுபடுத்துதல்களுக்கு எதிராக மார்க்சிய - லெனினிய இயக்கங்கள் ''கிழித்ததுதான்'' என்ன? ''புடுங்கியதுதான்'' என்ன? என்று ஆத்திரத்தோடு கேட்கிறார்கள்.

இவற்றுக்கெல்லாம் நக்சல்பாரி இடிமுழக்கத்தில், புரட்சியில்தான் எல்லாப் பிரச்சினையும் தீரும் என்று சவடால் அடித்தோமாம்! புரட்சிக்காரர்கள் அதிமேதாவி நாய்போல இன்றும் குறைத்துக் கொண்டிருக்கிறோமாம்! கொடியங்குளம் கலவரம், தாமிரபரணி படுகொலைகளை நிகழ்த்திய அரச பயங்கரவாதங்களைக் கண்டிக்கவும், சாதி வெறியர்களைத் தண்டிக்கவும் துப்பில்லாத 'நக்சல்பாரிக் கும்பல்' 'பார்ப்பன பயங்கரவாத' மாநாடுகளை நடத்துகின்றனவாம்! பாப்பாபட்டி, கீரிப்பட்டி பகுதிகளில் நடந்த சாதி வெறியாட்டங்களைக் கண்டும் ஒன்றும் புடுங்க முடியாத இந்த 'புரட்சிக்காரர்கள்' தமிழிசை விழாக்களை நடத்தி ஆனந்தக் கூத்தாடுகிறார்களாம்; தாங்களும் 'நக்சல்பாரிகள்' என்று வெட்கமில்லாமல் ஊளையிடுகிறார்களாம். சேரிகளில் விடுதலைச் சிறுத்தைகளின் கொடிகள் ஏற்றப்பட்ட பிறகு, புரட்சி பேசி பொறுக்கித் தின்ற கும்பல் விரட்டப்பட்டனவாம், இவர்கள் பிழைப்பில் மண் விழுந்தனவாம். இந்தக் கோபமும், பொச்சரிப்பும் காரணமாகத்தான் விடுதலைச் சிறுத்தைகள் மீதும் திருமாவளவன் மீதும் பாய்ந்து விமர்சனம் என்கிற பெயரில் அவதூறு செய்கிறோமாம்! - இப்படிப் போகிறது அந்த ஓட்டுண்ணிகளின் சித்தரிப்பு.

இந்த ஓட்டுண்ணிகள் இங்கே பட்டியலிடும் இந்த விவகாரங்களில் ம.க.இ.க. போன்ற புரட்சிகர அமைப்புகள் என்ன செய்தன, புதிய ஜனநாயகம், புதிய கலாச்சாரம் ஆகிய புரட்சிகர ஏடுகள் என்ன எழுதின என்பதை நாடே அறியும். இப்படிப்பட்ட விவகாரங்களில் ''தலித்'' அமைப்புகள் ஆயிரக்கணக்கில், இலட்சக்கணக்கில் தாழ்த்தப்பட்டவர்



இந்துமதவெறி பாசிஸ்டுகளின் அரசியல் தரகன் ஜார்ஜ் பெர்ணாண்டசுடன் கைகோர்த்துக் கொண்டு சேலத்தில் இந்துத்துவப் பண்பாட்டு எதிர்ப்பு மாநாடு நடத்தும் திருமாவளவனின் துணிச்சலான சந்தர்ப்பவாதத்தை பாராட்ட முடியுமா?

www.padippakam.com

களை மட்டும் திரட்டிப் போராடுவதை விட, சில ஆயிரக்கணக்கில் கூட அல்ல, சில நூற்றுக்கணக்கில் தாழ்த்தப்பட்ட மக்களோடு, பிற ''சாதிகளைச் சேர்ந்த'' மக்களைத் திரட்டி புரட்சிகர இயக்கங்கள் போராடுவது மிகப் பெரிய, மிகமிக அவசியமான பணி என்பதைத் தாழ்த்தப்பட்ட மக்களின் எதிரிகளும் துரோகிகளும் மட்டுமே அங்கீகரிக்கமாட்டார்கள்.

ஆதிக்க சாதியில் பிறந்தவரேயானாலும் தாம் பிறந்த சாதியினர், தாழ்த்தப்பட்ட மக்களை அடக்கி ஒடுக்குவது குறித்து வெட்கப்பட்டு, குற்ற உணர்வும் ஆத்திரமும் கொண்டு, அந்த இழி செயலுக்கு எதிராகத் தாழ்த்தப்பட்ட மக்களுடன் தோளோடுதோள் சேர்ந்து போராடுவதுதான் சாதியத்தை வேரோடு பிடுங்கி எறிவதற்கு மிகவும் அவசியமான வழிவகையாக உள்ளது. இத்தகைய சூழ்நிலையை இதுவரை எந்தவொரு கிராமத்திலும், பகுதியிலும் ''தலித்'' தலைவர்கள் ஏற்படுத்தியிருக்கிறார்களா? நக்சல்பாரி இயக்கம் வளர்ந்துள்ள, வேரூன்றியுள்ள கிராமங்கள் மற்றும் பகுதிகளில் மட்டுமே இத்தகைய சூழ்நிலை உள்ளது என்பதை இந்த ''தலித்'' சவடால் தலைவர்கள் மறுக்க முடியுமா?

முந்தைய தலைமுறை ''தலித்'' தலைவர்களைப் போல இல்லாமல், திருமாவளவன், கிருஷ்ணசாமி போன்ற புதுத் ''தலித்'' தலைவர்கள், தத்தமது உட்பிரிவு சாதி, மக்கள் மீதான ஒடுக்குமுறைகள் நிகழும்போது தலையீடு செய்கிறார்கள் என்பது உண்மைதான்.

இப்படித் தலையீடு செய்து அவர்கள் ''கிழித்ததையும், புடுங்கியதையும்'' என்ன செய்கிறார்கள் என்பதையும் அவசியம் கவனிக்க வேண்டியதாக உள்ளது! கிழித்ததைத் தமக்குப் படியளக்கும் தன்னார்வக் குழுக்கள் மூலம் அறிக்கையாக எழுதி அனுப்புகிறார்கள். ''புடுங்கியதை'' - அதாவது தமது அமைப்புகளில் திரட்டிய தாழ்த்தப்பட்ட மக்கள் சக்தியை ஓட்டு வங்கிகளாக மாற்றி ஜெயலலிதாவின் அல்லது கருணாநிதியின் காலடியில் சமர்ப்பிக்கிறார்கள். இந்த சிறு தெய்வங்கள் மூலமாக, காங்கிரசு அல்லது பா.ஜ.க. ஆகிய மூல தெய்வங்களுக்குப் பலிகடாவாக்குகிறார்கள்.

அதாவது, உள்ளூர் ஆதிக்க சாதிகளுக்கு எதிராக இரத்தம் சிந்தியும், கம்யூனிசப் புரட்சியாளர்களுக்கு எதிராக அவதூறு பேசியும் திரட்டப்படும் ''தலித்'' சக்தி, இறுதியில் எதற்குப் பயன்படுத்தப்படுகிறது? தேசந்தழுவிய அல்லது நாடு தழுவிய சாதி, மதவெறி சக்திகளுக்கு பலியிடப்படுகிறது. ''தடா'' பெரியசாமியும், பா.ம.க. பொன்னுசாமியும் நேரடியாகச் செய்யும் துரோகத்தை இந்தத் ''தலித்'' தலைவர்கள் மறைமுகமாக - தமது சொந்த அடையாளத்துடன் செய்கிறார்கள்.

– தொடரும்

# சிரிப்பாய் சிரிக்கும் சிவகங்கை சி.பி.எம்.

இந்தியாவைக் கொள்ளையடிப்பதற்கான 14-வது தேர்தல் எனும் வியாபாரத்தில் மே.வங்கத்திலும் கேரளாவிலும் காங்கிரசோடு மல்லுக்கட்டிக்கொண்டு மோதிய சி.பி.எம், தமிழகம் உள்ளிட்ட பிற மாநிலங்களில் காங்கிரசோடு கைகோர்த்துக் கொண்டு பல்லிளிக்கிறது. தமிழகத்தில் பாசிச பாஜக - ஜெயா கூட்டணியை எதிர்த்து மத நல்லிணக்கத்தையே தனது முழக்கமாக்கிக் கொண்டு தனது பச்சோந்தித்தனத்தை மூடிமறைக்கப் பார்க்கிறது.

நாடாளுமன்றத் தேர்தலுக்கு முன் சிவகங்கையில் தி.மு.க - காங்கிரஸ் கூட்டணியின் செயல்வீரர்கள்(?) கூட்டம் நடைபெற்றது. அதில் பேசிய சி.பி.எம் - இன் மாவட்டச் செயலாளர், தனக்கு முன்னர் பேசியவர்கள், மகளிர் சுய உதவிக்குழுக்களுக்கு எதிரான கருத்தைக் கொண்டிருப்பதற்கு வருத்தம் தெரிவித்தார். மகளிர் சுய உதவிக் குழுக்கள் மீது பரிவையும் பாசத்தையும் கொட்டினார். ''படமாத்தூரில் சக்தி சுகர்ஸ் - கோகோ கோலா கூட்டுக் கொள்ளை - குடிநீர் கொள்ளையை எதிர்த்து நடந்த போராட்டத்தில் சுமார் 20,000 மகளிர் சுய உதவிக் குழுக்களைச் சேர்ந்த பெண்களைத் திரட்டியிருந்தோம். எனவே, அவர்களைச் சரியாகப் பயன்படுத்தி நாம் ஓட்டுக்களை அறுவடை செய்ய முடியும்'' என்று நம்பிக்கையூட்டினார்.

இதிலே வேடிக்கை என்னவென்றால், கோக் ஆலைக்கு எதிரான போராட்டத்தில் 20,000 பெண்களை சி.பி.எம். திரட்டவில்லை. அப்பெண்களைத் திரட்டியது திருப்புவனத்தில் உள்ள ''சாண்ட்'' (குஅமீர) எனப்படும் தன்னார்வ நிறுவனம்தான். இப்போதெல்லாம் வெளிப்படையாகவே இம்மாதிரியான ஏகாதிபத்தியக் கைக்கூலி நிறுவனங்களோடு சி.பி.எம். கூடிக்குலாவுவதால், கூட்டத்திற்கு ஆட்களைத் திரட்டிவரும் வேலையை இத்தன்னார்வ நிறுவனங்கள்தான் காண்டிராக்ட் எடுத்துள்ளன.

இப்படி கூலிக்கு அழைத்து வரப்படுவோரைக் கொண்டு ஓட்டுக்களை அறுவடை செய்ய முடியும் என்கிறார், சி.பி.எம். மா.செ. இந்த கேடுகெட்ட செயலுக்கு அவர் சொல்லும் சித்தாந்த விளக்கம், ''பெண்களை அரசியல் படுத்துவது.'' இதோடு விட்டாரா? இந்தப் பெண்களை அணிதிரட்டி இனிவரும் காலங்களிலும் கோக் ஆலையை எதிர்த்து சி.பி.எம் போராடும் என்று சூளுரைத்தார்.

சிவகங்கையில் காங்கிரசு - தி.மு.க - சி.பி.எம். கூட்டணியின் வேட்பாளர் ப.சிதம்பரம் காட் - டங்கல் ஒப்பந்தம் மூலமாக, தனியார்மய - தாராளமயக் கொள்கைகளைத் திணித்து நாட்டை பன்னாட்டு நிறுவனங்களின் வேட்டைக்காடாக்கிய களவாணியும் இன்றைய புதிய பிரதமருமான மன்மோகன் சிங்கின் உடன்பிறவா சகோதரர்! உலகவங்கியின் கைக்கூலியான ப.சிதம்பரம், ''தொகுதிக்கு எதுவுமே செய்யவில்லை என்று எதிர்க்கட்சியினர் குற்றம் சாட்டுகிறார்கள். இது தவறு. பொள்ளாச்சி மகாலிங்கத்தின் சக்தி சர்க்கரை ஆலையைக் கொண்டு வந்தது எனது சாதனைதான்'' என்றார். ''அந்நிய மூலதனங்களை சிவகங்கையில் குவித்து சிவகங்கைச் சீமையில் வளம் கொழிக்கப் பாடுபடுவேன்'' என்று உணர்ச்சி பொங்க உறுதியளித்தார்.

இதற்கு சற்று முன்னர்தான், சி.பி.எம். சூரப்புலிகள் சக்தி சர்க்கரை ஆலை - கோக் கூட்டுக் கொள்ளையை எதிர்ப்போம் என்று சவடால் அடித்தனர். ப. சிதம்பரத்தின் கொள்கை அறிவிப்பைக் கேட்ட பின்னர், வாயை மூடிக்கொண்டனர். இது தான் கூட்டணி தர்மம் போலும்! ப. சிதம்பரம் தனது சாதனையாகக் கூறும் சக்தி சர்க்கரை ஆலையானது, கரும்பு விவசாயிகளின் வயிற்றிலடித்து கோடிக்கணக்கில் சுருட்டிக் கொண்டுள்ளதை எதிர்த்து, இதே சி.பி.எம் - சி.பி.ஐ. கட்சியினர்தாம் 2-3 மாதங்களுக்கு ஒரு முறை கண்டன ஆர்பாட்டம் நடத்துகின்றனர். இந்த உண்மைக்கூட தேர்தல் நேரத்தில் சொல்ல முடியாமல் சி.பி.எம். கட்சியினர் வாய்மூடிக்கிடந்தனர். ஓட்டுக்கும் சீட்டுக்கும் உள்ளூரில் மேல்வாயையும் கீழ்வாயையும் மூடிக் கொண்ட இவர்கள்தான், டெல்லிக்குப் போய் நாடாளுமன்றத்தில் தனியார்மய - தாராளமயக் கொள்கையை எதிர்த்துக்கிழிக்கப் போகிறார்களாம்!



படிப்பகம்

www.padippakam.com

12-ஆம் பக்கத் தொடர்ச்சி

அரசியலைப் பிரச்சாரம் செய்து தொழிலாளர்களுக்கு வர்க்க உணர்வூட்டிய இப்பொதுக்கூட்டத்தில் பெருந்திரளான உழைக்கும் மக்கள் கலந்து கொண்டு ஆதரவளித்தனர்.

'போலி ஜனநாயகத் தேர்தலைப் புறக்கணிப்போம்! மக்கள் சர்வாதிகார மன்றங்களைக் கட்டியமைப்போம்!' என்ற முழக்கத்துடன் தஞ்சை நகரிலும் சுற்றுப்புற சிறுநகரங்களிலும் ம.க.இ.க., பு.மா.இ.மு. ஆகிய அமைப்புகள் தெருமுனைக் கூட்டங்கள் நடத்தின. மே நாளன்று காலை 25 தோழர்கள் செஞ்சட்டை அணிந்து முழக்க அட்டைகள் ஏந்தி சைக்கிள் ஊர்வலம் நடத்தியதோடு ஆங்காங்கே தெருமுனைக் கூட்டங்கள் மூலம் தேர்தல் புறக்கணிப்புப் பிரச்சாரத்தை மக்களின் உற்சாகமான வரவேற்புடன் நடத்தின. பின்னர் மாலையில் நடந்த பேரணியும் அதைத் தொடர்ந்து நடந்த பொதுக்கூட்டத்தில் இப்புரட்சிகர அமைப்புத் தோழர்களது குடும்பங்களைச் சேர்ந்த சிறுவர் - சிறுமியர் நடத்திய ''பாசிசப் பேயோட்டல்'' எனும் கலை நிகழ்சியும் சிறப்பானதொரு வரவேற்பைப் பெற்றன.

மே 7-ஆம் நாளன்று தஞ்சை வல்லத்தில் நடைபெற்ற தேர்தல் புறக்கணிப்புப் பொதுக்கூட்டம், ஓட்டுக் கட்சிகளின் யோக்கியதையையும், நாடாளுமன்ற ஜனநாயக ஆட்சி முறையின் மோசடியையும் திரைகிழித்துக் காட்டுவதாக அமைந்தது. இதுதவிர, தேர்தல் புறக்கணிப்பு அரசியல் விளக்கத் துண்டுப் பிரசுரங்கள் நகரெங்கும் பரவலாக மக்களிடம் விநியோகிக்கப்பட்டதோடு, கூர்மையான முழக்கங்களைக் கொண்ட சுவரொட்டிகள் ஒட்டப்பட்டன.

சென்னையில் துண்டுப் பிரசுரங்கள், சுவரொட்டிகள் மூலம் தேர்தல் புறக்கணிப்புப் பிரச்சாரம் மேற்கொள்ளப்பட்டதோடு, வீடு




சென்னை - மே நாள் பொதுக்கூட்டத்தில் இளந்தோழர்களின் புரட்சிகர கலைநிகழ்ச்சி.

வீடாகவும் பிரச்சாரம் செய்யப்பட்டது. அதன் தொடர்ச்சியாக ஆவடி ராமரத்னா தியேட்டர் அருகிலிருந்து மே நாள் பேரணியும், காமராசர் நகரில் பொதுக் கூட்டமும் ம.க.இ.க., பு.ஜ.தொ.மு., பு.மா.இ.மு. ஆகிய அமைப்புகளால் நடத்தப்பட்டன. பொதுக் கூட்டத்தில் இளந்தோழர்கள் நடத்திய புரட்சிகரகலைநிகழ்ச்சி, பகுதிவாழ் மக்களைக் கவர்ந்து ஈர்த்து, தேர்தல் புறக்கணிப்பு அரசியலை விதைத்தது.

இவை தவிர இப் புரட்சிகர அமைப்புகள் இணைந்து கோவில்பட்டி, விளாத்திகுளம், சிவகாசி, விருதுநகர் ஆகிய இடங்களில் நடத்திய பொதுக்கூட்டங்களும் ம.க.இ.க. மையக் கலைக்குழுவின் புரட்சிகர கலை நிகழ்ச்சியும் இப்பகுதிவாழ் உழைக்கும் மக்களிடம் பேராதரவு பெற்றன. இப்பகுதிகளிலுள்ள இடது, வலது கம்யூனிஸ்டு கட்சிகளைச் சேர்ந்த மூத்த தோழர்கள் பலர், ''நீங்கள்தான் உண்மையான கம்யூனிஸ்டுகள்; நமது நாட்டில் புரட்சி வராதா என்று ஏங்கிக் கொண்டிருந்த எங்களுக்கு உங்கள் செயல்பாட்டினால் புதிய நம்பிக்கை வந்துள்ளது'' என்று நா தழுதழுக்கக் கட்டியணைத்து ஆதரித்தனர்.

ஓட்டுப் பொறுக்கிகளையும் நாடாளுமன்ற போலி ஜனநாயகத்தின் மோசடிகளையும் திரைகிழித்து, புரட்சிகர அரசியலை முன்வைத்து தமிழகமெங்கும் சுழன்று வீசிய தேர்தல் புறக்கணிப்பு அரசியல் பிரச்சார இயக்கம், இப்புரட்சிகர அமைப்புகள் மட்டுமே மறுகாலனியாதிக்கத்துக்கும் பார்ப்பன மதவெறிக்கும் எதிராகப் போராடவல்ல உண்மையான மக்கள் இயக்கங்கள்; அதன் தலைமையில் மட்டுமே விடுதலையைச் சாதிக்க முடியும் என்ற நம்பிக்கையை உழைக்கும் மக்களிடம் விதைத்துள்ளது. ●

''கள்ள ஓட்டைத் தடுக்க வக்கில்லை.... காசு கொடுப்பதை தடுக்கவும் வக்கில்லை.. பாப்பாப்பட்டி, கீரிப்பட்டியில் தேர்தல் நடத்த வக்கில்லை... தேர்தல் புறக்கணிப்புப் பிரச்சாரத்திற்கு மட்டும் தடையா?''

# தேர்தல் ஆணைய அலுவலகத்தின் முன் ஆர்ப்பாட்டம்

''தேர்தல் பாதை திருடர் பாதை! ஓட்டுப் போடாதே! புரட்சி செய்!!'' என்ற முழக்கத்தின்கீழ் சென்னை மற்றும் வேலூர் மாவட்டங்களைச் சேர்ந்த மக்கள் கலை இலக்கியக் கழகம், புரட்சிகர மாணவர்-இளைஞர் முன்னணி மற்றும் புதிய ஜனநாயகத் தொழிலாளர் முன்னணி தோழர்கள் 8.5.04 அன்று சென்னையில் தேர்தல் ஆணைய அலுவலகத்தின் முன் ஆர்ப்பாட்டம் நடத்தினர்.

''கள்ள ஓட்டைத் தடுக்க வக்கில்லை.... காசு கொடுப்பதை தடுக்கவும் வக்கில்லை.. பாப்பாப்பட்டி, கீரிப்பட்டியில் தேர்தல் நடத்த வக்கில்லை... சாதி- மதம் சொல்லி ஓட்டுக் கேட்க தடையில்லை... தேர்தல் புறக்கணிப்புப் பிரச்சாரத்திற்கு மட்டும் தடையா?'' என்று முழங்கியபடி பெரும் திரளாக தோழர்கள் ஆர்ப்பாட்டத்தில் திரண்டனர்.

சென்னை - வெளியூர் போக்குவரத்தின் பிரதான சாலையான வடபழனி 100 அடி சாலையில் நடந்த இந்த ஆர்ப்பாட்டம் மக்கள் மத்தியில் பெரும் வரவேற்பைப் பெற்றது. போலீசு கும்பலின் கைதை எதிர்பார்த்து தோழர்களை இரண்டு குழுவாக பிரிந்து சென்றனர். முதல் குழு கைது செய்யப்பட்டவுடன், இரண்டாவது குழு மீண்டும் ஆர்ப்பாட்டம் நடத்தியது, மக்கள் மத்தியில் பெரும் வீச்சை ஏற்படுத்தியது.

தோழர்கள் தங்கள் பிரசசாரத்தில், ''தேர்தலில் போட்டியிடும் கிரிமினல்கள், ரௌடிகள், சாதி-மத வெறியர்கள், கோடீஸ்வரர்களின் வாரிசுகள் பற்றியும் தேர்தலைக் கண்காணிப்பதாகக் கூறும் தேர்தல் அதிகாரிகளின் பொறுக்கித்தனம், ஊழல், ஊதாரித்தனங்களையும் மறுபுறம் மக்கள் அடிப்படை வசதிகள் கூட இல்லாமல் குடிநீருக்கு படும் அவலங்களையும் எடுத்துரைத்தனர்.

ஆர்ப்பாட்டத்தின் போது, 16 முன்னணி தோழர்களைக் கைது செய்த போலீசு பொய் வழக்குகளின் கீழ் சென்னை மத்திய சிறையில் அடைத்தது. 151, 153அ, 71(அ), 71(1) ஆகிய குற்றப் பிரிவுகளின்கீழ் தோழர்கள், விசாரணை கைதிகளாக 15 நாட்கள் சிறை வைக்கப்பட்டனர்.

ஓட்டுப் பொறுக்கிக் கட்சிகளின் எதிரணி தலைவர்கள் தேர்தல் கமிசனின் முறைகேடுகளைக் கண்டு புலம்பிய போது, புரட்சிகர சக்திகள் செயலில் இறங்கி அதன் அலுவலகத்திலேயே ஆர்ப்பாட்டம் நடத்தியது, புரட்சிகர அரசியலின் மேலாண்மையை நிரூபித்தது. ●




படிப்பகம்

அட்டூழியங்களைச் செய்த 'இறால் பண்ணை ஜாம்பவான்' எனப்படும் எஸ்.ஏ.டி அண்ணாமலை, ரவுடி ராசேந்திரன் ஆகியோர் மீது முத்துப்பேட்டை போலீசு நிலையத்தில் மீனவர்கள் புகார் கொடுத்த போதிலும், அது ஏற்றுக் கொள்ளப்படவில்லை. அந்த அளவுக்கு இறால்பண்ணை முதலாளிகளின் பண பலமும் கொட்டமும் அட்டூழியங்களும் கொடிகட்டிப் பறக்கிறது.

மூன்றாம் தம்பிரான் கோயில் பகுதியில், முந்தைய காங்கிரசு ஆட்சிக் காலத்தில், மீனவர்களுக்கு வழங்கப்பட்ட பட்டா நிலங்களை மோசடி செய்து, இறால்பண்ணை மற்றும் ரசாயன உப்பள முதலாளிகள் தங்கள் பெயருக்கோ, பினாமிகள் பெயருக்கோ மாற்றிக் கொண்டுவிட்டனர். பட்டாதாரர்களுக்கு சல்லிக்காசுகூட கொடுக்காமல் ஏய்த்து மிரட்டி வருகின்றனர்.

மொத்தத்தில், திருத்துறைப்பூண்டியிலிருந்து முத்துப்பேட்டை வரையிலான கடலோரக் கிராமங்கள் அனைத்தும் இறால் பண்ணைகளாலும், இரசாயன உப்பளங்களாலும் நாசமாக்கப்பட்டு, இப்பகுதிவாழ் மீனவர்கள் - விவசாயிகளின் வாழ்வுரிமையே பறிக்கப்பட்டு வருகிறது. விவசாயம் செய்ய முடியாமல், கடலில் மீன் பிடிக்க முடியாமல், குளம் - குட்டைகள் உப்பு நீராகி கால்நடைகளுக்குக்கூட தண்ணீர் இல்லாமல், முதலாளிகளின் அட்டூழியங்களால் வாழவும் முடியாமல் இப்பகுதிவாழ் விவசாயிகளும் மீனவர்களும் கொந்தளித்துக் கொண்டிருக்கிறார்கள்.

ஆட்சியாளர்களின் தனியார்மயம் - தாராளமயம் உலகமயம் எனும் புதிய பொருளாதாரக் கொள்கையால் புதுப் பணக்கார முதலைகளின் வேட்டைக் காடாக நமது நாடு மாறியுள்ளதற்கு தில்லை விளாகம் இன்னுமொரு சான்று. தமது நிலத்தையும் நீரையும் காற்றையும் நஞ்சாக்கி வாழ்வுரிமையைப் பறிக்கும் இரசாயன உப்பளங்கள், இறால் பண்ணைகளுக்கு எதிராக ஏற்கெனவே சிறியதும் பெரியதுமாக பல போராட்டங்களை நடத்திய தில்லை விளாக மக்கள், குமுறும் எரிமலையாக தேர்தல் நேரத்தில் கிளர்ந்தெழுந்து தேர்தல் புறக்கணிப்பு, முற்றுகைப்போராட்டம், இறால் பண்ணை - இரசாயன உப்பள அழிப்பு போராட்டங்களில் இறங்கியுள்ளனர். தமது போராட்டமும், போராட்டத்தின் நியாயமும் நாட்டு மக்களுக்குத் தெரிய வேண்டும் என்ற நோக்கத்தோடு, இது பற்றி பத்திரிகைகள் - தொலைக் காட்சிகளுக்கு முன்னரே தகவல் கொடுத்து விட்டுத்தான் இப்போராட்டத்தை திட்டமிட்டு நடத்தியுள்ளனர்.



போராட்டத்தை ஒடுக்கி முன்னணியாளர்களைக் கைது செய்து சிறையிலடைத்துள்ளதோடு, இன்னும் பலர் மீது பொய் வழக்கு சோடித்து இரவு பகலாக போலீசார் தேடுதல் வேட்டை நடத்தி வருகின்றனர். இதனால் பலர் ஊருக்குள் வரமுடியாமல், அருகிலுள்ள கிராமங்களில் தங்கியுள்ளனர். கைதானவர்களில் பள்ளிக் கூட சிறுவர்களும், முதியவர்களும் உள்ளனர். பல குடும்பங்கள் விவசாயக் கூலிகளாக இருப்பதால், குடும்பத் தலைவர்கள் சிறையிடப்பட்டுள்ள நிலையில் சோற்றுக்கே வழியின்றி பரிதவிக்கின்றன. பல்லாயிரக்கணக்கான விவசாயிகளின் - மீனவர்களின் வாழ்வுரிமையைப் பறிக்கும் இறால் பண்ணைகளையும் இரசாயன உப்பளங்களையும் தடுக்க முன்வராத அதிகார வர்க்கமும் போலீசும் நீதிமன்றமும், நியாயமான போராட்டத்தைத் தொடுத்த மக்களை ஒடுக்குவதில் ஓரணியில் நிற்கின்றன. தேர்தல் நேரத்தில் இப்போராட்டம் நடந்த போதிலும், எந்தவொரு ஓட்டுக்கட்சியும் இந்தக் கிராமத்தை எட்டிக்கூட பார்க்க முன்வரவில்லை; ஆறுதல் கூறவோ, பிரச்சினைக்குத் தீர்வு காண முற்படவோ அவை அக்கறை காட்டவுமில்லை. ஓட்டுக் கட்சிகளின் யோக்கியதை உரசிப் பார்க்க, தில்லை விளாக மக்களுக்கு இப்போராட்டமே ஒரு உரைகல்லாக அமைந்துள்ளது.

இது மட்டுமின்றி, இப்போராட்டத்தால் இறால் பண்ணை முதலாளிகளுக்கு ஏற்பட்ட இழப்பு பற்றி மூக்கால் அழுத சன் டி.வி மற்றும் பிற பத்திரிகைகளின் யோக்கியதையைப் புரிந்து கொள்ளவும் இப்போராட்டம் ஒரு வாய்ப்பாக அமைந்தது. இப்பகுதியில் இயங்கிவரும் தன்னார்வ நிறுவனங்கள் மீது இறால் பண்ணை முதலாளிகள் குற்றம்சாட்டியதும், ''எந்த விதத்திலும் நாங்கள் மக்களைப் போராடத் தூண்டி விடுவதேயில்லை'' என்று தன்னார்வ நிறுவனங்களின் கொள்கையைப் போட்டு உடைத்துள்ளார், கடலோர செயல்பாட்டுக் கூட்டமைப்பு எனும் தன்னார்வ நிறுவனத்தின் அமைப்பாளரான ஜேசுரத்தினம்.

போலீசு வேட்டை, கைது, சிறை என அடக்குமுறை ஒருபுறம்; நியாயமான போராட்டத்தை 'கலவரம் - வன்முறை' என்று கொச்சைப்படுத்தி அவதூறு செய்யும் தொலைக்காட்சிகள் - பத்திரிகைகள் மறுபுறம் ; போராட்டத்தைக் கண்டு பீதியடைந்து ஒதுங்கிக் கொள்ளும் ஓட்டுக் கட்சிகள் - தன்னார்வக் குழுக்களின் துரோகத்தனம் இன்னொருபுறம். இத்தனை அநீதிகள் - துயரங்கள் - அடக்குமுறைகள் - இடர்ப்பாடுகள் இருந்த போதிலும் தில்லை விளாக மக்களின் போராட்ட உணர்வு கொஞ்சமும் குறையவில்லை. ''நாங்கள் தொடர்ந்து போராடுவோம்; எங்கள் வாழ்வுரிமையைப் பறிக்கும் இறால் பண்ணைகளை ஒழித்துக் கட்டாதவரை எங்கள் போராட்டம் ஓயாது'' என்று அவர்கள் உறுதியோடு நிற்கிறார்கள்.

ஒன்பதாண்டுகளுக்கு முன்பு - 1995 மே நாளன்று இறால் பண்ணைகளுக்கு எதிரான மாபெரும் போராட்டத்தை விவசாயிகள் விடுதலை முன்னணியும் அதன் தோழமை அமைப்புகளும் சீர்காழியில் தொடங்கி வைத்தன. இறால் பண்ணைகளுக்கும் ஏகாதிபத்தியங்களுக்கும் அதன் கைக்கூலி ஆட்சியாளர்களுக்கும் எதிரான இப்போராட்டத் தீ நாகை, திருவாரூர், கடலூர் மாவட்ட கடலோரக் கிராமங்களில் படிப்படியாகப் பற்றிப் படர்ந்து உழைக்கும் மக்களை உணர்வூட்டியது. இறால் பண்ணைகளுக்கு எதிராக உழைக்கும் மக்கள் தன்னெழுச்சியாகத் திரண்டு சிறியதும் பெரியதுமான போராட்டங்களைத் தொடர்ந்தனர். கடந்த செப்டம்பரில் கடலூர் மாவட்டம் சிதம்பரம் அருகேயுள்ள கிள்ளையில் உழைக்கும் மக்கள் இறால் பண்ணைகளுக்கு எதிராக முன்னுதாரணமிக்க மாபெரும் போராட்டத்தை நடத்தினர். கிள்ளை வழியில் இன்று தில்லை விளாகமும் போர்க்கோலம் பூண்டு நிற்கிறது. கடலோரக் கிராமங்கள் எங்கும் மூண்டெழும் போராட்டப் பேரலையில் இறால்பண்ணைகளும் இரசாயன உப்பளங்களும் அழிக்கப்படும் காலம் வெகுதொலைவில் இல்லை.

**— பு.ஜ. செய்தியாளர்கள்**
**நாகை - திருவாரூர் மாவட்டங்கள்.**

**Owned and Published by R. SHANMUGA RAJ, from Shop No. 110, IInd Floor, 63, N.S.K. Salai, Kodambakkam, Chennai - 600 024 and Printed by him at EZHIL PRINTS, Shop No. 110, IInd Floor, 63, N.S.K. Salai, Kodambakkam, Chennai - 600 024. Editor: R. SHANMUGA RAJ.**

REGISTERED WITH THE REGISTRAR OF NEWS PAPERS FOR INDIA UNDER NO.42648/85
www.padippakam.com
Regn.No.TN/PMG(CCR)/621/03-05

ஓநாய், ஆடுகளின் நண்பனாக இருக்க முடியுமா? முடியும் என்கிறார் காஞ்சி மட சங்கராச்சாரி. ''தாழ்த்தப்பட்டோரின் நலனுக்காக'', தன்னை நிறுவனராகப் போட்டுக் கொண்டு, பி.ஆர்.அம்பேட்கர் மக்கள் சபை என்ற அமைப்பை, பெரிய வாளும் சின்னவாளும் தொடங்கி வைப்பதுதான் இந்தப் படம்.




# இதுதான் இன்றைய இந்தியா

பார்ப்பன ஜெயா மத மாற்றத் தடைச் சட்டத்தைக் கொண்டு வந்த பிறகு, காஞ்சி மடத்துக்குத் தாழ்த்தப்பட்டோர் மீது திடீர் பாசம் பொத்துக் கொண்டு வழியத் தொடங்கியது. பெரியவாளும், சின்னவாளும் காலனிகளில் உள்ள கோயிலுக்குப் போனார்கள்; தீண்டாமை இந்து மதத்தில் இல்லை; நாமெல்லாம் இந்து சகோதரர்கள் என வாய்ச் சவடால் அடித்தார்கள்; அம்பேத்கர் சங்கத்தைத் தொடங்குகிறார்கள் - இப்படி ஆடு நனைகிறதே என ஓநாய் அழுதக் கதைக்கு அநேக உதாரணங்களைச் சொல்லலாம்.




விசுவநாதன் கக்கன், "தடா" பெரியசாமி போன்ற கருங்காலிகளின் மூலமும்; பார்ப்பன பத்திரிகைகள் மூலமும் தாழ்த்தப்பட்டோரை காஞ்சி மடம் ஒதுக்கவில்லை என பிரபலப்படுத்திக் கொள்ளும் இந்தக் காவிக் கும்பல், தாழ்த்தப்பட்டோர் கிராமப்புறங்களில் தீண்டாமையை எதிர்த்துப் போராடும்பொழுது, அதைப் பற்றி வாயைத்திறந்திருக்கிறதா?

இந்தப் படத்தில் இருப்பவர்கள் புதுக்கோட்டை மாவட்டத்தில் உள்ள அமரசிம்மேந்திரபுரம் கிராமத்தைச் சேர்ந்த தாழ்த்தப்பட்டோர். இக்கிராமத்திற்கு அருகில் உள்ள குளக்குடி கிராமத்தில் இருக்கும் வீரப்பெருமாள் பத்திரகாளியம்மன் கோயிலின் பரம்பரை பூசாரி, இத்தாழ்த்தப்பட்டோர்தான். 1994-ஆம் ஆண்டு, இத்தாழ்த்தப்பட்டோர் பறையடிப்பது; இழவு செய்தி சொல்வது போன்ற இழிதொழில்களைச் செய்வதில்லை என முடிவெடுத்தவுடன், குளக்குடி கிராமத்தைச் சேர்ந்த அகமுடையார் சாதிவெறியர்கள் தாழ்த்தப்பட்டோரின் பரம்பரை பூசாரி உரிமையினையும், வழிபாட்டு உரிமையினையும் பறித்துவிட்டனர்.

இதற்கு எதிராக நீதிமன்றத்தில் வழக்கு போட்டு தாழ்த்தப்பட்டோர் வெற்றியடைந்துவிட்ட போதிலும், அரசு நிர்வாகம் சட்டம் - ஒழுங்கைக் காரணமாகக் காட்டி, இவர்கள் கோயிலுக்குள் நுழைவதைத் தடுத்து, தீண்டாமையை நிலைநாட்டியது. அரசு போட்டிருந்த 144 தடையுத்தரவை மீறி, அமரசிம்மேந்திரபுர தாழ்த்தப்பட்டோர் தமிழக மனித உரிமைக் கழக பொதுச் செயலாளர் அரங்க. குணசேகரன் தலைமையில் திரண்டு, தங்களின் வழிபாட்டு உரிமையை நிலைநாட்ட முயன்ற பொழுது, 18 பெண்கள் உட்பட 48 பேர் கைது செய்யப்பட்டனர். 23 நாட்கள் சிறை வாசத்திற்குப் பின் இப்போராளிகளுக்கு நீதிமன்றம் பிணை வழங்கியிருந்தாலும், கடலூரில் தங்கியிருந்து தினமும் போலீசு நிலையத்தில் கையெழுத்துப் போட வேண்டும் என நிபந்தனை விதித்துத் தண்டித்து வருகிறது.

தாழ்த்தப்பட்டோர் தீண்டாமையை எதிர்த்துத் தங்களின் உரிமைகளுக்காகப் போராடும் பொழுது அரசு இயந்திரம் அடக்குமுறையை ஏவி விடுகிறது; இன்னொருபுறமோ, காஞ்சிமட சங்கராச்சாரி, இந்து முன்னணி போன்ற பார்ப்பன - பாசிஸ்டுகள், தாழ்த்தப்பட்டோரை நயவஞ்சகமாகத் தங்களின் பக்கம் இழுத்து, அவர்களின் போராட்ட உணர்வை மழுங்கடிக்க முயலுகின்றனர். உரிமைக்கான வேட்கையை, அதற்கான போராட்டத்தை நயவஞ்சகத்தாலும், ஒடுக்குமுறையாலும் அழித்துவிட முடியாது என்பதை ஆதிக்கக் கும்பலுக்கு நாம் புரிய வைப்போம்!